நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-215 டிச.24-31, 2000 விலை ரூபா 12/-

நாசமாய்ப் போவோமோ?

அன்னைக்கு அரைகுறையாம் அவள் பின்னே சுற்றுகின்ற
கன்னையர்க்கோ கடுமை அதை விடவாம்!- முன்னையிலும்
மோசமாம்! யுத்தப் பேய் முழுமூச்சாய் ஆட்டுதையோ
நாசமாய்ப் போடுவனோ நாம்?

- ஈழமோகம்

அடுத்த இதழ்
ஜனவரி 07இல்

## இந்திய இடையீடு: பேச்சுப் போச்சா?

வவுனியா: குறுநில மன்னர்களின்
கப்பங்களும்
குடியானவர்களின்
துன்பங்களும்!

மலையகம்:
தீர்வில் இடம் எது?

மட்டு-யாழ்:
புலனாய்வுத்துறையினரின்
திருகுதாளங்கள்...

பீற்றர் ஹெய்னும் கதிர்காமரும்...






தமிழில் ஒரு

இவ்வாரம் முதல் சரிநிகர் இணையத்திலும்
sarinihar.com

நன்றி - நூலகத்திட்டம்



# இவ்வாரச் செய்திகள்

## சத்துருக்கொண்டான் படைமுகாம் மீது புலிகள் தாக்குதல்!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக்கொண்டான் சிறிலங்கா படைமுகாம் மீது விடுதலைப்புலிகள் இன்று (19.12.2000) அதிகாலை 1 மணியளவில் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு கடற்படை வீரர் பலியானதுடன் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 5 கி.மீற்றரில் வாவியோரமாக சத்துருக்கொண்டான் சிறிலங்கா படைமுகாம் உள்ளது. அங்கு கடற்படையினரும் உள்ளனர். இவர்கள் வாவியில் ரோந்துக் கடமையில் ஈடுபடுவது வழக்கம்.

இன்று அதிகாலை வாவியூடாகவும் முகாமுக்குப் பின்புறமாகவும் சென்ற புலிகள் மேற்படி முகாம் மீது மோட்டார் தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இதையடுத்துப் படையினரும் பதில் தாக்குதல் மேற்கொண்டனர்.

காயமடைந்த படையினர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் தேடுதல்!

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி, நாவலர் வீதி ஆகிய பகுதிகள் டிச.19 செவ்வாய் அதிகாலை 5 மணிமுதல் 9 மணிவரை சிறிலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின் போது படையினர் வீடுவீடாகச் சென்று சோதனை மேற்கொண்டனர். சிறிலங்கா படையினருடன் பொலிசாரும் பெண் இராணுவத்தினரும் தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வீடுகளில் கூடுதலாகப் பெற்றோல் மண்ணெண்ணெய் வைத்திருந்தவர்களின் அடையாள அட்டைகளைப் பறிமுதல் செய்த படையினர் இவர்களை ஆரியகுளம் படைமுகாமுக்கு வருமாறு கூறிச்சென்றுள்ளனர்.

## மன்னாரில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் சுட்டுக்கொலை!

மன்னார் வானிலை அவதான நிலையத்திற்கு அருகில் வைத்து டிச. 19 காலை 11 மணியளவில் சிறிலங்கா படையின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மீது விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தார்.

பலியானவர்களுள் ஒருவர் ஆர்.எம்.டி.பி.பெரேரா (28) என அடையாளங் காணப்பட்டுள்ளார். படுகாயமடைந்தவர்கள் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். பலியானவரின் சடலம் மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு வந்த சிறிலங்கா படையினர் கடைகளை மூடுமாறு உத்தரவிட்டதுடன் கடைகளில் பொருள்கள் வாங்கிக் கொண்டு நின்றவர்களையும் கடை உரிமையாளர்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். கடைகளுக்குள் புகுந்தும் தேடுதல் நடத்தியுள்ளனர். இத்தேடுதலின் போது ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## புலனாய்வுப் படையினருடன் இணைந்து இயக்கிவந்த இளைஞன் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு நகரின் கள்ளியங்காடு சந்தியில் டிச.19 செவ்வாய் முற்பகல் 11.30 மணியளவில் சிறிலங்கா படையின் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து இயங்கி வரும் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் ஜயாத்துரை ஜெகன் (சேகர்) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்தவர். கள்ளியங்காடு பகுதிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் இடம் பெற்ற போது அப்பகுதியில் சிறிலங்கா படையினரும் தேசியத் துணைப் படையினரும் நின்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## கல்முனை நகரில் ஊர்காவல்படையினன் சுட்டுக் கொலை

கல்முனை நகரில் கார்மேல் பாத்திமா கல்லூரிக்கு அருகில் முஸ்லிம் ஊர்காவல்படையைச் சேர்ந்த ஒருவர் இனந் தெரியாதவர்களால் இன்று மாலை 5.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் முகமது ரஹீம் (35 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## நுவரெலியாப் பகுதிகளில் தேசிய அடையாள அட்டைகள் பெற்றுக் கொள்வதில் பெரும் அசிரத்தை!

நுவரெலியாப் பெருந்தோட்டப் பகுதிகளான நுவரெலியா பிளான்டேஷன், பீட்று, கோட்கலாட்ஜ், பார்க், கொங்கொடியா, எஸ்கடைல், மார்காஸ் தொடர், நானுஓயா, கிளாஸ்கோ, எடின்பரோ, உடரதல்ல, வழக்கெல, போன்ற பெருந்தோட்டங்களில் கண்டி நட்புறவு மன்றம், மோர்ஜ், மலையக தமிழ் சங்கம் ஆகியன இணைந்து ஆட்பதிவு திணைக்களத்தின் அனுசரணையுடன் நடமாடும் சேவையொன்றினை இம்மாதம் இறுதியில் நடாத்தவுள்ளது.

இது தொடர்பான சகல அறிவுறுத்தல்களும் இத்தோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. என்ற போதிலும் சில தோட்டங்களைத் தவிர பல தோட்டங்களில் போதிய ஊக்குவிப்புகளை நிர்வாகத்தினர் தரவில்லை. நிர்வாகச் சிக்கல்கள் சிலவற்றை சாக்கு போக்காக, காட்டி, இச்செயற்பாடுகளை தட்டிக்கழிக்கும் போக்கே காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் தோட்டத் தலைவர்கள் சிலரும், இச்செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையிடுகின்றனர்.

தற்போது தொழிற்சங்கங்களுக்கு ஆட்களை சேர்க்கும் நேரமிது. எமக்கு அதுதான் முக்கியம் இதனைப் பிறகு பார்ப்போம் என கிடைக்கவிருக்கும் நல்லதொரு வாய்ப்பினையும் இம்மக்களுக்கு கிடைக்கவிடாமல் தடுக்கும் செயல்களில் இறங்கியுள்ளனர்.

தினந்தோறும் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமற் தனது அன்றாட கடமைகளைச் செய்துக் கொள்ள இயலாமற் அல்லற்படும் சாதாரண மக்களின் நிலைமைகளை இவர்கள் உணர வேண்டும். தம்மைச் சாந்துள்ள மக்களின் துன்ப துயரங்களை களைவதற்கே தொழிற்சங்கங்கள், செயற்படுவதாக கூறிக்கொள்கின்றனர். ஆயினும் தத்தமது பைகளை நிரப்பிக் கொள்வதற்கான வாய்ப்பு எங்குள்ளது என தேடிப் பெறுவதிலேயே பலரது காலங்கழிகின்றது. இத்தகையவர்களை இனங்கண்டு தமக்கு சரியானதை மலையக மக்கள் பெற்றுக் கொள்வதில் அக்கறைக் காட்ட வேண்டும்.

தேசிய அடையாள அட்டைகள் பெற்றுக்கொள்ளுவதில் தமக்குள்ள பிரச்சினைகளை உணர்ந்து தாமாகவே முன்வந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே மலையக நலன் விரும்பிகளின் ஆவலாக உள்ளது. ○

## 11 வயதுச் சிறுமி மீது பாலியல் பலாத்காரம்!

### 60 வயது வயோதிபருக்கு 1500 ரூபா தண்டமும், 6 மாதச் சிறைத்தண்டனையும்

இடம் பெயர்ந்து வந்து அகதிகளுக்கான நலன்புரிநிலையத்தில் இருந்த 11 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றத்திற்காக 60 வயதுடைய வயோதிபர் ஒருவருக்கு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் 1500 ரூபா தண்டமும், 6 மாதச் சிறைத்தண்டனையும் விதித்துள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வவுனியா நலன்புரி நிலையத்தருகில் கடை நடத்தி வந்த எதிரியாகிய 60 வயது வயோதிபர் மாலை 7 மணியளவில் தனது கடைக்கு வருமாறு அழைத்து சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சந்தேக நபருக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு விசாரணையின் போது, பாதிக்கப்பட்ட சிறுமி தங்கியிருந்த நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த பொலிசாரும், வவுனியா சிறுகுற்றப் பிரிவுப் பொலிசாரும் சாட்சியமளித்தனர். எதிரியின் சாட்சியமும் நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமி கல்வியில் பின்தள்ளப்பட்டதுடன், சித்தசுவாதீனமற்றவரைப் போல சோர்ந்து காணப்பட்டதாகவும் தாயார் சாட்சியத்தில் தெரிவித்தார்.

எதிரி 11 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கினார் என்ற குற்றச்சாட்டை பொலிசார் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நிரூபித்தனர்.

எதிரிக்கு 1500 ரூபா தண்டமும், 6 மாதச் சிறைத் தண்டனையும் வழங்குவதாக நீதிவான் தமது தீர்ப்பில் தெரிவித்தார். தண்டப்பணம் கட்டத்தவறினால், ஒருமாதச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

எதிரி உடனடியாகவே தண்டப் பணத்தைக் கட்டியதையடுத்து, 6 மாதச் சிறைத் தண்டனைக்காக அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். ○

## யாழ். குடாநாட்டில் இவ்வருடம் மிதிவெடியில் சிக்கி 42 பேர் அவயங்களை இழந்தனர்!

யாழ். குடாநாட்டில் இந்த வருடத்தில் மாத்திரம் 42 பேர் மிதிவெடியில் சிக்கி தமது அவயங்களை இழந்து அக்கவீனர்களாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் மிதிவெடி அகற்றும் அமைப்பின் திட்டப்பணிப்பாளர் எல்மோ பெர்ணாண்டோ தெரிவித்தார்.

குடாநாட்டில் கடந்த 3 வருடங்களில் மிதிவெடியில் சிக்கி 112 பேர் அவயங்களை இழந்துள்ளனர். இவர்களின் 5 பேர் மாணவர்களாவர். கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலே அதிகமான மிதிவெடிச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி மற்றும் மிதிவெடி அதிகமாக இருந்த பகுதிகளில் ஐக்கிய நாடுகள் மிதிவெடி அகற்றும் திட்டப்பிரிவு ஆயிரத்திற்கும் மேற்பட்ட எச்சரிக்கைப் பலகைகளை நாட்டியிருந்தும் பொதுமக்களின் கவலையீனம் காரணமாவே இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் இவர்கள் தற்போது அங்கவீனர்களாக உள்ளனர். ஆனால் மிதிவெடியில் சிக்கியவர்கள் அவயங்களை இழந்துள்ளனரே தவிர எவரும் உயிரிழக்கவில்லை எனவும் எல்மோ பெர்ணாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மிதிவெடி அகற்றும் பிரிவு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கண்ணிவெடி மற்றும் பல மிதிவெடிகளை அகற்றியுள்ளது. ஆனால் தற்போது அப்பணி நிறுத்தப்பட்டுள்ளது. ○

## யாழ். கிராமசேவகர்கள் உணவு முத்திரை மோசடி!

அடையாள அட்டை கொண்டு வாருங்கள், சத்தியக் கடதாசி கொண்டு வாருங்கள், உங்கள் பகுதிக் கிராமசேவகரிடம் கடிதம் வாங்கி வாருங்கள். இவ்வாறெல்லாம் பொது மக்களை நச்சரிப்பவர்கள் கிராமசேவகர்கள், தாங்கள் தான் சட்டத்தின் காவலர்கள் என்பது போல் நடந்து கொள்வார்கள்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து கிராம சேவகர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. ஏன் தெரியுமா? அண்மையில் நிவாரண அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்ட போது இவர்கள் மோசடியில் ஈடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது தான். இவர்கள் பொதுமக்களின் அறுபது உணவு முத்திரைகளைக் கையாடி உள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கிராம சேவையாளர்கள் மோசடியில் ஈடுபடுவதும் பொதுமக்களைச் சுரண்டுவதும் சர்வ சாதாரணமாக இடம் பெற்று வருவதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் இதே போன்று உணவு முத்திரை மோசடியில் வடமராட்சி-பருத்தித்துறை பிரதேசத்தில் இரு கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு அவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்ட கிராம சேவகர்கள் சிலர் புலிகளின் காலத்தில் புலிகளுக்கே டிமிக்கி விட்டு புலிகளுக்கு ஐம்பதாயிரம் ஒரு இலட்சம் என குற்றப்பணம் செலுத்தியவர்கள். இவர்களுக்கு பிரதேச செயலர்களும் உதவி அரசாங்க அதிபர்களும் எம்மாத்திரம்? ○

சரிநிகர் இதழ் - 215, டிச. 24 - டிச 30, 2000



# யாழ்:நிவாரணத்தில் கலப்படம்! இரண்டு அரிசிக்கு ஒரு நெல்!

– எழுவான்

யாழ் மாவட்டத்தில் இடப்பெயர்வு மற்றும் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த ஐந்து வருடகாலமாக நிவாரணமாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வருமானம் குறைந்த சுமார் 95 ஆயிரம் குடும்பங்கள் நிவாரணமாக வழங்கப்படும் அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்ற பொருள்களை குடும்ப உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப இலவசமாகப் பெற்று வருகின்றன.

இந்த உணவுப் பொருள்களை கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் யாழ். அரசாங்க அதிபருக்கு வழங்கி வருகின்றார். அரச அதிபர் அவற்றை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்கிறார். ஆக யாழ். அரச அதிபருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் இந்த நிவாரண விநியோகம் தொடர்பில் பொறுப்பு உண்டு. இந்த நிவாரணப் பொருட்களுக்கான நிதி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்காக வெளிநாடுகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் வழங்கும் நிதி மூலம் அரசுக்குக் கிடைக்கிறது. யாழ் மாவட்டத்தில் இந்த உலர் உணவு விநியோகத்தில் முறைகேடுகளும் ஊழல்களும் ஒருபுறம் இருக்க மிகவும் பழுதடைந்த, தரங்குறைந்த, பாவனைக் காலம் முடிந்த பொருள்கள் வழங்கப்படுவது சர்வசாதாரணமான விடயமாகி விட்டது. உதாரணமாக இந்தவாரம் சில ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்பட்ட அரிசியை எடுத்துப் பார்த்த போது, அது மூன்று வகையான அரிசியின் கலவையாக இருந்ததுடன் இரண்டு அரிசி மணிகளுக்கு ஒரு நெல் என்ற வீதத்தில் மூன்றில் ஒருபங்கு நெல் கலந்த அரிசியாகவும் அது காணப்பட்டது. சிவப்புப்பச்சை, வெள்ளைப் பச்சை, மற்றும் தரங்குறைந்த வெள்ளை நிற அரிசி என்பவற்றின் கலவையாகவும் அது இருந்தது.

நிவாரணத்துக்கு வழங்கப்படும் பால்மா எப்போதும் ஒரே வகையினதாக இருப்பதில்லை. முன்பு பல தடவைகள் விநியோகிக்கப்பட்ட "ஹைலன்ட்" பால்மா அதன் பாவனைக்காலம் முடிவடையும் நிலையில் இருந்தது. தற்போது வழங்கப்படுகிறது. ஆனால், சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் குழந்தைகளே இல்லாத குடும்பங்களுக்கும் "லக்டோஜன்" பால் மா பைக்கட்டுகளை வழங்கி வருகின்றன. வாங்கியவர்கள் அவற்றை வெளியே குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். தரங்குறைந்த அரிசி பற்றி கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றின் முகாமையாளரிடம் கேட்டதற்கு 'கச்சேரி தந்த அரிசி இது தான்' என்று கூறினார். மூன்று வகையான அரிசிகள் கலந்த அரிசியை பொதுமக்கள் என்ன செய்வது என்று அவரிடம் திருப்பிக் கேட்க "மாவாக அரைத்துப் பயன்படுத்தலாம் தானே" என்றார். தம்வசம் உள்ள பழுதடைந்த அரிசியையும் நிவாரண அரிசியுடன் கலந்து விநியோகித்து விடுவது சில ப.நோ.கூ. சங்கக் கிளை முகாமையாளர்களுக்குக் கைவந்த கலையாக உள்ளது.

புழுப்பிடித்துப் பழுதடைந்து போயிருந்த அரிசியை மக்களுக்கு விநியோகிக்க வைத்திருந்த போது தெல்லிப்பளை பிரதேச சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை நடத்தி அதனைக் கண்டுபிடித்துள்ளனர். தெல்லிப்பளை, சுன்னாகம் அடங்கிய இரண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் விநியோகித்த அரிசிமனித பாவனைக்கு உதவாது என்று தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் இந்த அரிசி விவகாரம் குறித்து யாழ். அரச அதிபர் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த விடயம் குறித்து விளக்கமளித்து அறிக்கை வெளியிட்டுள்ள சுன்னாகம் ப.நோ.கூ.சங்கமும் தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கமும் யாழ். செயலகத்தால் விநியோகிக்கப்பட்டவை என்றும் அவற்றைப் பார்த்து பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு உகந்ததா என்பதை சங்கங்கள் தீர்மானிப்பதற்கு முன்பாகவே சுகாதாரப் பகுதியினர் சோதனை நடத்தி அவை பழுதடைந்த அரிசி என அறிவித்து விட்டதாகத் தெரிவித்துள்ளன. அரிசி பழுதடைந்து இருப்பது தெரியவந்தால் அவற்றை விநியோகிக்காமல் அதுபற்றி செயலகத்திடம் முறையிடுவோம். அவற்றை பொதுமக்களின் தலையில் கட்டிவிட மாட்டோம் என்று சங்கங்கள் தெரிவித்துள்ளன. தாங்கள் சோதனை நடத்தி கண்டுபிடித்திராவிட்டால் பழுதடைந்த அரிசி முழுவதும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கும் என்று சுகாதாரப் பகுதியினர் கூறுகின்றனர். அதுவே உண்மையும் கூட.

நிவாரணப் பொருட்களாக கொழும்பில் இருந்து அனுப்பப்படும் பொருட்கள் தரங்குறைந்தவையாக உள்ளன. கொழும்பில் இந்தப் பொருள் கொள்வனவில் ஊழல்கள் இடம் பெறுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. யுத்தத்தைக் காரணம் காட்டி எதிலும் தப்பித்துக் கொள்ளும் போக்காக உள்ளது அதிகாரிகளின் பதில்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் நிவாரணம் வழங்கும் அட்டைகளை முறைகேடாக பொதுமக்களுக்கு வழங்கி பெரும் மோசடி புரிந்து வந்த நான்கு கிராம சேவையாளர்கள் பிடிபட்டுள்ளனர். இவர்கள் பெரும் தொகையான நிவாரண அட்டைகளை தெரிந்தவர்கள், உறவினர்கள் எனப் பலரது பெயரில் வழங்கி நிவாரணப் பொருட்களை நீண்ட காலமாகப் பெற்று வந்துள்ளனர். விசாரணை நடத்தி இவர்களைக் கண்டு பிடித்துள்ள நல்லூர் பிரதேச செயலர் க.குணராஜா மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் சண்முகநாதனிடம் கேட்டிருக்கிறார். இந்தக் கிராம சேவையாளர்கள் நிவாரண அட்டைகளை மோசடி செய்தது மட்டுமன்றி அது குறித்து விசாரித்து வரும் பிரதேச செயலருக்கு அச்சுறுத்தல் விடுத்து விசாரணையைக் குழப்பும் கைங்கரியத்திலும் ஈடுபட்டுள்ளனராம்.

# தாமிரனின் கண்கள் தோண்டப்பட்டிருந்தன!

– விவேகி

கடந்த மாதம் 21ம் திகதி நான்கு இளைஞர்களைக் கடற்படையினருக்குக் காவு கொடுத்த கோபாலபுரம் கிராமம் ஒரு மாதம் பூர்த்தியாகு முன்னரே இம்மாதம் 13ம் திகதி மேலும் இரண்டு இளைஞர்களைக் கடற்படையினரின் துப்பாக்கிப் பசிக்கு இரையாக்கி விட்டுக் கைகளைப் பிசைந்து கொண்டு செய்வதறியாது நிற்கிறது.

13ம் திகதி காலையில் திருகோணமலை நகருக்கு வந்து தங்கள் அலுவல்களை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் மகாலிங்கம் தாமிரன் (23 ) மற்றவர் சண்முகராசா ஸ்வர்ணராசன் (21)

இவர்கள் இருவரும் பயிர்ச் செய்கையையே தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள். தாமிரன் குடும்பத்தில் மூத்த பிள்ளை. ஒரு தம்பியும் இரண்டு தங்கையரும் இருக்கிறார்கள். தகப்பன் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். ஸ்வர்ணராசன் தந்தையை இழந்தவர். இவரது தயவில் தான் தாயும் தமக்கையாரும் வாழ்ந்து வந்தனர்.

13ம் திகதி காலை பத்து மைல் தொலைவிலுள்ள திருகோணமலை நகருக்கு மோட்டார் சைக்கிளில் இருவரும் சென்றிருக்கிறார்கள். தங்கள் தேவைகளை முடித்து விட்டுத் திரும்ப மாலையாகி விட்டது. விரைந்து வீடு சேர்ந்து விட வேண்டும் என்ற நினைப்பில் கோபாலபுரம் திரும்பியிருக்கிறார்கள்.


தாமிரன்


ஸ்வர்ணதாசன்

ஆள் நடமாற்றம் அற்ற 7வது மைலில் வைத்தே கடற்படையினர் இவர்களைக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. சுமார் பத்தரை மணியளவில் துப்பாக்கி வெடித்த சத்தங்கள் கேட்டதாக அருகிலுள்ள கிராமத்து மக்கள் கூறுகிறார்கள். இருவரது சடலங்களும் அடுத்த நாள் 7ம் கட்டையிலுள்ள தெய்வயானைக் குளத்தருகே போடப்பட்டிருந்தன.

இளைஞர்களின் வீட்டார்களோ, இருவரும் திரும்பி வராமையையிட்டுக் கவலையடைந்த போதிலும், இரவில் தேடி எங்கும் செல்ல முடியாத நிலையில் நகரத்தில் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கலாம் என்ற ஆறுதலுடன் இருந்திருக்கிறார்கள். அடுத்த நாள் வியாழக்கிழமை நண்பகல் பொலிஸார் வந்து தகவல் சொன்ன பிறகுதான் தங்கள் பிள்ளைகளுக்கு நடந்த கொடூரம் பற்றி இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

வழக்கம் போல புலியா இல்லையா என்ற விசாரணைக்குப் பிறகு சடலங்கள் உறவினர்களிடம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டிதையடுத்துச் சனிக்கிழமை காலை பத்து மணிக்கு ஊரே திரண்டு வந்து கூடி அழுது அடக்கம் செய்யப்பட்டன.

இவர்களது மரணத்தையடுத்து கோபாலபுரம் கிராமம் பீதியால் உறைந்து போயிருக்கிறது. கடந்த மாதம் மீன்பிடிக்கச் சென்ற பிரசாந்தன், ஜெயகாந்தன், விஜயகுமார், ஜெயப்பிரதாப் ஆகிய நான்கு இளைஞர்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டதையும், அதற்கடுத்த நாள் கோபாலபுரம் மக்கள் திரண்டு அடாத்தான கொலைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததையும், இந்தக் கொலைகளுடன் இணைத்துப் பார்த்து மக்கள் கலக்கமடைந்து காணப்படுகிறார்கள். ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்களில் தாமிரன் முன்னணியில் நின்று செயற்பட்டிருக்கிறார். வழக்கமாக அநீதியைத் தட்டிக் கேட்கும் பண்பு தாமிரனிடம் அதிகமாகவே காணப்பட்டதாக ஊர்மக்கள் கூறுகிறார்கள்.

தாமிரனின் கண்கள் தோண்டப்பட்டிருக்கின்றன. மூக்கு சிதைக்கப்பட்டிருக்கிறது. ஸ்வர்ணஹாசனின் உடலிலும் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

இவர்களுக்கு நேர்ந்த கதி கோபாலபுரம் மக்களுக்கு கடற்படையினரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

# மூதூர்: ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டோரின் மரணவிசாரணை ஏழு மாதங்களின் பின்

– என்.எஸ்.

மூதூர்ப் பிரதேசம்- ஈச்சிலம்பத்து பிரதேச செயலர் பிரிவில் உள்ள பூநகர் கிராமத்தைச் சேர்ந்த ஏழு தமிழ் பொதுமக்கள் சிங்கள ஊர்காவல் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான மரணவிசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை மூதூர் நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான ஆர்.எம். ஜெயவர்த்தனாவினால் நடத்தப்பட்டது.

இவ்வருடம் ஒக்டோபர் 2 ஆம் திகதி இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

கனகரத்தினம், தயாவதி, அற்புதராசா, சோமசுந்தரம், நல்லதம்பி, காளிராசா, அருளானந்தராசா ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். கொலை செய்யப்பட்ட ஏழு தமிழ்ப் பொதுமக்களில் தயாவதி மட்டுமே பெண். சம்பவம் நடந்த நேரத்தில் இந்த ஏழு பேரும் வயலில் சூடு மிதிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தனர். அச்சமயம் வயலுக்குச் சென்ற சிங்கள ஊர்காவல் படையினர் சிலர் சூடு மிதிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏழு பேரையும் கடத்திக் கொண்டு சென்று வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் ஏழு பேரின் சடலங்களும் மஹிந்தபுர என்னுமிடத்தில் கோணபொக்க என்ற பகுதியில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் இக்கொலைகள் பற்றி மரணவிசாரணை ஏதும் நடத்தப்படவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை தான்- சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தான்- மரணவிசாரணை நடத்தப்பட்டது.

மரணவிசாரணையில் பூமரத்தடிச்சேனை பூநகர் மற்றும் கறுக்காமுனை ஆகிய பகுதிகளின் மூன்று கிராம சேவையாளர்கள் சேருநுவர பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் ஈச்சிலம்பத்து பிரதேச செயலர் அலுவலக பிரதம எழுதுவினைஞர் ஆகியோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

கொலையுண்டவர்களின் தரப்பில் கொலையுண்டவர்களின் ஆறு உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

மேல் விசாரணை இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



# மன்னார்: மனநோயாளியையும் கைது செய்தனர்!

– அலையோவியன்

மன்னாரில் கடந்த சில மாதங்களாக சட்டவிரோத கைதுகள், மனித உரிமை மீறல்கள் என்பன அதிகரித்து வருகிறது. இவ்வாறான சட்டவிரோத கைதுகள் பெரும்பாலும் வெளியே தெரிய வருவதில்லை.

கடந்த செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் இராணுவம் மற்றும் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு ஏறத்தாழ 20 பேர் காணாமல் போயுள்ளனர்.

செப்டெம்பர் 2ம் திகதி சந்தியா சபஸ் (31), இராசலிங்கம் யோகதாஸ் (25) என்ற இருவருமே தாராபுரத்தில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 9ந் திகதி அருந்தவதேவி (26) பத்மநாதன் (35), புஸ்பராசா நாகேஸ்வரி (33) டெலினா (30) வேதநாயகம் சுரேஸ்குமார் (25) என்போர் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

இதே திகதியில் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து மன்னார் வந்த செந்தில்நாதன் தங்கராசா எனப்படும் வெட்டியான் முறிப்பை சேர்ந்த இரு சகோதரர்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த இராசநாயகம் என்பவரும் மன்னார் நகரப் பகுதியில் வைத்து காணாமல் போயுள்ளனர்.

அத்துடன் மருத்துவ சிகிச்சைக்காக மதவாச்சி சென்ற மன்னார் பனங்கட்டிக்கொட்டடையைச் சேர்ந்த சிலுவை ஜீவகுமார் என்ற மனநோயாளியொருவரும் கைது செய்யப்பட்டு தற்பொழுது அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

**காணாமல் போன ஏனையோர் விபரங்கள்**

| பெயர் | இடம் | கைதான திகதி |
|---|---|---|
| எஸ்.அலோசியஸ் (27) | சாவற்கட்டு | 15.09.2000 |
| எஸ்.சிவதாசா (25) | வெட்டியான் முறிப்பு | 15.09.2000 |
| ரி.விக்கிரமசிங்க (43) | உப்புக்குளம் | 24.09.2000 |
| ஜி. சரவணபவன் (28) | இலுப்பைக்கடவை | 16.09.2000 |
| ஏ.சாந்தன் சில்வா (33) | 8ம் வட்டாரம் பேசாலை | 05.10.2000 வங்காலைப் பாடுகடற்படை கைது |
| எஸ்.கமல்ராஜ் (18) | 8ம் வட்டாரம் பேசாலை | 05.10.2000 வங்காலைப் பாடுகடற்படை கைது |
| எஸ்.இருதயராஜ் (20) | அரிப்பு மேற்கு | 08.10.2000 முருங்கனில் கைது |
| எஸ்.இயேசு குருஸ் (31) | தாழ்வுபாடு 20.10.2000 | தலைமன்னார் கடலில் வைத்து காரைத்தீவு கடற் படையால் கைது |

# யாழ் கைதுகள் அதிகரிக்கின்றன!

**கடந்த வாரத்தில் கைதுசெய்யப்பட்டோர்**


| பெயர் | வயது | விலாசம் | கைதான .இடம் | திகதி |
|---|---|---|---|---|
| கந்தசாமி விமலசேனாதிராஜா | வயது 19 | ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | 25.11.2000 |
| சின்னத்தம்பி தயாபரன் | வயது 23 | விளாத்தியடி வீதி உரும்பிராய் | உரும்பிராய் | 25.11.2000 |
| மகாலிங்கம் ஜெகதீஸன் | வயது 21 | சூறாவத்தை சுன்னாகம் | சுன்னாகம் | 26.11.2000 |
| கார்த்திகேயன் சுசீந்திரன் | வயது 18 | மணியாகரன் வீதி கொக்குவில் கிழக்கு | சுன்னாகம் | 25.11.2000 |
| சோதிராஜா நிஷாந்தன் | வயது 20 | கச்சேரி வீதி நல்லூர் | கலட்டி | 28.112000 |
| கந்தையா ஜெயவதனச் சந்திரன் | வயது 21 | ஓடக்கரை வீதி சங்கானை | சங்கானை | 29.11.2000 |
| சபாரத்தினம் இளைராஜா | வயது 21 | சரசாலை மேற்கு | நெல்லியடி | 26.11.2000 |
| ராஜ்மனோகரன் தயாபரன் | வயது 23 | ரயில் நிலைய வீதி கோண்டாவில் | கோண்டாவில் | 24.11.200 |
| நகுலேந்திரன் ஜெயரூபன் | வயது 21 | சுதுமலை | இடம் தெரியாது | 05.12..2000 |
| பொ.ஸ்ரீகௌரிதாசன் | வயது 23 | உடுவில் தெற்கு | சுன்னாகம் | 06.12.2000 |
| கு.வசந்தன் | வயது 23 | சாவற்கட்டை | மண்டைதீவு | 02.12.2000 |
| அ.நாகதீஸன் | வயது 22 | சாவற்கட்டை | மண்டைதீவு | 02.12..2000 |
| நா.புலேந்திரராசா | | சாவற்கட்டை | மண்டைதீவு | 02.12.2000 |
| பெனடிக் யசீதரன் | வயது 21 | உடுவில் தெற்கு | உடுவில் | 05.12.2000 |
| அன்னராசா ஜெயரூபன் | வயது 22 | கெற்பலி மத்தி மிருசுவில் | சங்குவேலி | |
| கதிரவன் பரராஜசிங்கம் | வயது 25 | நாவற்காடு அச்சுவேலி | அச்சுவேலி | |

யாழ்ப்பாணத்தில் ஆட்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்தும் அதிகளவில் இடம் பெற்று வருகிறது.

ஊரெழு இராணுவத்தினரால் கடந்த 7 ஆம் திகதி வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அதன் பின் மறுநாள் பெற்றோர்களை முகாமுக்கு அழைத்த படையினர் அவர்கள் முன்னிலையில் அந்த இளைஞனை விடுதலை செய்துள்ளனர்.

கோண்டாவில் கிழக்கு எம்.எஸ்.லேனைச் சேர்ந்த சிவஞானம் பாஸ்கர் (20) என்ற இளைஞர் மோட்டார் சைக்கிளில் வந்த படையினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊரெழு படை முகாமில் வைத்து தடிகளாலும், கை , கால்களாலும் கண்டபடி தாக்கப்பட்ட இவர் கடும் உள்காயங்களுடன் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரைப் போன்றே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் கடுமையாகத் தாக்கப்பட்டு உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்படுகின்றனர். தனிப்பட்ட கோபங்களுக்காகக் காட்டிக் கொடுக்கப்படும் இளைஞர்களும் இவ்வாறு கைது செய்யப்படுவதாகவும் தெரிய வருகிறது.



# அவுஸ்திரேலியாவுமா?

அவுஸ்திரேலிய தூதராலயத்தில் விசாவுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கப் போபவர்கள் தமிழர்களாக இருந்தால் பாரபட்சமாக நடாத்தப்படுவார்களா?

இந்தக் கேள்வி உங்களுக்கு ஆச்சரியமூட்டலாம். ஆனால், அப்படி நடப்பதாக தாம் உணர்ந்தோமென்று கூறுகிறார்கள் கடந்த ஒரு வார காலத்துள் அங்கு போய்வந்த ஒரு சிலர்.

அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்து வாழும் தமது பிள்ளைகளைப் பார்க்கப் போவதற்காக விசாவுக்குப் போகும் வயதானவர்கள் தாம் அதிகமாக அலைக்கழிக்கப்படுவதாக கூறுகின்றனர்.

மூன்று முறை அவுஸ்திரேலியா சென்று திரும்பி வந்த ஒருவர் இம்முறை வழமைக்கு மாறான விதத்தில் தான் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைக்கப்பட்டதாக கவலைப்பட்டார். தமது விண்ணப்பப் படிவத்தையோ கடவுச் சீட்டையோ சரியாகப் பார்க்காமலே, தாம் சொல்கிற விடயங்களைக் கேட்காமலே 'கவுண்டரில்' இருப்பவர்கள் தம்மைத் திருப்பி அனுப்பியதாக குறைப்பட்டார் இன்னொருவர்.

இரண்டு முறை குறுகிய கால விசாவில் அவுஸ்திரேலியா சென்று திரும்பி வந்திருந்தும் இம்முறை அங்கு செல்வதற்காக விண்ணப்பித்த போது புதிது புதிதாக கேள்விகள் கேட்கப்பட்டதாக கூறினார் வேறொருவர். தனக்கு ஒழுங்காக அவர்களுடன் ஆங்கிலத்தில் உரையாட முடியாது என்பதால் தனது பேச்சை மொழி பெயர்க்கவென தான் அழைத்துச் சென்றவருடன் அவர்கள் உரையாட மறுத்ததாகச் சுட்டிக் காட்டினார். தவிரவும் தனக்கு அவர்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரை தரவும் இல்லை என்றும் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டீர்களா என்று தன்னைக் கேட்டதாகவும், நீங்கள் கட்டாயம் திரும்பி வருவீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்டதாகவும் அதற்கு ஏதாவது ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு தான் கேட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

"நான் ஒரு விதவை ஓய்வூதியம் பெறுபவர். எனது ஒரு பிள்ளையுடன் இங்கே இருக்கிறேன். அவுஸ்திரேலியாவிலிருக்கும் எனது இன்னொரு பிள்ளையையும் குழந்தைகளையும் ஒரு தடவை போய்ப் பார்த்து வர விரும்பியதால் அங்கு போவதற்கே விசா கேட்டேன். கடந்த ஐந்து வருடத்தில் நான் இரண்டு தடவை இப்படிப் போய் வந்திருக்கிறேன். திரும்பி வருவேன். எனக்கு அங்கே நிரந்தரமாக இருக்கும் உத்தேசம் இல்லை: அங்கு நிரந்தரமாக இருக்கும் அளவுக்கு அந்த நாட்டை எனக்கு பிடிக்கவும் இல்லை. எனக்கு இலங்கையிலிருக்கும் வயதான எனது அம்மாவுடன் இங்கே இருப்பது தான் விருப்பம். இடைக்கிடை வசதியான போது பிள்ளைகளைப் போய் பார்த்து விட்டு வருவதை தவிர ... என்பதை விட, நான் திரும்பி வருவேன் என்று சொல்ல எனக்கு எந்த ஆதாரங்களும் இல்லை. ஆவணத்திற்கு எங்கே போவேன் நான்? இவர்கள் இப்படிக் கேட்பது என்னை அவமானப்படுத்துவது போல இருக்கிறது. எங்காவது வெளிநாட்டில் போய் நிரந்தரமாக தங்கும் விருப்பம் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை. இருக்கப் போவதும் இல்லை என்று நான் சொல்வது மட்டும் எனக்கு விசா தர போதுமானதில்லையா?

இது அவரின் கேள்வி.

நாங்கள் தமிழர்கள் என்பதால் தான் இப்படி நடக்கிறதா? தமிழர்கள் என்றால் அவமானப்படுத்தலாம் என்று அர்த்தமா?

இலங்கையில் இந்தப் பாரபட்சங்கள் எங்களுக்கு சர்வசாதாரணம். நாம் அதற்குப் பழக்கப்பட்டோ, சகித்துக் கொண்டோ வாழப் பழகி விட்டோம். ஆனால், அவுஸ்திரேலியாவும் அப்படியா?

இவையும் இவர்களது கேள்விகள்.

அவுஸ்திரேலிய தூதுவராலயம் தான் பதில் சொல்ல வேண்டும்!

# இம்முறை முடியாது!

"யுத்தத்தை ஒருபோதும் கைவிட மாட்டோம். வேண்டுமானால், பேச்சுவார்த்தை நடக்கும் போது அதைத் தணித்துக் கொள்ளலாம்..." என்கிறார் ஜனாதிபதி.

யுத்தத்தை நடாத்திக் கொண்டே, அதற்கு ஆட்களை சேர்த்துக் கொண்டும் ஆயுதங்களை வாங்கிக் கொண்டும் சமாதானப் பேச்சில் ஈடுபடல் எவ்வளவுக்குச் சாத்தியம் என்று தெரியவில்லை. அதுசாத்தியமில்லை என்கிறார்கள் புலிகள்.

போகிற போக்கில் சமாதானப் பேச்சுக்கான கதைகள் வெறும் கதைகளாகவே இருந்துவிடப் போகின்றனவோ என்று சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒரு நண்பரிடம் கேட்டேன். 'என்ன... சமாதானம் வருமா?

வருமா வராதா என்று சொல்லத் தெரியவில்லை. வந்தால் நல்லது. ஆனால், நிச்சயமாக புலிகளை ஏமாற்றி விடலாம் எண்டு அரசு நினைத்தால் அதில் வெற்றி பெற அரசுக்கு முடியப் போவதில்லை! என்றார் அவர்.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"புலிகளுக்கும் சமாதானம் தேவை என்பதை உலக நாடுகள் வலியுறுத்தித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அங்குள்ள நிலமைகளே அதை அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறது. ஆனால், அரசாங்கம் வெளிநாடுகளின் நெருக்குவாரத்துக்காகத் தான் இதில் இப்போது இறங்கியிருக்கிறது. எப்படியும் அவர்களை மாட்டிவிடத் தான் அது முயற்சியெடுக்கும். ஆனால், இந்தத் தடவை அவர்கள் விழிப்பாக இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

நான் பதில் பேசவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவின் இடையீடு: நமது உரைகல் என்ன?

– டி.சிவராம்

அமைதிப் பேச்சுவார்த்தை பற்றியே அனைவரும் பேசுகின்றார்கள். இந்த வகையில் பார்க்கப் போனால் உலகின் பல ராஜதந்திரிகளாலும் அண்மைக் காலத்தில் நுணுகி அதிகமாக ஆராயப்பட்ட ஆவணம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இவ்வாண்டு ஆற்றிய மாவீரர் தின உரையேயாகும்.


கடந்த வாரம் டெல்லியிலிருந்து வந்த திடீர் அழைப்பை ஏற்று அங்கு சென்றிருந்தேன். நல்ல குளிர். அநியாயம் சொல்லக் கூடாது . மிகவும் நன்றாகவும் நட்புடனும் கவனித்தார்கள். எனக்கு அங்கு துணைவந்தவரிடம் இந்தியா தொடர்பான என்னுடைய நிலைப்பாடுகள் பற்றி உங்களுக்குத் தெரியுமா... என்று நான் இழுத்த போது, அதெல்லாம் பிரச்சினையில்லை என அவர் கூறி, இந்தியத் தலைநகரைச் எனக்குச் சுற்றிக் காட்டுவதில் இறங்கி விட்டார். இந்தக் குறுகிய டெல்லிப் பயணத்தின் போது நான் அறிந்து கொண்டது அடிப்படையில் இரண்டு விடயங்கள்.

ஒன்று, தன்னைச் சுற்றியுள்ள பிராந்தியத்தில் முரண் தணிப்பை ஏற்படுத்துவதன் மூலமே ஒரு பலம் பொருந்திய பொருளாதார சக்தியாக தன்னை வளர்த்து நிலைப்படுத்திக் கொள்ளலாமென இந்தியா நம்புகின்றது என்பது. இரண்டாவது, இந்த வகையில் எவ்வழிப்பட்டாயினும் புலிகளையும் சிறிலங்கா அரசையும் பேச்சுவார்த்தைகள் என்கிற வட்டத்துள் கொண்டு வந்து விடுவதென்பது.

தென்னாசிய மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் இந்திய மத்திய அரசு தற்போது பின்பற்றி வரும் கேந்திர - பொருளாதார அணுகு முறையைச் சற்று நுணுகி ஆராய்வோமானால் நான் மேற்கூறிய விடயங்கள் மேலும் தெளிவாகும்

காஷ்மீரில் இந்திய மத்திய அரசு ரம்ழானுக்காக அண்மையில் காலவரையறையற்ற போர்நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக அறிவித்தது. இதை இந்திய வெளிநாட்டு உளவுத் துறையினால் ஆதரிக்கப்படுவதாகக் குற்றஞ் சாட்டப்படும் சில முக்கிய காஷ்மீர் 'விடுதலை' இயக்கங்கள் உடனடியாக வரவேற்றன. அத்துடன் காஷ்மீர் விடுதலை அமைப்புக்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் பாகிஸ்தான் சென்று அங்குள்ள காஷ்மீர் விடுதலைப் போராளிகளுடன் அமைதி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தலாம் எனவும் இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைகளின் மூலம் மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெற்று காஷ்மீரில் பாகிஸ்தான் படைத்துறையின் ஊடுருவல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி விடலாம் என இந்தியா எதிர்பார்க்கிறது. காஷ்மீரில் ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலை இயக்கங்களுடன் தொடர்ந்து போராடுவதனால் உறுதியான பலன் எதுவும் கிட்டப் போவதில்லை.

அதன் மூலம் ஒரு வாள் வீச்சில் வெட்டி வீழ்த்திச் சாதிக்க முடியாததை



இந்தியா இலங்கைக் கடற்படைக்கு வழங்கிய கப்பல் இது தான்

ஆயிரம் சிறு காயங்களை ஏற்படுத்துவதன் மூலமாகச் சாதித்து விடலாம் என்னும் பாகிஸ்தானின் அணுகுமுறைக்கு காலப்போக்கில் தான் பலியாகி விடக்கூடாது என இந்தியா கருதுகிறது. ஒரு பொருளாதாரச் சக்தியாகத் தான் வளர்ந்து வரும் இந்த வேளையில் சுற்றுப் பிராந்தியத்திலும் தனது எல்லைகளிலும் முரண்தணிப்பை ஏற்படுத்துவது இப்பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான பிரதான தந்திரோபாயமாகப் பார்க்கின்றது இந்தியா.

இதற்கு இன்னொரு முக்கிய உதாரணமாக இரு வாரங்களுக்கு முன்னர் மியன்மாரின் இராணுவ ஆட்சிபீட இரண்டாம் நிலைத் தளபதியின் டெல்லி வருகையைக் குறிப்பிடலாம்.

இந்தியாவிற்கும் மியன்மாருக்குமிடையில் நீண்ட காலமாக பல விடயங்களிலும் பெரும் முரண்பாடுகள் நிலவி வந்துள்ளன. மியன்மாரின் கொக்கோஸ் தீவுகளில் சீனா ஒரு கடற்படைக் கண்காணிப்புத் தளத்தை நிறுவியது, மியன்மாரில் உள்ள கேரன் போன்ற இனக்குழுக்களின் விடுதலை இயக்கங்களுக்கு இந்திய உளவுத்துறை வழங்கிய ஆதரவு, இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் போராடி வரும் நாகா, அஸாமிய மற்றும் மிசோ இனவிடுதலை அமைப்புக்கள் மியன்மாரைப் பின்தளமாகப் பயன்படுத்துவது என இரு நாடுகளுக்குமிடையில் பல முரண்பாடுகள் உள்ளன. இவற்றையெல்லாம் தூக்கி ஒரு பக்கம் வைத்து விட்டு மியன்மாரின் இராணுவ ஆட்சியாளருடன் பேசி ஒரு முரண்தணிப்பை ஏற்படுத்தி ஒரு பொருளாதாரக் கூட்டமைப்பை ஏற்படுத்த இந்தியா இப்பொழுது முயற்சிக்கிறது. இதன் காரணமாகவே முன்னர் மியன்மாரில் ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஐங் - ஸ்விங் - கீ க்கான ஆதரவையும் இந்திய மத்திய அரசு கைகழுவி விட்டுள்ளது. அத்துடன் இவ்விடயத்தில் இந்தியப் பாதுகாப்புப் படைத்துறை அமைச்சர் மியன்மாரின் இனவிடுதலை அமைப்புக்களுக்கு வெளிப்படையாக வழங்கி வந்த ஆதரவையும் அடக்கி வாசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என்பதும் வெளிப்படை.

இதே வகையில் தான் இலங்கையில் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் முரண்நிலை தொடர்ந்து கொண்டிருக்குமானால் இங்கு வெளிச்சக்திகளின் தலையீடு தனக்குச் சாதகமற்ற முறையில் அதிகரிக்கலாம் எனவும் டெல்லி அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

இதிலும் குறிப்பாக சிறிலங்கா அரசுடன் தனது இராணுவ பொருளாதார உறவுகளை மேலும் பலமாக வளர்த்துக் கொள்வதற்கு தொடரும் போர்ச் சூழல் சீனாவிற்குச் சாதகமாக இருக்கின்றது எனவும் டெல்லி கவனம் கொள்கிறது.

இதனாலேயே பிரபாகரனின் கைது, நாடு கடத்தல் என்பவற்றைப் பற்றித் தாம் வற்புறுத்தப் போவதில்லை எனவும், சில அரசியல் நெருக்குதல்களால் தான் இது பற்றி இந்திய நாடாளுமன்றில் உள்துறை அமைச்சர் அத்வானி கருத்துத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று எனவும், ஈழவேந்தன் நாடு கடத்தலுக்கும் மத்திய அரசு நிலைப்பாடுகளுக்கும் சம்பந்தம் இல்லை எனவும் சிறிலங்கா கடற்படைக்கு போர்க்கப்பல் கொடுத்த விடயம் பல வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கை எனவும் டெல்லியில் உள்ளவர்கள் கூறுகிறார்கள்.

இக்கூற்றுக்களுடைய உண்மை பொய்களுக்கு அப்பால் வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைக்கும் வேலையை இந்தியா செய்யவில்லை, செய்கின்ற நோக்கமும் இல்லை என்ற கருத்தை வலியுறுத்தும் ஆர்வமே இக்கூற்றுக்களில் தொக்கு நிற்பது வெள்ளிடை மலை.



இந்தியா இலங்கைக் கடற்படைக்கு வழங்கிய கப்பல் இது தான்

கடந்த வாரம் கதிர்காமர் டெல்லி சென்றிருந்த போதும் இவ்வாறான கருத்துக்களை இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்ததாக சில செய்தி நிறுவனங்கள் எழுதியிருந்தன. (இது ஐலண்ட் பத்திரிகைக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது என்பது வேறு விடயம்.)

பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்துவதற்கு புலிகள் முன்வைத்துள்ள கருத்துக்களை ஓரளவிற்கேனும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான சமிக்ஞைகளையாயினும் செய்ய வேண்டுமென கதிர்காமரிடம் இந்திய மத்திய அரசு வற்புறுத்தியதாகத் தெரிய வருகிறது. இந்தியாவின் இந்த அவசரம் அதனுடைய கேந்திர நலன்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது தவிர்க்க முடியாததாக டெல்லி அதிகாரிகளுக்குப் படலாம். ஆனால் உண்மை நிலவரம் என்ன?

ஒன்று, 1995ஆம் ஆண்டு சந்திரிகா முன்வைத்த தீர்வுத் திட்டத்தை பேச்சுவார்த்தைக்கு ஒரு நல்ல அடித்தளமாக இந்தியா நோக்குவது போல் தெரிகிறது. அதாவது சுயநிர்ணய உரிமை என்பது தவிர்ந்த முழுமையாக சமஷ்டி ஆட்சியை புலிகள் கருத்திற் கொண்டு பேச்சுவார்த்தையில் இறங்குவார்களா என்பது டெல்லியில் உள்ள கேள்வி. சுயநிர்ணய உரிமை என்கின்ற கருத்து புலிகள்- சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைகளில் புகுமானால் காஷ்மீரில் அதன் தவிர்க்க முடியாத எதிரொலி எவ்வாறு இருக்குமென்பதை டெல்லி உணர்கிறது. சுயநிர்ணய உரிமை என்கின்ற அடித்தளமில்லாமல் ஒரு தீர்வுத்திட்டத்தை இந்தக்கட்டத்தில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வது புத்திசாலித்தனமா என்பது அடுத்த கேள்வி. இது போக புலிகளிடம் இன்று வளர்ச்சியடைந்துள்ள மரபு வழிப்படைவலுவை விட்டுக் கொடுக்கக் கூடிய வகையில் அவர்கள் சிறிலங்கா அரசுடன் பேசுவது முடியாத காரியம். இந்தப்படை வலுவின் காரணமாகவே சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு உடன்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்களிடையில் ஒரு கருத்துள்ளது.

இது வரலாற்றின் அடிப்படையில் நியாயமானதே.

இவையெல்லாம் சரி. ஆனால், பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்த சிறிலங்கா அரசை டெல்லியால் நிர்ப்பந்திக்க முடியுமா என்பது கேள்விக்குறி.

சந்திரிகாவை சில முக்கிய விடயங்களில் நிர்ப்பந்திக்கக்கூடிய சக்தி டெல்லியிடம் உள்ளதென்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், வர்த்தக ஒப்பந்தம் என்பது வேறு. புலிகளுடன் போர்த்தணிப்பை ஏற்படுத்த நிர்ப்பந்திப்பது என்பது வேறு. எதிரிக்கெதிரி நண்பன் என்கின்ற ரீதியில் கருத்தியல் வகையில் இன்று கைகோர்த்து இயங்கும் தமிழகப் பிராமணியமும், சிங்கள இனவாதமும் புலிகளை பூண்டோடு அழித்து விட வேண்டும், அழித்து விடலாம் எனத் திடமாக நம்புகின்றன. போரால் வெல்ல முடியாததை காலத்தாலும்( தமிழ் மக்களிடையில் கால நீட்சியால் ஏற்படக்கூடிய போர்க்களைப்பு,சலிப்பு), ராஜதந்திர நகர்வுகளாலும் (பிரித்தானியாவில் புலிகளுக்குத் தடையைக் கொண்டு வருவது) மதம், மூடநம்பிக்கை என்பவற்றை தமிழரிடையில் பரப்பி வேரூன்ற வைப்பதன் மூலமும் (தமிழ் தொலைக்காட்சி, சாயிபாபா, எண்சோதிடம், சினிமா இத்தியாதி) சாதித்து விடலாமென தமிழகப் பிராமணீயமும் அதனுடைய இரண்டாயிரம் ஆண்டு காலப் புத்திசாலித்தனத்தை தற்போது கற்றுத் தேர்ந்து வரும் சிங்கள இனவாதிகளும் எண்ணுகின்றார்கள். எனவே டெல்லியும் சந்திரிகாவும் புலிகளுடன் பேச வேண்டுமென முயன்றாலும் இவர்கள் எப்படியாவது கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ கடும் முட்டுக்கட்டைகளைப் போட்டு விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழ்த் தேசிய விடுதலைப்படை, இலங்கையின் வடகிழக்கை உள்ளடக்கிய அகண்ட தமிழ்நாடு ஆகியவற்றைத் தாங்கி வந்த இணையத் தளத்தைப் பற்றி போனகிழமை இந்து நாளேடு கிளப்பி விட்ட பூச்சாண்டி இதற்கு நல்ல உதாரணம். மேற்படி பம்மாத்து இணையத் தளம் பற்றிய புரளியை உண்டாக்கி இந்திய மத்திய அரசுக்கும் புலிகளுக்கும் உள்ள முரண் நிலையை கடுமையாக்கி விடுவதே இந்துவின் நோக்கம் என்பது தெளிவு.

அத்துடன் இங்கு போர்த் தணிப்புக்கு இணங்கினால் புலிகள் அதைப் பயன்படுத்தி தமது படைபலத்தை வலுப்படுத்திக் கொள்வார்கள் என்ற கூக்குரலும் வலுவாக எழுகிறது. இதனிடையில் பொறுத்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியும் குட்டையைக் குழப்பக் காத்திருக்கிறது.

புலிகளின் தலைவரை நாடு கடத்தும் பிரச்சினையை இந்திய நாடாளுமன்றில் கிளப்பி பி.ஜே.பி.அரசுக்கு நெருக்கடியை கொடுத்ததும் காங்கிரஸினுடைய இந்த அணுகுமுறை தான் எனத் தெரிய வருகிறது. காங்கிரஸ்- பி.ஜே.பி. முரணை தமிழகப் பிராமணீயம் புலிகள் விடயத்தில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தாது வாழாவிருக்கும் என்பதற்கில்லை.

இறுதியாக ஒரு உண்மையை நாம் மறக்காமலிருந்தால் சரி. அமெரிக்கா உலக வல்லரசாக இருக்கலாம். இந்தியா பிராந்திய வல்லரசாக இருக்கலாம். அவற்றிற்கு தத்தமது கேந்திர, பொருளாதார நலன்களை இலங்கையில் முன்னெடுக்க வேண்டிய தேவைகள் இருக்கலாம். அதற்காக இலங்கையில் அமைதி அவர்களுக்கு தற்போது வேண்டியதாக இருக்கலாம். அதற்காகப் பேச்சுவார்த்தை என்கிற வட்டத்தினுள் புலிகளை இட்டுச் செல்வதற்கான வழிவகைகளை அவர்கள் ஆராயலாம், நடைமுறைப்படுத்தலாம். ஆனால் இந்த விடயத்தில் எமது நியாயமான உரிமைகளுக்கான போராட்டத்தின் குறிக்கோள் மட்டுமே எமது ஒரே உரைகல்லாக இருக்க முடியும் என்பதை நாம் மறக்காமலிருந்தால் சரி.

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு: புலனாய்வுப் பிரிவின் திருகுதாளங்கள்!

– வி.ஜே.கே

மட்டக்களப்பில் டிச.17 ஞாயிறன்று தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தினால் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சமாதானப் பேரணியொன்று நடத்தப்பட்டது. இது போன்று இதற்கு முன்னர் ஓட்டோச் சங்கத்தினரும் பேரணியொன்றை நடத்தினர். உண்மையில் இவ்வாறான எழுச்சிப் பேரணிகள் மக்களுடைய உரிமைகளை வலியுறுத்தி நடாத்தப்படுவது வரவேற்கத்தக்கதே.

ஆனால் இப்பேரணிகளின் நோக்கத்தையும், அடிப்படைகளையும் குலைக்கும் வகையில் இராணுவத்தினரும், இராணுவப்புலனாய்வுப் பிரிவினரும் எப்படி தமது செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள் என்பதையும், தமது கருத்தியலை மக்களுக்குள் கொண்டு செல்ல முனைகின்றார்கள் என்பதையும் நாங்கள் ஒரு கணம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதும் நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தினால் நடத்தப்பட்ட சமாதானப் பேரணியில் "அண்ணன் நிமலன் சௌந்தரநாயகம் அவர்களை சுட்டுக் கொலை செய்தவர்கள் கொலைகாரப் புலிகளே எனத் தலைப்பிட்டு எழுதப்பட்டு, சுதந்திர மனித அபிவிருத்திக் கழகம்" என முடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்று திடீரென முளைத்து விட்டது. இத்துண்டுப்பிரசுரம் எவ்வாறு திடீரெனப் பேரணியில் ஊடுருவியது என்பது பேரணியை ஒழுங்கு செய்தவர்கள் உட்பட பலரும் தலையைப் பிய்த்துக் கொண்ட விடயமாகி விட்டது.

ஆனால், சமாதானப் பேரணி நடைபெறுவதற்கு முதல்நாள் மட்டக்களப்பு நகரில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட இராணுவப் பேரூந்து மூலம் "நீங்கள் எவ்வளவு தான் சமாதானத்துக்காகப் பேரணி நடத்தினாலும் புலிகள் உங்களை நிம்மதியாக வாழ விடமாட்டார்கள்" என்ற தொனிப்பட இராணுவத்தினர் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

உண்மையில் இவ்வாறான சமாதானப் பேரணிகள் நடத்துவதைக்கூட இராணுவத்தினர் விரும்பவில்லையென்பது இதனுடாகத் தெரிகின்றது. எனவே தான் புலிகளின் பெயரைச் சொல்லி மக்களை இவ்வாறான எழுச்சிப் பேரணிகளில் இருந்தும் அந்நியப்படுத்தப் பார்க்கின்றனர் இராணுவத்தினர்.

இதன் அடுத்த கட்டமே இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த நிதியும் அவரது சகாக்களும் சுதந்திர மனித அபிவிருத்திக்கழகம் என்ற பெயரில் நிமலனைக் கொன்றது புலிகளே என்ற துண்டுப்பிரசுரத்தை பேரணியில் ஊடுருவ விட்டது. இதுமட்டுமல்லாமல் நிமலன் சௌந்தரநாயகத்தின் கொலையைக் கண்டித்து மக்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த போதும் புலிகள் பகிஷ்கரிப்பை விரும்பவில்லை எனப் புலிகளின் போலிச்சின்னம் பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தை புலிகளின் பெயரில் வெளியிட்ட வரும் இந்த நிதி என்பவரே.

மட்டக்களப்பு நகரில் எந்தவிடத்தில் எது நடந்தாலும் நிதி குழுவினர் சனத்தோடு சனமாக இவர்கள் நின்று கொள்வார்கள். நிதி நீண்டகாலமாக புலிகளுடன் இருந்து விட்டு இராணுவத்தில் சரணடைந்து தற்போது புளொட் மோகனுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றார். இவர் புலிகளுடன் நீண்டகாலமாக இருந்தவர் என்பதால் புலிகளுடைய நடவடிக்கைகள் குறித்து நன்கு பரிச்சயமுள்ளவர். இதனால் தற்போது இராணுவ புலனாய்வுப் பிரிவு புலிகளுக்கெதிரான முறியடிப்புப் போரில் இவரை தீவிரமாகப் பயன்படுத்தி வருகிறது.

அண்மைக் காலமாக இராணுவத்தினர் புலிகளுக்கெதிரான முறியடிப்புப் புலானாய்வுப் போரை வெகுவாகப் பலப்படுத்தியிருப்பதுடன் பரவலாக்கியிருப்பதும் இராணுவ நகர்வுகளிலிருந்து நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த இருவருடங்களிலேயே இப்புலனாய்வுப் போர் பலம் பெற்று வருகிறது.

சிறிலங்காவின் பிரதான புலனாய்வுப் பிரிவாக இருந்த NIB (தேசிய புலனாய்வுச் சபை) எதற்கும் வக்கற்றதாக இருந்து வந்தது. 1998ம் ஆண்டு நடுப்பகுதியில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் ஆலோசனைப்படி தேசிய புலனாய்வுச் சபை (NIB) என்பது மாற்றப்பட்டு , உள்ளக புலனாய்வுப் பணிப்பாளர் (Director Of Internal Intellignt), வெளியகப் புலனாய்வுப் பணிப்பாளர் (Director Of External Intellignt/ Director Of Foreign Intellignt) என்ற இரு புலனாய்வுப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்குப் பொறுப்பாக முன்னாள் பொலீஸ்மா அதிபர்களான பிராங் டி சில்வா, சிறி ஹேரத் என்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.


நிதி மற்றும் அரவது கூட்டாளிகளுடன்

இது NIB ஐவிடக் கூடுதலாக வேலைசெய்வதாகச் சொல்லப்படுகின்றது. ஒருவகையில் இவர்கள் புலிகளின் செயற்பாடுகளுக்கு சவாலாகக்கூட இருந்து வருவதாகச் சொல்லப்படுகின்றது. இப்புலனாய்வுப் பிரிவு பொலீஸ் பிரிவுக்குள்ளேயே இருக்கின்றது. இதுவே நாட்டின் பிரதான புலனாய்வு நிறுவனமாகும். இதைவிட பொலீஸ் தமது வேலைகளை இலகுபடுத்துவதற்காக CID, TID,CSU என்று பல பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இதே போன்று இராணுவத்திலும் Military Of Intellignt Corps பிரிவுள்ளது. ஸ்ரீலங்கா இராணுவத்திலுள்ள இருபது பிரிவுகளில் MIC என்பதுவும் ஒரு பெரும் பிரிவாகும். இதில் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் (Director Of Military Intellignt) பிரிவு ஒன்றுள்ளது. இதற்கு பிரிகேடியர் கென்றி விதாரண என்பவர் பொறுப்பாக இருக்கின்றார். இதன் ஒரு பிரிவே மட்டக்களப்பில் பற்பொடிக் கம்பனி முகாமில் செயற்பட்டு வருகின்றது. லெப்டினன்ட் கருணாரெத்தின இதற்குத் தற்போது பொறுப்பாக இருக்கின்றார்.

இந்த பற்பொடிக்கம்பனி முகாமிலுள்ள இராணுவப்புலனாய்வுப் பிரிவினருடனே நிதி குழுவினரும் இருந்து செயற்படுகின்றனர். புளொட்மோகனின் குழுவைச் சேர்ந்த இவர்கள் இராணுவத்தினருக்கு புலனாய்வுப் போரை இலகுவாக்கி கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் இவர்கள் புலிகளுக்கு ஏதோ ஒரு வகையில் சவாலாக இருந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். மட்டக்களப்பு நகரில் கடைசியாக புலிகளின் பிஸ்டல் குழுவைச் சோந்த பிறைசூடி என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதுவும் நிதி குழுவினராலே. அதன் பின் மட்டக்களப்பு நகரில் புலிகளின் எந்தவிதமான பிஸ்டல் தாக்குதல்களும் இடம் பெறவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**தான் பல்கலைக்கழகத்தில் சிற்றூழியராக வேலை செய்து கொண்டிருந்த போது அடிக்கடி தங்களுடைய வேலைத் தளப் பகுதிக்கு வந்து பார்த்துச் சென்ற ஒருவரை தான் பிடிபட்டு களுத்துறைச் சிறைச்சாலை தடுப்பு முகாமில் இருந்த போது அங்கு கைத்துப்பாக்கியுடன் கண்டதென்பது தான் அவர் கூறிய அதிர்ச்சியான செய்தி.**

இவர்கள் தங்களுடைய வேலைகளை மக்கள் மத்தியிலும் வெகு சாமர்த்தியமாக நகர்த்தியிருக்கின்றனர். அண்மையில் களுத்துறை சிறையிலிருந்து விடுதலையான இளைஞர் ஒருவரைச் சந்தித்த போது அவர்கூறிய தகவல் அதிர்ச்சியூட்டக்கூடியனவாக இருந்தன.

தான் பல்கலைக்கழகத்தில் சிற்றூழியராக வேலை செய்து கொண்டிருந்த போது அடிக்கடி தங்களுடைய வேலைத் தளப் பகுதிக்கு வந்து பார்த்துச் சென்ற ஒருவரை தான் பிடிபட்டு சிறைச்சாலை தடுப்பு முகாமில் இருந்த போது அங்கு கைத்துப்பாக்கியுடன் கண்டதென்பது தான் அவர் கூறிய செய்தி.

விற்பனை முகவர்கள், வியாபாரிகள் போன்றவர்களுக்-கூடாகவும் இவர்கள் தங்களுடைய புலனாய்வுப் போரை விரிவாக்கியுள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல ஹொட்டல்களும் இதற்குத் தளமாகப் பயன்படுகின்றது. இந்த ஹொட்டல்களில் மாலை நேரத்தில் வந்து மப்படித்துவிட்டு சிங்களத்தில் அளவளாவுவது தங்களுக்கு பெருமையென நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பலர்.

சில அதிகாரிகளின் வீடுகளிலும்கூட விடுமுறை தினங்களில் இராணுவத்தினரின் செலவில் விருந்து உபசாரம் நடக்கின்றது. இராணுவத்தினர் தங்கள் வீடுகளுக்கு வந்து போவது பெருமையென நினைக்கின்ற அதிகாரிகளும் இருக்கத் தான் செய்கின்றார்கள்.

மட்டக்களப்பில் சில கணணி கற்கை நிலையங்கள் இருக்கின்றன இந்நிலையங்களின் அதிகாரிகள் சிலர் இராணுவத்திற்காக வேலைகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இராணுவம் எப்பகுதிக்கும் சென்று வர விசேட அடையாள அட்டைகளை வழங்கியிருக்கிறது. இவ்வாறாகப் பல வழிகளிலும் இராணுவத்தினர் மக்களுடன் மக்களாக ஊடுருவியுள்ளனர். இந்த வகையில் இராணுவத்தினர் வைக்கும் விருந்துபசார்மும் அவர்கள் தரும் அடையாள அட்டையுமே இவர்களுக்கு பெரிதாக இருக்கின்றதேயொழிய தமிழ் மக்களுடைய நலன்களல்ல.

இராணுவத்தினருக்கு இரண்டு விடயங்களுக்காக வீர விக்கிரம விபூசண என்ற அதியுயர் விருது வழங்கப்படுகிறது. ஒன்று புலிகளின் முற்றுகையிலிருந்து படையணியொன்றை மீட்பது. இரண்டு குறைந்த படையணியுடன் இராணுவ நகர்வொன்றைச் செய்து வெற்றியீட்டல். இவ்வாறு வெற்றியீட்டியவர்களுக்கே இந்த விருது வளங்கப்படுகின்றது. இன்று வரையும் பதின்மூன்று பேருக்கே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் வீர புருஷர்களாக மதிக்கப்படுகின்றார்கள்.


மட்டக்களப்பிலும் புலிகளிடம் இருந்து மக்களை மீட்கும் போரில் நம் தமிழ் பிதாமகர்களும் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்கு சிங்கள அரசு இவர்களுக்கு விபூஷண விருது வழங்குகின்றது. ஆனால் தமிழர்களைக் கொல்ல இராணுவத்திற்கு உதவும் தமிழர்களுக்கு இந்த சிங்கள அரசும், இராணுவமும் என்ன விருது கொடுக்கப் போகின்றது என்பதையும் விருது வழங்கும் பட்டியலில் யார் யார் இருக்கிறார்கள் என்பதையும், தமிழ் மக்கள் மத்தியில் என்ன புருஷர்களாக இவர்கள் மதிக்கப்படப் போகின்றார்கள் என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# பீற்றர் ஹெய்னின் பேச்சும் கதிர்காமரின் மூச்சும்.....!

இலங்கைக்கு பிரிட்டிஷ் உதவி வெளிநாட்டமைச்சர் பீற்றர் ஹெயின் கடந்த மாதம் வந்திருந்த போது தெரிவித்திருந்த சில கருத்துக்கள் இங்குள்ள அரச, அரச சார்பு மற்றும் இனவாத சக்திகளிடையே பலத்த



அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல.

சமாதானத்திற்கு எதிராக குரலெழுப்புபவர்களை 'டைனோசர்கள்' என்று வர்ணித்த அவர், புலிகளுக்கு அறிவுறுத்தும் விதத்தில் தெரிவித்த ஒரு கருத்து மிகவும் முக்கியமானது. 'ஐ.ஆர்.ஏ. போல புலிகளும் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டிலிருந்து தனியாகப் பிரிந்து ஒரு தமிழ் அரசு உருவாக்குவதை ஐரோப்பாவோ, அமெரிக்காவோ, இந்தியாவோ அங்கீகரிக்கப் போவதில்லை. ஆனால் தமிழ் மக்களின் அன்றாட துன்ப துயரங்களுக்கு காரணமான பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதையும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் என்று தெரிவித்திருந்தார்.

கொழும்புப் பத்திரிகைகளிலும், பிற தொடர்பு சாதனங்களிலும் பிரிட்டிஷ் கவுன்சிலில் இவர் ஆற்றிய இவ்வுரை பற்றிய செய்திகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டிருந்தன.

ஆனால், ஆச்சரியப்படும் விதத்தில் அரசாங்கம் எந்தக் கருத்தும் சொல்லவில்லை. ஒருவேளை அவர் சொன்னதில் உள்ள நியாயத்தை அரசாங்கமும் புரிந்து கொண்டுவிட்டதோ என்னவோ என்று தோன்றியது.

ஆனால் கிட்டத்தட்ட ஒரு மாத காலத்தின் பின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் இதற்குப் பதிலளித்திருக்கிறார்.

கதிர்காமரைப் பொறுத்தவரை வெளிநாட்டு விவகாரம் என்பது தான் நினைப்பதற்கு ஏற்ற விதத்தில் கருத்துத் தெரிவிக்காத அல்லது ஒத்துவராதவர்களை விளாசித்தள்ளுவது தான் என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. எல்லா வெளிநாடுகளும் புலிகளைத் தடை செய்ய வேண்டும். அப்படித் தடை செய்யாவிட்டால் அவர்களுடனான தமது உறவில் விரிசல் ஏற்படும் என்று சண்டித்தனக் கோரிக்கை விட்டுத்திரியும் அமைச்சர் கதிர்காமர் எங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருங்கள் என்று பிற்றர் ஹெய்னின் பேச்சுக்குப் பதிலளித்திருக்கிறார்.

அமைச்சர் கதிர்காமரின் அகராதியும் கருத்துக்களும் விசித்திரமானவை: அவருக்கு மட்டுமே புரியக்கூடியவை.

உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாதீர்கள்: எங்களை எங்களது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விட்டு விடுங்கள் என்று கோரிக்கை வைப்பார் அவர். பிறகு அதே அவர், புலிகளை உங்கள் நாடுகளில் தடை செய்யுங்கள் என்று கோரிக்கை எழுப்புவார். அவரது அரசாங்கம் இந்தியா முதல் அமெரிக்கா வரை எல்லா நாடுகளிடமும் பணமும் ஆயுதங்களும் வாங்குவதற்கு காரணமாக புலிகளின் பிரச்சினையையே பிரச்சாரப்படுத்துவார்கள். அப்படிப் பிரச்சாரம் செய்யும் போதெல்லாம் உள்நாட்டுப் பிரச்சினையில் சம்பந்தப்படுமாறு தான் அவர்களை அழைக்கிறேன் என்று அவருக்குத் தோன்றுவதில்லை.

கதிர்காமருக்கும் அவரது அரசுக்கு எது தேவையோ அதை மட்டும் செய்யும் வரை வெளிநாட்டு அரசுகள் நியாயமானவை. அவை அதற்கும் மீறி ஏதாவது சொல்லிவிட்டால் திடீரென அவை நியாயமற்றவை ஆகிவிடும்.

இதிலே இன்னொரு சிரிப்பூட்டும் விடயம் என்வென்றால், கதிர்காமருக்கு பிற்றர் ஹெய்னின் பேச்சில் கோபம் ஏற்பட்டதற்கு காரணம் அவர் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசியது தான்.



கதிர்காமருக்கும், தென்னிலங்கை இனவாதிகளுக்கும் பாரம்பரிய இடதுசாரிகளுக்கும் இருந்த ஒரு நோய் தொற்றிவிட்டிருக்கிறது. சுய நிர்ணய உரிமை என்றாலே பிரிந்து போவது தான் என்ற முடிவுக்கு அவர்களாகவே வந்துவிடுகிறார்கள். விவாகரத்து உரிமை இருந்தால் குடும்பங்கள் பிரிந்து போய் விடும் என்று ஐம்பது வருடங்களுக்கு முன்பு கத்தியவர்கள் போல கத்துபவர்கள் இவர்கள்.

சுயநிர்ணய உரிமை பிரிந்து போதலுக்கு வழிவகுத்துவிடும் என்பதால் அதைப் பற்றியெல்லாம் தமது நண்பர்கள் பேசாதிருக்க வேண்டும் என்பது அவரது கோரிக்கை. இந்தியாவில் பிரிந்து போதல் இல்லாமலே பெடரல் அமைப்பின் கீழ் பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடிய விதத்தில் அரசியலமைப்பு சட்டரீதியான வழிவகைகள் செய்யப்பட்டிருப்பதாக அவர் பிரிட்டிஷ் அமைச்சருக்கு அரசியல் கற்பிக்கிறார். இலங்கையில் பெடரல் அமைப்பு கொண்டு வரப்பட்டு பிரச்சினை தீர்க்கப்படலாம் என்று அமைச்சர் கதிர்காமர் சொல்வதாக நாங்கள் இதை எடுத்துக்கொள்ளலாம்.

அப்படியென்றாலும் சுயநிர்ணய உரிமைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

அருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல அமைச்சர் பாய்ந்து விழுந்திருக்கிறார். கிட்டத்தட்ட ஒரு மாத காலத்துக்குப் பிறகு பதில் சொல்லும் போதும் அவருக்கு நிதானம் வரவில்லை. பிற்றர் ஹெய்ன், தெளிவாகவே பிரிவினையை ஆதரிக்க முடியாது என்று சொல்லி விட்டுத்தான், சுயநிர்ணய உரிமையைப் பற்றி தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணப்படுவது அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தினார் என்பதற்காக பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்துக்களை சும்மா தூக்கி எறிந்துவிட முடியாது. எது நடைமுறைச் சாத்தியமென்று அவர் கருதினாரோ அதை அவர் சொல்லியிருக்கிறார். கதிர்காமருக்கு ஒரு கருத்தை எதிர்கொள்ளக் கூட முடியாத அளவுக்கு அம்மா விசுவாசம்: சிங்கள இனவாதிகளிடம் கௌரவம் பெறும் ஆசை. சும்மா சொல்லக்கூடாது. இப்படியெல்லாம் செயற்பட்டபடியால் தான் அவருக்கு இரண்டாவது தடவையும் தேசியப் பட்டியலில் இடமும் அதே அமைச்சும் கிடைத்தது.

ஆனால் எந்தப் பிரிட்டனை அவர் 'வாயை மூடிக் கொண்டிரு' என்று சொல்லாமற் சொன்னாரோ அதே பிரிட்டனை 'புலிகளை தடை செய்யுங்கள்' என்று கேட்க அவர் வெட்கப்படவில்லை.

இப்போது கதிர்காமரின் இந்தக் கோரிக்கைக்கான பதிலை பெறுவதற்கு கதிர்காமர் இன்னும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறது பிரிட்டிஷ் துாதரகம்.

'பயங்கரவாதிகள்' என்ற பட்டிலில் இடப்பட தகுதியானவர்கள் என்பதால் அவர்களை தடைசெய்யுங்கள் என்று கோரும் கதிர்காமரின் அரசாங்கம் இப்போது பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்திருக்கிறதே அது எப்படி?

அதுவும், இதே அமைச்சர் தனது வாயாலேயே அறிவித்ததை இந்தப் பத்தியில் சென்ற தடவை சுட்டிக் காட்டியிருந்தோம்.

ஆக, பயங்கரவாதிகளுடன் ஒரு அரசாங்கம் பேசப் போகிறதா? எதைப்பற்றி,

போதைவஸ்து கடத்தல் பற்றியா? அல்லது எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைக் கொலை செய்வது பற்றியா? சர்வதேச விமானக் கடத்தல், கடற்கொள்ளை... எதைப் பற்றிப் பேசப் போகிறது அரசு?

* * *

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கான பாரிஸ் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா ஒரு முக்கிய தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, 'விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்துவர அரசாங்கம் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட போதும் ஒரு வருடத்தின் பின்னரே அவர்கள் அதற்குப் பதிலளித்துள்ளார்கள்' என்று தெரிவித்திருக்கிறார் அவர். இந்தப் பேச்சைக் கேட்கின்றவர்களுக்கு ஒருவேளை சிரிப்பதா அழுவதா? என்று தோன்றியிருக்கலாம். உதவி வழங்கும் நாட்டுப் பிரதிநிதிகளுடன் மாநாட்டுக்கு முன்பே நாட்டின் தலைரான தானே போய் நின்று பேசி உதவியைப் பெறும்' முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதிக்கு அவர்களை, நம்பவைப்பதற்காக திரும்பத் திரும்பச்



சொன்ன சோடிப்புக் கதைகளால் எல்லாமே மறந்து விட்டது போலும்.

கடந்த மாவீரர் தினப் பேச்சின் போது பேச்சுவார்த்தைக்கு பிரபாகரன் அழைப்பு விட்டதை, ஆனையிறவு வீழ்ச்சியின் பின் அழைப்பு விட்டதை, பலாலி முகாம் தடுமாறிய போதும் பேச முடியும் என்றதை, எல்லாம் அரசாங்கம் மறந்து விட்டிருக்கலாம். தாம் அப்போதெல்லாம் பேச்சுவார்தைக்கு தயாரில்லை என்று பகிரங்கமாகவே தெரிவித்து வந்தது மறந்து போயிருக்கலாம். ஆனால், புலிகளை பேச்சுவார்த்தைக்கு கூட்டிவர 'கடும் பிரயத்தனம்' செய்ததாக எப்படி அவரால் கூற முடிந்தது?

யார் முயற்சி எடுத்தார்கள்? என்ன பிரயத்தனத்தை அவர் மேற்கொண்டார்?

புலிகளின் அழைப்பின் பேரில் சொல்ஹெய்ம் வன்னி போகும் வரை அரசு என்ன முயற்சி எடுத்தது?

உதவி வழங்கும் நாடுகள், தாம் ஏற்கெனவே வழங்கத் தீர்மானித்ததை நடைமுறைப்படுத்த கூட்டும் கூட்டத்தில்



தாம் சமாதானத்துக்கு தயாராகவே இருந்தோம் என்று கூறுவது அவசியம் தான் என்பதை மறுக்கவில்லை. அந்த நாடுகளும் சமாதானத்தை விரும்பாத ஒருவருக்கு நிதி உதவி வழங்குவதை வேறு எப்படித்தான் நியாயப்படுத்த முடியும்?

ஆனால், இப்படியும் ஒருவரால் உண்மைக்குப் புறம்பாக பேச முடியுமா? ஆதாரம் இல்லாமல் எதை வேண்டுமானாலும் ஒரு அரசியல்வாதி பேசி விட்டுப் போகலாம்.

ஆனால் ஜனாதிபதி.......? அவர் பொய் பேசலாமா?

நன்றி - நூலகத்திட்டம்



– நேசன்

# மலையகம்: இளம் சந்ததியினர் உணர்ந்து செயற்பட வேண்டிய தருணமிது!

நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் நடைபெறப்போகும் சமாதானப் பேச்சுக்களில் இனப்பிரச்சினைத் தீர்வு, தமிழீழப் பிரதேசத்தின் சமாதான சகவாழ்வு, இயல்பு நிலை பற்றிப் பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வருடாந்த மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என அறிவித்ததன் பின்னர் நீண்ட மௌனத்தின் பின்னர் நிபந்தனைகளுடன் கூடிய சமரசப் பேச்சுக்குத் தயார் என அரசு அறிவித்துள்ளது. அரசின் இம் முனைவு முரண்பாடுகளின் மொத்த உருவமான ஒரு பேரினவாத அரசு, பொருளாதார ரீதியில் வங்குரோத்தடைந்துவிட்ட நிலையில், நாட்டின் வரவு செலவு, திட்டத்தைக்கூடச் சமர்ப்பிக்க முடியாத நிலையில், அரச ஊழியர்களுக்கு பிரித்தானிய தனியார் கம்பனிகளிடம் கடன் வாங்கும் நிலையில் வெளிப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் இனவெறியூட்டப்பட்ட ஜே.வி.பி உள்ளிட்ட சிங்கள பௌத்த இனவெறிக் கும்பல்களின் கடுமையான நெருக்குதலையும் அரசு சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னர் கடந்த ஒரு மாதகாலமாக ஐரோப்பிய நாடுகளில் ஒடேந்தி திரியும் ஜனாதிபதி சந்திரிகா தாமதமாக வெளியிட்ட சமாதான முனைப்பு இதயசுத்தியானதல்ல என்பதோடு அரசின் கஜானாவை நிரப்பிக் கொள்வதற்கான வழிமுறைகளில் ஒன்று என்பதையும் எவரும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். இந்நிலையில் எப்படியோ ஒரு சமாதான முனைப்பு ஏற்படும் போது ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள் தொடர்பான திட்டவட்டமான அதிகார பகிர்வுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படலாம். விடுதலைப் புலிகள் நிர்ணயகரமான தமது பேரங்களில் தமிழீழ மக்களின் நலன்களைப் பிரதிபலிப்பார்கள். அஸ்ரஃப் இல்லாத முஸ்லிம் காங்கிரஸ் பலவீனமான குரலிலாவது முஸ்லிம் மக்களின் நலனைப் பிரதிபலிக்கும். ஆனால், மலையகத் தமிழர்களின் நிலையென்ன?

கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளாக மலையகத்தைத் தாயகமாய் கொண்டு வாழ்ந்து வரும் மலையகத் தமிழர்களை அரசு வதிவிட அடையாள அட்டை கொடுத்து தற்காலிக வதிவிடப் பிரசைகளாக அடையாளம் காட்ட முனைகிறது. பிரசாவுரிமையற்ற 6லட்சம் பேரின் கதி, இந்திய கடவுச்சீட்டு பெற்றோரின் கதி, திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், திட்டமிட்ட குடியேற்ற முற்றுகைத் திட்டம் என்பனவற்றால் சகல பரிமாணங்களிலும் மலையகத்தமிழர் துண்டாடப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் வெறும் தொழிற்சங்க அரசியல் மூலமும், பாராளுமன்ற பதவிகள் மூலமும் மலையகத் தமிழரின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க முடியாது என்ற யதார்த்தம் தற்போது புரிந்து கொள்ளப்படல் வேண்டும். மலையக அமைப்புக்கள் ஒன்றுபடுவது, மக்கள் நலன்களுக்காக பொதுப் பிரகடனங்களை வெளியிடுவது. அதற்காகப் போராடுவது என்பதெல்லாம் பொய்யாய் போய்விட்டன. மீண்டும் மீண்டும் கூடி கெட்டும், கெடுத்தும் வரலாறு படைத்த மலையக அமைப்புகளிடையே மக்கள் நலன் சார்ந்த அரசியல் செயல்பாட்டை எதிர்பார்ப்பது சாத்தியமானதல்ல.

ஆனால், வரப்போகும் சமரசப் பேச்சுக்கள் இன நெருக்கடியின் வரலாற்றில் தீர்க்கமான ஒரு திருப்புமுனையாக அமையும். எனவே இத்திருப்பத்தில் இருந்து மலையக தமிழரது அரசியல் சுயநிர்ணய உரிமை, அதிகாரப் பரவலாக்கலில் அவர்களின் இடம், அவர்களது வாழ்வாதார பிரதேசம் மீதான உரிமை, திட்டமிட்ட இன அழிப்பு முயற்சிகளான குடியேற்றம், சிங்கள மயமாக்கம், குடும்பதிட்டம் என்பனவற்றை தடுத்து நிறுத்தல் என்பன தொடர்பில் ஆகக் குறைந்ததோர் அடித்தளமாவது இப்பேச்சுக்களில் இடம்பெற வேண்டும்.

இதற்கான ஆரம்பக் கலந்துரையாடல்களும், விவாதங்களும் மலையகம் தழுவிய அளவில் தொடங்கப்படல் வேண்டும். தொழிற்சங்க அரசியலுக்கு மேலான வெகுசன அரசியல் தளத்தில் இவ்விவாதங்கள் தொடங்கப்பட வேண்டும். தனிமனித நலன்களுக்காக மக்கள் நலனைப் பேரம்பேசிவிடும் சந்தர்ப்பவாத பிற்போக்கு தலைமைகளுக்கு அப்பால், இளைஞர்கள், சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் இவ்விவாதங்களுக்கு வழிகாட்ட வேண்டும். இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று காணப்படுமிடத்து மலையகத் தமிழர்கள் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவோ, ஒதுக்கி வைக்கப்படவோ முடியாது. அவ்வாறு கைவிடப்பட்டால் அதன் அரசியல் உதைப்பு எதிர்கால மலையகத்தை இன்னொரு எரிமலையாக மாற்றி விடலாம்.

இளம் சந்ததியினர் உணர்ந்து செயற்பட வேண்டிய தருணமல்லாவா இது.

---

# முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்க!

சம்பள உயர்வு எனக் கூறி தோட்டத் தொழிலாளர்களை மேலும் படு குழியில் தள்ளும் ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய தொழிற்சங்க தலைமைகள் முன்வர வேண்டும்.

இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் தோட்டத் தொழிற்சங்கங்கள் கடந்த ஜூன் 20ம் திகதி செய்து கொண்ட ஒப்பந்தம் மிகவும் மோசமானது. எமது நாட்டில் ஆகக் கூடிய அளவு உழைத்தும் ஆகக் குறைந்த நாட் கூலியை பெறும் நாம் படும் கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

தற்போது வழங்கும் அடிப்படைச் சம்பளமான ரூபா. 101.00 உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க போதுமானதாக இல்லை. வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு வழங்கிய தொகையை நிறுத்தி தேயிலை விற்பனை போனஸ் என்ற பெயரில் நாளொன்றுக்கு ரூபா 6.00 வழங்குவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

மாதத்தில் 96 வீதத்திற்கு மேல் வேலை செய்தால் நாளொன்றுக்கு ரூபா 15.00 ம் - 85 வீதம் முதல் 96 வீதம் வரை வேலை செய்தால் நாளொன்றுக்கு ரூபா 8.00ம் வழங்கும் முறை ஓர் பெரிய கண்துடைப்பாகும். இம் முறையால் பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தவறுதலாக ஒரு நாள் பெயர் விடுபட்டால் பெரிய தொகையை இழக்க வேண்டியுள்ளது.

இவ்வொப்பந்தப்படி 2 வருடங்களுக்கு சம்பள உயர்வு கேட்க முடியாது என்பது ஓர் கேளிக்கூத்தாகும். நாளுக்கு நாள் உயர்ந்துசெல்லும் வாழ்க்கைச் செலவை எப்படி சமாளிப்பது? 2 வருடங்களுக்கும் வாய் மூடி மௌனிகளாக பசி பட்டினியிலும் இருக்க வேண்டும்?

அது மட்டுமா, சம்பள உயர்வு கோரிக்கை சம்பந்தமாக சம்பள நிர்ணய சபையிலும் பிரேரனைகள் முன்வைக்க முடியாதாம்.

சம்பள உயர்வு கோரி பிரார்த்தனையில் ஈடுபட்ட நாட்களின் தோட்ட நட்டத்தையும் எமது கொடுப்பனவுகளிலிருந்து கழித்துக் கொண்டது பெரிய அநியாயமானதாகும்.

நாணய மதிப்பு குறைக்கப்பட்டதற்காக கடந்த ஆகஸ்ட் மாத முதல் ரூபா 400 வழங்க வேண்டுமென அரசு வர்த்தமானி



மூலம் வெளியிட்ட கொடுப்பனவும் இந்த படு மோசமான ஒப்பந்தத்தால் கிடைக்கவில்லை.

ஆகையால், சகல தொழிலாளர்களையும் பாதிக்கும் இவ்வொப்பந்தம் உடன் ரத்துச் செய்ய வேண்டும். அதற்காக, இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தொழிற்சங்க தலைமைகள் உடன் நடவடிக்கை எடுத்து நியாயமான சம்பள உயர்விற்கு முன்வர வேண்டுமென நாம் கடமை உணர்வுடன் கோருகின்றோம்.

---

# துப்பாக்கிச் சமரில் பலியான பெண்!

வவுனியா பூந்தோட்டம் சந்திப்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

ரெஜீஸ்வரி



ஒன்றில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார். பிற்பகல் 3 மணியளவில் வவுனியா பூந்தோட்டம் அ.த.கலவன் பாடசாலையில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தர சாதாரண தரப்பரீட்சை கடமைக்காக நின்ற பொலிசார் கால் நடையாக திரும்பிக் கொண்டிருக்கும் போது அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தின் போது பதில் சூட்டை பொலிசாரும் நடத்தியுள்ளனர். இருதரப்பினர்கிடையிலும் நடைபெற்ற துப்பாக்கி சூட்டின் போதே இந்தப் பெண் பலியாகியுள்ளார்.

தம்பனச் சேலைப் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ரெஜீஸ்வரி 6 வயதுடைய யோகின் பெனாண்டோ, இரண்டரை வயதுடைய பேக்கின் பெனாண்டோ என்ற இரண்டு பிள்ளைகளின் தாயானவரே பலியாகியுள்ளார். சம்பவம் நடைபெற்ற போது இவர் தனது இரண்டரை வயதுடைய பேக்கிங் பெனாண்டோவையும் அழைத்துக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் நகரக்கடைக்கு சென்று பொருட்களை வேண்டிக் கொண்டு திரும்பி வரும் வேளையே இந்த பரிதாபம் நடைபெற்றுள்ளது. இவர் தம்பன சோலையில் உள்ள முன் பள்ளி ஆசிரியர் என உறவினர்கள் தெரிவித்தனர். இவரது கணவன் மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் செய்து வருகின்றார்.


இவரது முதுகை துப்பாக்கி ரவை துளைத்துள்ளது. தாயார் உயிரிழந்திருக்க அவரது குழந்தை பக்கத்திலிருந்ததை பார்க்கும் போது பரிதாபமாக இருந்ததென நேரில் கண்டவர்கள் கூறினர்.

இந்த சம்பவத்தின் போது வேறு எரும் பாதிக்கப்படவில்லை. சம்பவ இடத்துக்கு மாவட்ட நீதிபதி எம் இளஞ்செழியன் அவர்கள் நேரில் வந்து விசாரணைகளை நடத்தியுள்ளார். சம்பவ இடத்தில் உள்ள வியாபார நிலையங்கள் பதட்டம் காரணமாக மூடப்பட்டன. மேலதிக படையினரும் வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு தமிழீழப் போராளியின் கதை -10



## உயிருக்கு உத்தரவாதமில்லாத பயணம்

### படகுப் பயணம்

படகு இரவில் புறப்பட்டது. படகு புறப்பட்டு 10 நிமிட அளவில் எனக்குச் சத்தி வரும் போல இருக்கின்றது என அவருக்குச் சொன்னேன். அவர் அப்போதும் சிரித்துக் கொண்டிருந்தார். அரை மணித்தியாலத்திற்கு மேல் என்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. வெளியில் சத்தி எடுக்கத் தொடங்கினேன். படகின் வேகத்திற்கும் அலைகளுடன் படகு மோதும் போதும் காற்றின் வேகத்திற்கும் ஈடு கொடுக்க முடியாமல் நான் எடுக்கும் சத்தி வெளியால் விழாமல் திரும்பவும் படகுக்குள்ளேயே விழுந்தது. அலைகளுடன் மோதும் போது கடல் தண்ணீர் படகினுள் வந்து கொண்டிருந்தது. என்னுடன் வந்த தோழர் மாத்திரமல்ல ஈ.பி.ஆர்.எல்.எஃவ் தோழர்களும் சத்தி எடுக்கத் தொடங்கினர். படகை ஓட்டி வந்தவர்களைத் தவிர இன்னும் இரண்டு பேர் மட்டுந்தான் படகு ஓடும் போது படகை நடுக்கடலில் நிறுத்தி விட்டு பாணும் தேநீரும் சாப்பிட்டனர். இவ்வாறான சிறிய படகில் பயணம் செய்யும் போது அவதானமாயிரக்க வேண்டும். ஏனெனில் அலையுடன் படகு மோதும் போது அலை படகைத் தூக்கி எறியும். ஆகவே, படகை எப்போதுமே பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் படகிலிருந்து கடலுக்குள் விழுந்து விடுவோம். உப்புத் தண்ணீர் எங்கள் மீதும் ஒவ்வொரு விநாடியும் விழுந்தது. படகில் ஒரு பகுதியை ஒவ்வொருவரும் பிடித்துக் கொண்டு இருந்தனர். இந்த வேளையில் சத்தியும் எடுத்துக் கொண்டிருந்தேன். படகில் பிடிப்பது என்பது ஒன்றும் சுலபமானதல்ல. கை பிடிப்பதற்கு என்று ஒன்றுமே கிடையாது. படகின் அமைப்பும் பயணம் செய்வதற்கென்று அமைக்கப்பட்டதல்ல. ஆரம்பத்தில் ஒவ்வொரு அலையுடன் படகு மோதும் போது நானாகவே தயார் நிலையில் எழும்பி இருந்தேன். ஒரு மணித்தியாலத்தின் பின் களைத்து விட்ட நிலையில் ஒவ்வொரு முறையும் படகு தூக்கிக் குத்தும் போது வருவது வரட்டும் என்ற நிலைக்கு மாறி விட்டேன். அதற்குப் பிறகு சத்தி எடுப்பதையும் படகினுள் வைத்துக் கொண்டேன். ஒருவித மயக்க நிலையில் உடம்பிலுள்ள சக்திகள் எல்லாம் போய் விட்ட நிலை விடுதலைப் போராட்டத்தில் இப்படியும் ஒரு முக்கியமான ஒரு கட்டம் இருப்பதாக நினைத்து இருந்து விட்டேன்.

இந்த வேளையில் சிறிலங்கா கடற்படையின் மத்தாப்புத் தாக்குதல் ஆரம்பமாகி விட்டது. அதாவது வானத்தில் வாண வேடிக்கை போல் மத்தாப்பினை அடித்து அந்த வெளிச்சத்தில் படகு ஏதாவது வருகின்றதா என்பதைக் கண்டு பிடிப்பார்கள். அதன் பின் படகை நோக்கித் தாக்குதலை ஆரம்பிப்பார்கள். படகில் இருந்த எல்லோரும் பரபரப்படைந்த போது நான் மட்டும் ஒருதரம் வானத்தைப் பார்த்து விட்டு நடக்கின்றது நடக்கட்டும் என்று இருந்து விட்டேன். எனக்கு நீந்தவும் தெரியாது. எந்தவிதமான சக்திகளுமற்று இருந்த நான் ஈ.பி.ஆர்.எல்.எஃவ் மோட்டாரைப் பார்த்து நீ தான் காப்பாற்ற வேணும் என நினைத்து இருந்து விட்டேன். கடற்படை கப்பல்கள் இருக்கும் இரு திசைகளைத் தவிர்த்துப் படகை ஓட்டுவதாக முடிவை எடுத்தனர். படகின் திசை மாறுபட்டதை உணர்ந்த நான் திடீரெனப் படகின் வேகம் குறைந்ததை அறிந்தேன். திடீரெனப் படகின் மோட்டார் நிறுத்தப்பட்டு கையால் படகை வலிக்கத் தொடங்கினர். ஏனென்று கேட்டதற்கு சத்தம் போட வேண்டாம் கடற்படை பக்கத்தில் நிற்பதாகக் கூறினார்கள். எனக்கென்றால் எல்லாமே முடிந்து விட்டதாக நினைத்தேன். நாட்டில் இராணுவத்திடமிருந்து தப்பி இந்தியா வந்து, இப்போது இந்த ரெலோவிடம் இருந்து தப்பி, கடைசியில் நடுக்கடலில் தானோ எனது முடிவு என நினைத்தேன். அப்போது மற்றவர்களைப் பார்த்தேன். ஒரு சிலர் தூங்கிக் கொண்டும் சிலரின் கண்கள் பெரிய முழி முழித்துக் கொண்டும் இருந்ததை அந்த நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் காணக்கூடியதாக இருந்தது. என்னுடன் வந்த தோழரைப் பார்த்தேன். அவரும் பயங்கர முழி முழித்துக் கொண்டிருந்தார். எனக்கு சிரிப்புத் தான் வந்தது. சில ஈ.பி.ஆர்.எல்.எஃவ் தோழர்கள் மட்டும் தான் மோட்டாரை தயார் நிலையில் வைத்துக் கொண்டிருந்தனர். அதாவது குண்டுகளை எடுத்துத் துப்பாக்கியில் பட்ட தண்ணீரையும் துடைத்தனர். சிறிது நேரத்தில் துப்பாக்கியைப் படகிலிருந்து கழற்றிக் கொண்டிருந்தனர். எனக்குக் குழப்பமாக இருந்தது. ஏன் கழற்றுகிறீர்கள் எனக் கேட்க தண்ணீர் உள்ளே போய் விட்டது எனவும் அதை இப்போது பயன்படுத்த முடியாது எனவும் கூறினர். எனக்குக் கடைசியாக இருந்த நம்பிக்கையும் போய் விட்டது. எனினும் படகை ஓட்டிக் கொண்டு வந்தவர்களில் நம்பிக்கை வைத்தேன். எந்தவிதமான தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தாமல் வெறும் வானத்தையும் நட்சத்திரங்களையும் வைத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்திலிருந்து சரியாகக் குறிப்பிட்ட இடத்திற்கு அவர்கள் எம்மை அழைத்துச் செல்வார்கள் என்ற எனது நம்பிக்கை மட்டுந் தான் மிஞ்சி இருந்தது. சுமார் அதிகாலை மூன்று மணி அளவில் மீண்டும் படகை நிறுத்தி விட்டு தாம் கொண்டு வந்த சோற்றுப் பிரட்டலைச் சாப்பிடத் தொடங்கினர். ஒவ்வொருவரையும் சாப்பிடச் சொல்லிக் கேட்டனர். நானோ மற்றும் அரைவாசிப் பேருக்கோ எதுவும் சாப்பிடக்கூடிய மனநிலையில் இல்லை. எப்போ கரைக்குப் போவோம் எனக் கேட்ட போது கரைக்கு வந்து விட்டோம் எனவும், கரையில் இருந்து தமக்கு இன்னும் எந்தவிதமான சிக்னலும் வராதபடியால் தான் இப்போது இங்கு நிற்பதாகவும் கூறினார்கள். இதைக் கேட்ட எல்லாரும் ஒருவிதமான உயிர் பெற்றவர்களாக ஒருத்தரை ஒருத்தர் பார்த்த போது முழிக்கண்களில் மாறி மாறி ஒருவித சிரிப்பு மலர்ந்தது. ஒவ்வொருவரும் கதைக்க ஆரம்பித்தோம். எம்மிருவரையும் தவிர மற்றவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் தோழர்கள் என்பதாலும் நாம் இருவரும் யார் என்று அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதாலும் எம்மைப் பொறுத்தவரையில் அவர்கள் மீது நம்பிக்கை இருந்ததினால் மனம் விட்டுக் கதைத்தோம்.. இந்தப் பயணம் முடிவுக்கு வருகின்றபடியால் இனி நாம் அவர்களை மீண்டும் சந்திப்போமா அல்லது அவர்கள் மீண்டும் எங்களைச் சந்திப்பார்களா? யார் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை என்றாலும் நாட்டிற்குப் போகின்றோம் என்ற நிலையில் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடன் இருந்தோம்.

சுமார் காலை நாலு மணி மட்டும் எந்தவிதமான சிக்னலும் வராதபடியால் படகை ஓட்டி வந்தவர்களின் அபிப்பிராயம் கரையில் ஆமி நிற்கலாம் என்றும், இன்னும் அரை மணித்தியாலம் பார்த்து விட்டு இல்லையேல் திரும்பிப் போக வேண்டும் என்பதுமாகும். ஏனெனில் வெளிச்சம் வந்தால் கடலில் நிற்க முடியாது. கடற்படையிடம் மாட்டுப்பட வேண்டும் என்பதாகும். எனக்கோ சீ... என்றாகி விட்டது. அப்போது தான் மீண்டும் நாட்டின் பழைய நிலைமைகள் நினைவுக்கு வந்தன. இராணுவம் விமானப்படை போன்றவற்றின் சோதனைக்குள்ளால் முந்திப் போகும் போது வாங்கிய அடியும் சித்திரவதையும் திரும்பவும் இராணுவம் கரையில் எம்மை வரவேற்க நிற்கிறார்கள் போல் உள்ள நிலையும் நில நிமிடங்களுக்கு முன்னிருந்த நாட்டிற்கு போகின்ற சந்தோசமான நிலையை முற்றும் முழுதாக மாற்றி விட்டது. இரண்டாவது, திரும்பவும் சத்தி எடுத்த படகின் பயண அனுபவம் நினைவுக்கு வந்தது. இனி திரும்பவும் போவதில்லை என்ற கருத்து பலரின் மனதிலும் இருந்தது. எது நடந்தாலும் பரவாயில்லை கடலில் இனிமேலும் நிற்க முடியாது. ஆகவே கரையினை நோக்கிப் போவோம் என முடிவு செய்தனர். படகினை வலித்துக் கொண்டே கரையினை நோக்கிச் சென்றனர். என் கண்ணிலோ இன்னும் கரை தென்படவில்லை. ஒருவாறு கரையைக் கண்டபோது மரங்களும் பற்றைகளும் இராணுவ ஜீப்பும் ட்றக்கும் டாங்கிகளுமாகத் தான் எனக்குத் தெரிந்தது. எல்லோர் கண்களிலும் அவ்வாறு தான் தெரிந்தது போல் இருந்தது. ஏனெனில் பலரும் கண்கள் பிதுங்கிய நிலையில் பயத்துடன் தான் இருந்தார்கள். அந்த நேரத்தில் படகை ஓட்டியவர் சொன்னார் சிக்னல் காட்டுகிறார்கள். பயப்பட வேண்டாம் நம்பிப் போகலாம் என்று. எனக்கு மீண்டும் நம்பிக்கை வந்தது.

கரையில் இறங்கியவுடன் நாம் எவ்வாறு எமது வீடுகளுக்குச் செல்வது என்ற நினைவுடன் இறங்கிய போது அவர்கள் சொன்னார்கள் ஒவ்வொருவரையும் படகின் எஞ்சின்கள் படகு ஆகியவற்றை தூக்கிக் கொண்டு போகச் சொன்னார்கள். 1984 ஆவணி கால கட்டமாகிய அந்தக் கால கட்டம் இராணுவத்தின் ரோந்து நடவடிக்கைகள் இருந்த காலமாகும். எனவே, படகு வந்ததற்குரிய எந்த அம்சங்களும் கரையோரத்தில் இருக்கக் கூடாது. உடனடியாக மறைக்கப்பட வேண்டும். அனைவரும் சக்தி இழந்த நிலையில் களைத்து இருந்தாலும் இந்த வேலையைச் செய்தாகவே வேண்டும். எனவே, படகினையும் படகின் எஞ்சினையும் ஒரு ட்ரக்ரில் ஏற்றி அனுப்பி விட்டு குளிப்பதற்காக ஒரு வீட்டிற்குச் சென்றோம். இரவு 2 மணியளவில் இராணுவம் ரோந்திற்கு வந்ததாகவும் சுமார் மூன்று மணி வரை கடற்கரை ஓரத்தில் நின்றதாகவும், அதனால் தான் அவர்கள் போகுமட்டும் வீட்டிற்குள் இருந்ததாகவும் அந்த வீட்டிலுள்ளோர் கூறினர். குளித்து விட்டு தேநீரும் அருந்தி விட்டு நாம் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டோம். அப்போது எமது நிலைமையை அறிந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் தோழர் ஒருவர் எவ்வாறு போகப் போகிறீர்கள்? பஸ்ஸிற்கு பணம் இருக்கின்றதா எனக் கேட்டார். நாம் எம்மிடம் பணம் இல்லை நடந்தாவது போய் விடுவோம் என்று கூறிய போது 10 ரூபா தந்து இதற்கு மேல் தருவதற்கு என்னிடம் பணமில்லை இந்த 10 ரூபாவில் போகக் கூடிய அளவு போய் அதன் பின்னர் நடக்கலாம் என்று சிரித்தபடியே கூறினார்.

நாம் வந்திறங்கிய இடம் மாதகல் பிரதேசம். அங்கிருந்து எனது கிராமத்திற்குப் போவதென்றால் யாழ்ப்பாணம் வந்து தான் போக வேண்டும். மற்றைய தோழரின் கிராமத்திற்குப் போவதென்றால் இடைவழியில் இறங்கி வேறு பஸ் எடுத்துப் போக வேண்டும். எது எவ்வாறாயினும் இருவரும் போக 10 ரூபா போதாது. எனவே 5 ரூபா ஒருவருக்கு எனவும் 5 ரூபாவில் நாம் போகக் கூடிய தூரம் வரையில் போவதென்பதும் முடிவாகி விட்டது. மாதகலில் இருந்து புறப்பட்ட முதல் மினிவானில் நாம் ஏறினோம். இருவரும் பஸ்ஸில் ஏறிய மிகுதிப் பயணிகளைப் பார்த்தோம். எமது நோக்கம் மினிவானில் வேறு இயக்கக்காரர்கள் வருகிறார்களா என்பதாகும். உதாரணமாக, ரெலோ அல்லது புலியைப் பற்றிய பயம் தான். ஆனால் பஸ்ஸில் ஏறியவர்களுக்கோ எம்மிருவரைப் பார்த்ததும் பயம். அவர்களின் பயம் ஆமியோ அல்லது நேவியோ மினி வானை நிற்பாட்டி செக் பண்ணினால் எம் இருவராலும் தமக்குப் பிரச்சினைகள் வரும் என்பதாகும். இதை எம்மால் அவர்களின் பார்வையை வைத்தே புரிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அதற்காக நாம் ஒன்றும் செய்ய முடியாது. மினி வானில் இருந்து இறங்கும் பயணிகள் கூட எம்மை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தான் இறங்கினார்கள். மாதகலிலிருந்து வருகின்ற மினி வானில் மிகவும் களைப்படைந்து பயங்கர முழி முழித்துக் கொண்டிருந்த எங்களை எவருமே இலகுவாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். எமது நிலைமையோ வானில் ஏறுகின்ற ஒவ்வொரு இளைஞரையும் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தது. மற்றத் தோழர் நடுவில் இறங்கி அவரது கிராமத்திற்குச் செல்லும் பஸ்ஸிற்குப் போய் விட்டார். அவரைப் பொறுத்தவரையில் அவர் உயிருக்கு உள்ள ஆபத்து என்னை விட அதிகம் என்பதாலும் எனக்கு அவர் மீதுள்ள மிகுந்த மரியாதையின் காரணமாகவும் மீண்டும் சந்திப்போமா என்று தெரியாத நிலையிலும் கண்கள் கலங்கிய நிலையில் விடை பெற்றோம். மினி வான் யாழ்ப்பாணத்தை வந்தடையும் போது கண் என்னை அறியாமலேயே மூடி விட்டது.

தொடரும்

சில ஈ.பி.ஆர்.எல்.எஃவ் தோழர்கள் மட்டும் தான் மோட்டாரை தயார் நிலையில் வைத்துக் கொண்டிருந்தனர். அதாவது குண்டுகளை எடுத்துத் துப்பாக்கியில் பட்ட தண்ணீரையும் துடைத்தனர். சிறிது நேரத்தில் துப்பாக்கியைப் படகிலிருந்து கழற்றிக் கொண்டிருந்தனர். எனக்குக் குழப்பமாக இருந்தது. ஏன் கழற்றுகிறீர்கள் எனக் கேட்க தண்ணீர் உள்ளே போய் விட்டது எனவும் அதை இப்போது பயன்படுத்த முடியாது எனவும் கூறினர். எனக்குக் கடைசியாக இருந்த நம்பிக்கையும் போய் விட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



## தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் நிலை

# யாரோ செய்த தவறுக்கு நாங்கள் தண்டிக்கப்படுகிறோம்!

- எஸ்.சண்முகம்



இலங்கை இனப் பிரச்சினையால் தமிழகத்துக்கு உயிர் பிழைக்க ஓடிவரும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அப்படி தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்களின் தமிழ் நாட்டு வாழ்க்கை நிலை எப்படியிருக்கிறது என்பது பற்றிய ஒரு ரவுண்ட் அப்.

''நாங்க இந்தியா வந்தது 1991-ம் வருடம். என்னுடைய மூன்று குழந்தைகளையும் என் தங்கையின் ஒரு வயது மகனையும் அழைத்துக் கொண்டு படகு மூலமாக இந்தியா வந்தோம்'' என்று தன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார் கோடம்பாக்கத்தில் வாடகை வீட்டில் வசிக்கும் கங்காதேவி.



''நாங்க வரும்போது சரியான புயல், மழை. பனை மரம் உயரத்துக்கு அலைகள் ஏறி இறங்கும். ஒவ்வொரு முறை படகு தூக்கிப் போடும்போது உயிர் போய்விட்டு வரும். படகுக்குள் வந்த தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்க்கும்போது நெஞ்சு பதறும். அவ்வளவு கஷ்டப்பட்டு குழந்தைகள் வாழ்க்கை சிறக்க வேண்டுமென்ற ஒரு எண்ணத்தில் இந்தியாவுக்கு வந்தோம்.

ஆனால் தமிழ்நாட்டில் வேறுவிதமான பிரச்னைகள் எங்களை எதிர்கொண்டன. சென்னை அம்பத்தூரில் வீடு பிடித்தோம். எனது கணவர் இலங்கையில் ஆசிரியராக இருந்தார். நான் தனியாக இங்கு வீடு தேட வேண்டியிருந்தது. சென்னைல இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கிடைப்பது ரொம்பக் கஷ்டம். இந்த ஒன்பது வருஷத்துல ஏழு வீடு மாத்திட்டோம். ஒவ்வொரு வீட்டுக்கும் ஆயிரமாயிரம் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எல்லோரும் சந்தேகப்படுகிறார்கள். ஒவ்வொரு வீட்டுக்குப் போகும்போது பக்கத்திலிருக்கிற போலீஸ் ஸ்டேஷன்ல பெயரை பதிவு பண்ண வேண்டியிருக்கு'' என்று சொல்லும் கங்காதேவி வருத்தத்துடன் இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.


''என்னுடைய இரண்டு பெண் பிள்ளைகளும் படிப்புல ரொம்பக் கெட்டி. அதனால அவங்ககூட சேர்ந்து படிக்க அவர்களது தோழிகள் வீட்டுக்கு வருவாங்க. கூட சேர்ந்து படிச்சதுனால நல்ல மார்க் கிடைச்சது. ஆனா ஸ்கூல் ப்ரேயர்ல அவங்க ஸ்கூல் கரஸ்பாண்டண்ட் அகதிப் பொண்ணுங்ககூடலாம் பழக்கம் வச்சிக்கக் கூடாதுங்கற மாதிரி பேசிட்டாரு. இதுனால எங்க பொண்ணுங்களுக்கு ஒரே வருத்தம். வீட்டுக்கு வந்ததும் அழுதுட்டாங்க. அப்புறம் அந்த ஸ்கூல்லருந்து வேற ஸ்கூலுக்கு மாத்தினோம். அதே மாதிரி காலேஜ் போகும்போது பிறப்பிடம் இலங்கைன்றதுனால ஒரு பல்கலைக்கழகத்துல என்ஜினியரிங் சீட் கொடுக்க மறுத்திட்டாங்க. பிறகு தனியார் கல்லூரிலதான் படிக்க முடிந்தது'' என்று கூறும் கங்காதேவியின் பிள்ளைகள் இப்போது கம்ப்யூட்டர் என்ஜினியர்களாக இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்கு இன்னொரு பிரச்சினை. இலங்கை போய் வருவது. 10-15 ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் இருந்து 10 மணி நேரத்திற்குள் இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குள் செல்ல முடிகிறது. ஆனால் தினசரிப் பேப்பரில் தலைப்புச் செய்தியை வாசித்து முடிப்பதற்குள் இலங்கையை அடைந்து விடக்கூடிய தூரத்தில் இருந்தும் 15-20 நாள் போராட்டம் நடத்தினாலும் போக முடிவதில்லை. காரணம் விசா பிரச்சினை. விசா வாங்குவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிடுகிறது என்கிறார்கள்.

தனது மகனுக்கு இருதயத்தில் ஏற்பட்ட அடைப்பை நீக்குவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி நாகரெத்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வர ஒரு வருட காலம் ஆகியிருக்கிறது. பின் கொழும்பில் இருந்து இந்தியா வர பத்து மாதங்கள் ஆகியிருக்கின்றன. கொழும்பில் விசாவுக்கு பல ஆயிரம் செலவழித்து இரண்டு வருடத்திற்கு முன் இங்கு வந்து மருத்துவச் செலவுக்காக கொண்டு வந்த பணத்தையெல்லாம் விசா எடுப்பதில் உள்ள கெடுபிடிக்காகவும் விமான டிக்கட்டுக்காகவும் செலவு செய்து இருக்கிறார். விசா பிரச்சினையில் தட்டுத் தடுமாறியவருக்கு சென்னை மருத்துவமனையிலும் அவருக்கு ஒரு அதிர்ச்சி கிடைத்திருக்கிறது.

*"வெளிநாட்டிற்கும் போக முடியவில்லை. சொந்த நாட்டிற்கும் போக முடியவில்லை. யாரோ செய்த தவறுக்காக நாங்கள் தண்டிக்கப்படுவது எந்த விதத்தில் நியாயம்?''*

கீழ்ப்பாக்கம் அரசினர் மருத்துவமனையில் சிகிச்சையளித்து அறுவை சிகிச்சையும் செய்யப்பட்ட நிலையில் குளிப்பதற்காக சென்றபோது யாரும் உதவிக்கில்லாத நிலையில், தாலிக்கொடி, பாஸ்போர்ட், 10 ஆயிரம் பணம் எல்லாம் திருட்டுப் போக, மிஞ்சியதோ உள்ளாடைகள் மட்டும்தான்.



மகனைக் காப்பாற்றி உயர் படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்ற அந்த தாயின் கனவு, அறுவை சிகிச்சை பலனளிக்காமல் மகன் இறந்துபோக யாருமற்ற அனாதையாக அழுது இருக்கிறார். தனி மரமாக மகனை சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்.

இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். அகதிகளாக வந்து பிறகு அகதி முகாமிலிருந்து உறவினர்கள், தெரிந்தவர்கள் இல்லங்களுக்கு குடிபெயர்பவர்கள். இவர்களுக்கு தமிழகத்தில் கை கொடுக்க குறைந்தபட்சம் விரல் கொடுக்கவாவது மனிதர்கள் இருப்பார்கள். இவர்கள் ஒருவகை.

எவரது உதவியும் இல்லாதவர்கள் அகதி முகாம்களிலேயே வாழ்க்கையைக் கழிக்கிறவர்கள் இரண்டாவது வகை. தமிழ்நாட்டில் மட்டும் 134 அகதி முகாம்கள் உள்ளன. எண்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

வெளியிடங்களில் வீடுகள் வாடகைக்கு எடுத்து வாழ்வோர்கள் தொகையும் 85 ஆயிரம் வரையில்.

கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் இருபது வயது அமுதாவும் அவரது சகோதரர் சந்திரனும் சொல்வதைக் கேளுங்கள். ''கடந்த 1984-ம் ஆண்டு எங்க அப்பா யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வேலை நிமித்தமாக சென்றபோது காணாமல் போய்விட்டார். அப்போது அம்மா நாலு மாத கர்ப்பிணித் தாய். அப்பாவுடன் சென்ற வேறு சிலர் அப்பாவை இராணுவம் பிடித்துச் சென்றதாகக் கூறினார்கள். நாங்கள் அப்பாவைத் தேடி பல தடவை இராணுவ முகாம்களுக்குச் சென்று ஒரு பலனும் இல்லை. அப்பாவைக் காணாதபடியால் அப்பாவைக் கொண்டு போட்டாங்கள் எண்டு எல்லாரும் சொல்லிச்சினம். நானும் தம்பிமாரும் ரொம்ப சின்ன பிள்ளைகள். அந்த நேரத்தில பயங்கர சண்டை, அம்மா எங்களையாவது காப்பாத்துவம் எனக் கடல் மூலமாக வந்து கும்மிடிப்பூண்டி முகாமில் இருக்கிறம். இப்ப எங்களுக்கு சென்னையிலுள்ள ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் தான் உதவி செய்துகொண்டிருக்கிறது'' என்கிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அகதிகள் முகாம்களில் உள்ள வீடுகள் யாவும் ஓலை குடிசைகளாகவும் ஒரு அறை கொண்ட வீடுகளாகவும் இருக்கின்றன. ஒரு வீட்டிற்கு ஒரு மின் விளக்கு அதுவும் 40 வாட்ஸ் கொண்ட பல்பு அந்த வெளிச்சத்தில்தான் வாழ்க்கை. குளிப்பது எப்போதாவது ஒருநாள்தான். காலைக் கடன்களை கழிப்பது தினப் பிரச்சினை. குடிப்பதற்குகூட தண்ணீர் கிடையாது. சில இடங்களில் எல்லோருக்கும் பொதுவாக ஒரு டி.வி. பெட்டி இருக்கும். அந்த ஒரு டி.வி.யை ஆயிரம் இரண்டாயிரம் பேர் பார்க்கிறார்கள்.

''எந்த வீட்டிற்கும் காற்றோட்ட வசதி எதுவும் கிடையாது. பிள்ளைகள் படிப்பது என்றால் மண்ணெண்ணை விளக்கில்தான். 40 வாட்ஸ் பல்பு. வெளிச்சத்தை விட மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சம் பரவாயில்லை. வெளியில் எங்கும் செல்லமுடியாது. பிள்ளைகள் இல்லாவிட்டால் தினம் தினம் செத்து வாழ்வதை விட ஒருநாளில் செத்துப் போய்விடலாம்'' என்றார். புழல் முகாமைச் சேர்ந்த மலர்மகள் என்ற யாழ்பாணத்துப் பெண்ணின் கதை மிகவும் மோசமானது. இவரது தந்தை சுகவீனப்பட யாழ்ப்பாணத்து மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் அங்கே ராணுவம் குண்டுபோட பலர் கொல்லப்பட்டனர். அதில் மலர்மகளின் தந்தையும் ஒருவர். யாழ்ப்பாணத்துக் குடும்பங்கள் சிதறின. மலர்மகளும் தாயுடன் படகுமூலம் தமிழகத்துக்கு தப்பி வந்தார். அவரது அண்ணன்கள் போன இடம் தெரியவில்லை. அவர்களை இலங்கை ராணுவம் பிடித்துவிட்டதாக தகவல் மட்டும் கிடைத்திருக்கிறது. தந்தையையும் இழந்து தமையர்களையும் இழக்கும் சூழ்நிலையில் புழல் அகதி முகாமில் இருந்த மலர்மகள் தினமும் சென்னையிலுள்ள ஈழத் தமிழர் பாதுகாப்பு கழகத்துக்கு வந்து அண்ணன்களை கண்டுபிடித்து தருமாறு கதறி அழுவாராம். பிறகு பல வருட போராட்டத்திற்குப் பிறகு இலங்கை இராணுவம் அவரது அண்ணன்களை விடுதலை செய்திருக்கிறது.



''அங்கே இருக்கும்போது உயிருக்கு அஞ்சி அஞ்சி வாழ்வோம். இங்கு வேறு விஷயங்களுக்குப் போராட வேண்டியிருக்கிறது. காற்று கிடையாது, தண்ணீர் கிடையாது. மழை பெய்தால் மட்டும் தண்ணீர். அதுவும் வீடு முழுக்க நிறைந்து விடுகிறது. வீடா, மழைநீர் கட்டியிருக்கும் பள்ளமா என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. இதில்தான் வாழ்க்கை நடக்கிறது'' என்கிறார் மலர்மகள்.

கன்னியாகுமரி அகதி முகாமில் சந்திரன் தன் நிலை பற்றி கூறுகையில், ''நாங்கள் எப்படியாவது படித்து ஒரு கௌவரமான வேலையைப் பெறலாம் என்ற நோக்கில் தனிப்பட்ட முறையில் பட்டப் படிப்பு முதற்கொண்டு என்ஜினியரிங் படிப்பு, கம்ப்யூட்டர் தொழில்கல்வி என்றெல்லாம் படித்திருந்தும் எந்தக் கம்பெனியும் எங்களுக்கு வேலை தருவதாயில்லை. வெளிநாட்டிற்கும் போக முடியவில்லை. சொந்த நாட்டிற்கும் போக முடியவில்லை. யாரோ செய்த தவறுக்காக நாங்கள் தண்டிக்கப்படுவது எந்த விதத்தில் நியாயம்?'' என்று கேட்கிறார்.

அவருக்கு யார் பதில் கூறுவார்? என்ன பதில் கூற முடியும்?

நன்றி: அம்பலம்

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பார்களா? யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

வட பகுதியில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் படையினரால் துன்புறுத்தப்படும் போதெல்லாம் அவற்றைத் தட்டிக் கேட்டு வருபவர்கள் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள். யாழ்ப்பாணத்தில் படையினர் புரியும் மனித உரிமை மீறல்களையும் தட்டிக் கேட்டு வரும் மாபெரும் சக்தியாக மாணவர் சமூகமானது விளங்குகின்றது. இது படையினருக்கும் அரசிற்கும் தலையிடியினைக் கொடுத்து வருகின்றது. மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவதனால் படையினர் புரியும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அனைத்தும் வெளி உலகத்தவரைச் சென்றடைகின்றது. இதனால் அரசின் பெயரிற்கு பெரும் களங்கமும் ஏற்படுகின்றது. இதனால் அரசும் இராணுவமும் பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறான போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு துணை வேந்தர் மூலமாகவும் மற்றும் பல்வேறு முறைகளிலும் முயன்றன. எனினும் அதில் வெற்றியடைய முடியாதபடி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சக்தி காணப்பட்டது! ஆனால், அரசும் இராணுவமும் தமது முயற்சியிலிருந்து சிறிதும் தளரவில்லை. இறுதியாக படையினர் இதில் புதியதொரு தந்திரோபாயத்தை கையாளத் தொடங்கியுள்ளது புலனாகின்றது.

மாணவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரே சக்தியாக போராட்டங்களில் இறங்கும் போது அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது போய் விடுகின்றது. இதற்குக் காரணம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து ஒருமித்து குரல் கொடுப்பதே. எனவே இவர்களின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமானால் இவர்களிடையே பிளவினை ஏற்படுத்த வேண்டும். அதாவது யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஒற்றுமையினைக் குலைக்க வேண்டும். இந்த தந்திரோபாயத்தையே படையினர் பயன்படுத்துவதை யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ள சில சம்பவங்கள் உறுதிப்படுத்துவதாக உள்ளன.

படையினருக்கு எதிரான போராட்டங்களில் முன்னின்று செயற்படுபவர்கள் முகாமைத்துவபீடம் மற்றும் கலைப்பீடத்தினைச் சேர்ந்த மாணவர்கள் தான். அத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தில் அதிகமான மாணவர்களையும் இவ் இரண்டு பீடங்களுமே கொண்டுள்ளன. மொத்த மாணவர் எண்ணிக்கையில் 2/3 பங்கிற்கு மேற்பட்ட மாணவர்களை இவ்விரண்டு பீடங்களும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது இவ்விரண்டு பீட மாணவர்களுக்கிடையே அண்மைக் காலத்தில் ஒரு முறுகல் நிலை தோன்றியுள்ளது. இதற்கு படையினர் தம்முடன் தொடர்புள்ள ஒரு சில மாணவர்களை மிகவும் சாதுரியமாகப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. கடந்த மாதம் மூன்றாம் திகதி கலைப்பீடத்தைச் சேர்ந்த சில மாணவர்களும் முகாமைத்துவ பீடத்தை சேர்ந்த மாணவர்கள் மூவரும் கைகலப்பில் ஈடுபட்டனர். பின் விரிவுரையாளர்களின் தலையீட்டால் மீண்டும் ஒரு சுமூக நிலையும் ஏற்பட்டிருந்தது. ஆனால், மீண்டும் இம்மாத ஆரம்பத்தில் கலைப்பீடத்தைச் சேர்ந்த சில மாணவர்களால் முகாமைத்துவ பீட விரிவுரையாளர்களின் பொது அறை உடைக்கப்பட்டது. இதையடுத்து ஏற்பட்ட முறுகல் நிலையும் இரண்டு பீடங்களையும் சேர்ந்த பொறுப்பான சில சிரேஷ்ட மாணவர்களால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்விரண்டு சம்பவங்களையும் எடுத்து நோக்கும் போது இரண்டு சம்பவங்களிலும் குறிப்பிட்ட சில மாணவர்களே சம்பந்தப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. இந்த மாணவர்களில் சிலர் இராணுவத்தினருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பதும் பலர் அறிந்த விடயம். இந்த மாணவர்கள் குறித்து பல்கலைக்கழக நிர்வாகமும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அப்படியிருப்பின் படைத்தரப்பு தனது முயற்சியில் வெற்றியடைந்துவிடுமோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

இதற்கு இன்னொரு உதாரணமும் உண்டு. கடந்த 8ம் திகதி பரமேஸ்வரா சந்தியில் படையினரின் வாகனம் கலைப்பீடத்தை சேர்ந்த ஆனந்தராசா ராதிகா (24) என்ற மாணவியை மோதியது. மாணவி ஸ்தலத்திலேயே மயக்கமடைந்து விட இராணுவ வாகனத்தின் சாரதி இறங்கி அம்மாணவியின் அடையாள அட்டையை சோதித்த போது அவர் பல்கலைக்கழக மாணவி எனத் தெரியவர அப்படைவீரர் மாணவியை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லாமல் அப்படியே விட்டுவிட்டுச் சென்றுள்ளார். அதன் பின் அங்கு வந்த மாணவர்கள் அம்மாணவியை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இம்மாணவி நினைவு அற்ற நிலையில் தற்போது வைத்தியசாலையில் இருக்கின்றார். இராணுவத்தினரின் இந்தச் செயலைக் கண்டித்து பலாலி வீதியில் வழிமறிப்புப் போராட்டம் ஒன்றினை ஒரு மணிநேரம் செய்வதற்கு கடந்த டிச.14ம் திகதி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காலை 9.00 மணிக்கு கூட்டமொன்றை கூட்டியிருந்தது. அந்தக் கூட்டத்தில் பலாலி வீதியில் வழிமறிப்பு போராட்டமொன்றை செய்வதற்கு முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து அப்போராட்டம் மட்டுப்படுத்தப்பட்டதாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் இரண்டு மணிநேரம் பகிஸ்கரிப்பு போராட்டமாகவே நடைபெற்றிருந்தது. அதுவும் பல்கலைக்கழக நிர்வாகம் தாங்கள் நடவடிக்கை எடுத்ததாக அறிவித்தவுடன் நிறுத்தப்பட்டு விட்டது.


இவற்றினை நோக்கும் போது எதிர்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஒருமித்து நின்று படையினரின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுப்பார்களா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இவர்கள் தொடர்ந்தும் பிளவுபட்டு நிற்பார்களேயானால் இராணுவத்தினரின் தந்திரோபாயத்தினை வெற்றியடைய வைத்தவர்களாகி விடுவர்.

வரலாற்றில் மிக முக்கியமானதொரு காலத்தில் நிற்கின்ற இவர்கள் யாழ் மக்களின் பிரதானமான காவலர்களாவே திகழ்கின்றனர். யாழ் தமிழ் சமூகத்தின் சார்பாகக் குரல் கொடுத்து அவர்களைக் காக்கின்ற வல்லமை தற்போது பல்கலைக்கழக மாணவர்களிடம் மட்டுமேயுண்டு.எனவே யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் தமக்கிடையேயான முரண்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு யாழ். தமிழ் சமூகத்திற்காக குரல் கொடுக்க வேண்டியதொரு தார்மீகப் பொறுப்பினைக் கொண்டுள்ளனர். அதிலிருந்து தவறுவார்களாயின் வரலாற்றில் கறைபடிந்த ஓர் அத்தியாயத்திறகுப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக இம்மாணவர்களாவார்கள்.

## கலீல் ஜிப்ரான்– நூற்றாண்டு விழாவின் பதினேழு ஆண்டுகளுக்குப் பின்..


உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிற அளவை விட நீ பிரமாண்டமானவன்; எல்லாம் நல்லதற்கே: போன்ற ஜிப்ரானின் மிக இலகுவான தத்துவார்த்த வார்த்தைகள் பலரை ஆகர்ஷித்திருந்தன என்கிறார்கள் இவர் பற்றி எழுதியவர்கள். 1960களின் பல்வேறு இளைஞர் அணிகளதும் ஏனைய அமைப்புகளதும் பிரதான தொனியாக இது போன்ற அவரது தத்துவ முத்துக்கள் இருந்தன. ஜிப்ரானின் எழுத்துக்கள் குறிப்பாக தீர்க்கதரிசி என்ற நூல் இளைஞர்களது செல்வாக்கையும், அவர்களது பரவலான அங்கீகரிப்பையும் பெற்றிருந்தது. இந்த நிலைமை கல்வியாளர்களிடமோ விமர்சகர்களிடமோ காணப்படவில்லை. காரணம்., அவர்கள் ஜிப்ரானின் படைப்புக்களை அங்கீகரிப்பதில் தயக்கமுடையவர்களாக இருந்தார்கள்.

ஜிப்ரானின் படைப்புக்களில் பிரச்சார நெடி இருந்ததும் இவ்வாறு கவனிப்புப் பெறாமல் போனதற்கான காரணியாகவும் இருக்கலாம். The Prophet என்ற அவரது நூலது ஆரம்பத் தலைப்பு The Counsels என்பதாக இருந்தது இவ்விடத்தில் கவனிப்புக்குரியது. 1920களில் அமெரிக்க நாடக, கவிதை புனைகதைத் துறைகளில் மாற்றங்களையும் புதுமைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்த Expressionism, Naturalism, Illusioned Realism என்பவற்றுடன் கூட ஜிப்ரானின் காதல் ரசம் சொட்டும் எழுத்துக்கள் போட்டியிட்டு முட்டி மோதிக் கொண்டிருந்தன என்பதும் மறுக்க முடியாத ஒரு விடயம் தான்.



ஜிப்ரானின் இந்த வித்தியாசமான எழுத்துப்பாணி போதிய அங்கீகாரத்தை அமெரிக்க இலக்கியத் துறை சார்ந்து பெற்றிருக்காவிடினும், அவரது சொந்தத் தேசமான லெபனானில் அது பெரும் தாக்கத்தைச் செலுத்தி வந்திருக்கிறது. அவரது எழுத்துக்களும், மற்றும் அவர் சார்ந்திருந்த நியூயோர்க் அரபு எழுத்தாளர் குழுமத்தின் எழுத்துக்களும் முழு அரபு எழுத்துக்களிலும் பரவலான பாதிப்பை ஏற்படுத்தியது. அவருக்கேயுரியது, அது தவறற்ற ஜிப்ரானிய மாதிரி. தொய்வற்றுப் பிரவாகமெடுக்கும் அவரது எழுத்துக்கள் செழுமையானது மாத்திரமல்ல நவீனமானதும் கூட- என கலாநிதி சல்மா ஜய்யூசி பொஸ்டன் பொது நூலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் தெரிவித்திருந்தமை கவனிப்புக்குரியது.

PROTA என்ற அரபு இலக்கியங்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்து வெளியிடும் நிறுவனத்தின் பணிப்பாளரும் அதன் நிறுவனருமான கலாநிதி சல்மா ஜய்யூசி மேலும் சொல்கிறார் - ஜிப்ரான் நவீன அரபு இலக்கியத்திற்கு மேலும் மேலும் புதியவைகளைக் கொண்டு வந்ததோடு ஒரு படைப்பாக்கத் திறனையும் ஏற்படுத்தி வந்தார். அவர் ஓர் இளைஞர். புதியவைகளின் பால் மிக்க நாட்டம் கொண்டிருந்தவர். அவர் கொண்டு வந்த புதிய பாணிகள் சொல்லாடல்கள் ஏற்கனவேயிருந்த மரபார்ந்த மொழிக்கு சவால் விடுத்ததாக இருந்தது என்கிறார்.



இதே கருத்தைத் தான் ஜிப்ரான் பற்றிய குறும்படத்தின் இணைத் தயாரிப்பாளரான Bob Eliasம் தெரிவிக்கின்றார். இவர் 15 வருடங்களுக்கு முன்னர் ஜிப்ரான் வாழ்க்கை பற்றிய திரைக் கதையை எழுதியிருக்கிறார். அவருடைய கவிதை அழகும், இலகுவில் புரிந்து கொள்ளும் தன்மையும் கொண்டிருந்தன. அதுவே மற்றவர்களில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாய் இருந்தன- என்கிறார் சிரிய - அமெரிக்கப் பெற்றோருக்குப் பிறந்தவரும் ஜிப்ரானை நன்கறிந்தவருமான Bob Elias.

ஜிப்ரானின் நண்பரும், விமர்சகரும், சரிதையாளருமான Mikhail Naimy கூறுகிறார்: ஜிப்ரான் தன் வாழ்வில் எதிர் கொண்ட அனுபவ உணர்வுகள் அவரின் எழுத்துக்களில் ஆழமும் உணர்வுகளும் நிரம்பி இருப்பதற்குக் காரணமாகும் - கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவரிடமிருந்து கிடைத்தவை குறைவு தான். இதற்குக் காரணம் அவர் ஏற்கெனவே குறிப்பிட்டவர்கள் போன்று (தாய்,சகோதரி, சகோதரன்) இளமையில் (48 வயதில் ஏப்ரல் 10 , 1931 ) இல் மரித்துப் போனதாக இருக்கலாம்.

இன்று பல வருட சகப்பான உள்நாட்டு யுத்தங்கள், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்கள் போன்ற மனிதாபிமானமற்ற செயல்களின் முன்னிலையில் ஜிப்ரானின் சகோதரத்துவ வாஞ்சையின் வெளிப்பாடுகள் யாரிலும் எந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தாது தான். இருந்த போதிலும் கூட லெபனான் ஜிப்ரானை அவரின் கருத்துக்களை மதித்து அவரை கௌரவிக்கத் தயாராகின்றது. Sherly Ameen என்பவர் சொல்கிறார்: ஜிப்ரானின் இந்த சகோதரத்துவ வாஞ்சை மனிதர்கள் தங்கள் வேறுபாடுகளை மறந்து நட்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்று அழைக்கிறது. இந்த ஒன்று தான் ஜிப்ரானையும் ஒரு தத்துவக் கவிஞனாக மாற்றி வைத்தது. ஜிப்ரான் தன் வாழ் நாள் முழுவதும் விரும்பிக் கொண்டிருந்தாலும், செயற்பட்டுக் கொண்டிருந்ததும் இவ்வாறானதொரு நட்பான, சகோதர வாஞ்சையான தீர்வுகளுக்குத்தான்.

[முற்றிற்று]

எம்.கே.எம். ஷகீப்

நன்றி - நூலகத்திட்டம்



## சியாம் செல்வத்துரையின் 'FUNNY BOY' 'விசித்திரமான பையன்'



மத்தியானச் சாப்பாடு முடிந்ததும் அப்பாச்சியும் அம்மாச்சியும் தங்கள் அறைக்குள் போய் விட்டார்கள். மதிய உணவுக்குப் பின்னான குட்டித் தூக்கத்திற்காக. மற்றப் பெரியவர்கள் வரவேற்பறையில் இருந்தபடி பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டோ, பெரிய சாய்மனைக் கதிரைகளில் தூங்கி வழிந்து கொண்டோ இருந்தார்கள். நாங்கள், மணப்பெண்ணாக வரப் போபவரும் அவரது தோழிகளுமாக ஜானகியின் அறைக்குள், நீண்ட நேரமாக எதிர்பார்த்த மணப்பெண்ணை அலங்கரிக்கும் சடங்குக்கு ஆயத்தமானோம்.

எங்கள் 'அலங்கரிப்புச்' சடங்கில் ஒன்றிப் போயிருந்த நாம் திடீரென்று கேட்ட பலத்த சிரிப்பொலியால் ஒரு கணம் திடுக்கிட்டு இவ்வுலகுக்கு வந்தோம். முதலில் இந்தச் சிரிப்பொலியை நாங்கள் அவ்வளவாக கணக்கில் எடுக்காமல் விட்டுவிட்டோமாயினும் அந்தச் சிரிப்பொலி தொடரவே எனது தங்கை சோனாலி கதவருகே போய் நின்று வெளியே பார்த்தாள். அவளது திகைப்பு மூச்சின் ஒலி எங்கள் எல்லோரையும் வெளியே ஓடிவரச் செய்தது. அங்கே 'மாப்பிள்ளை' தலையை மேலே நிமிர்த்தி, வயிறு வெளியே தள்ள மேலும் கீழுமாய் செருக்கு நடைபோட்டுக் கொண்டிருந்தாள். அவள் (தும்புக் கட்டையில் இருந்து பிடுங்கிய தும்புகளைக் கொண்டு செய்த) பெரிய மீசையையும் விரல்களுக்கிடையே (உருட்டிய கடதாசிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட) ஒரு சிகரட்டையும் வைத்துக் கொண்டு மிகவும் தீவிரமாகப் புகைத்தபடி நடந்து கொண்டிருந்தாள். மற்றவர்கள் தங்களை அலங்கரிப்பதையும் மண மேடையில் செய்ய வேண்டிய இறுதி நேரச் செப்பன் செய்தல்களை செய்வதையும் விட்டுவிட்டு தலைவாசல் ஓரத்தில் அமர்ந்தபடி இந்த வேடிக்கையை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஓ... எனது அன்பானவர்களே"

# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 4

எங்களைக் கண்டதும் இப்படி உரத்து அழைத்து தனது கைகளை அகல விரித்தபடி கூறினாள் மாப்பிள்ளை! "என்னுடைய அழகான கன்னியை உடன் அழைத்து வாருங்கள். நான் பொழுது சாய்வதற்குள் எனது மாளிகைக்குத் திரும்ப வேண்டும்...."

நாங்கள் மாப்பிள்ளையை, அவளது இயல்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைக் கண்டு அதிசயித்துப் போய் பார்த்தோம். அவள் எங்களை நோக்கி நடந்து வந்தாள். என்முன்னால் வந்ததும் நின்று என்னைப் பார்த்து தன் கண்களை அகட்டி விரித்து சிமிட்டினாள். பிறகு எனது நாடிக்கு கீழாக தனது கையை நீட்டி எனது முகத்தை நிமிர்த்தினாள்.

"ஆ..." ஆச்சரியத்துடன் அவன் சத்தமிட்ட அவள்.

"ஒரு எலும்புக் கன்னி.... உண்மையிலேயே எலும்பு தான்..." என்று கூறினாள்.

**தமிழில்:**
**எஸ்.கே.விக்னேஸ்வரன்**

"நிறுத்து" கத்தியபடி அவளது கையைத் தட்டிவிட்டேன் நான்." மாப்பிள்ளைகள் சத்தம் போடுவதில்லை"

"ஏன் இல்லை?" - தொக்கையம்மா கோபத்துடன் பதிலளித்தாள். தனது உயர்த்திய குரலையும் பாவனையையும் விட்டுவிட்டு "ஏன் மாப்பிள்ளை சத்தம் போடக் கூடாது?" என்று கேட்டாள்.


"ஏனென்றால்"
"ஏனென்றால் என்ன?"

"ஏனென்றால் இந்த விளையாட்டு மணப்பெண் விளையாட்டுத் தான். இது மாப்பிள்ளை விளையாட்டல்ல.

தொக்கையம்மா தனது மீசையைப் பிடுங்கி நாடகபாணியில் நிலத்தில் வீசி எறிந்தாள்.

"நல்லது நான் இனிமேலும் மாப்பிள்ளையாக இருக்க விரும்பவில்லை, நான் மணப்பெண்ணாகவே இருக்கப் போகிறேன்.





நாங்கள் நம்ப முடியாதவர்களாய், எனது பதவிக்கு அவள் சவால் விட்டதால் திகைத்துப் போனவர்களாய் அவளைப் பார்த்தோம்.

"ஏலாது. உன்னால் முடியாது" என்று கடைசியாக நான் பதிலிறுத்தேன்.

"ஏன் முடியாது?" - கேட்டாள் தொக்கையம்மா.

"ஏன் எப்போதும் நீ மட்டும் பொம்பிளையாக வர வேண்டும்? ஏன் இன்னொருத்தர் மணப்பெண்ணாக வரக்கூடாது?

ஏனென்றால் - சோனாலி பதில் சொல்ல இணைந்தாள். 'ஏனென்றால் எல்லாரையும் விட சிறப்பாக மணப்பெண்ணாக வரக்கூடியவன் அர்ஜே தான்.

"ஆனால், அவன் ஒரு பெட்டையே இல்லை"

சோனாலியின் வாதத்தை உடைத்து விடுவது போல அவள் உறுதியாகச் சொன்னாள். "மணப் பெண் ஒரு பெண்ணே அல்லாமல் ஆணாக இருக்க முடியுமா?

அதிர்ஷ்டவசமாக சோனாலி எனக்குத் துணைக்கு வந்தாள். எப்போதும் எனக்கு விசுவாசமான அவள் எங்கள் இருவருக்கும் நடுவில் நின்றபடி சொன்னாள்:

"உன்னால் விளையாட முடியாவிட்டால் பேசாமல் விட்டிட்டுப் போகலாம். உன்னை எங்களுக்கு தேவையில்லை"

தொக்கையம்மா எங்கள் எல்லோரையும் ஒரு தடவை உற்றுப் பார்த்தாள். பிறகு அவளது பார்வை என்னில் வந்து குத்திட்டு நின்றது.

"நீ ஒரு பொண்ணையன்" அவளது இதழ்கள் அருவருப்பால் சுழித்தன. நாங்கள் அவளை வெறித்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தோம். அவள் சொன்னதன் அர்த்தம் புரியவில்லை எங்களுக்கு.

"ஒரு புல்லுக்கத்தை" அவள் கத்தினாள். விளங்கிக் கொள்ள முடியாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த எங்களை நோக்கி அவளது குரல் உயர்ந்தது.

"ஒரு பெட்டையன்" அவள் மீண்டும் ஆற்றாமையுடன் கத்தினாள்.

இப்போது தான் இந்தச் சொற்கள் எல்லாம் அவமதிக்கிற வகைச் சொற்கள் என்பது எங்களுக்குப் புரிந்தது.

"அந்த ஜக்கற்றைத் தாடி" என்றாள் சோனாலி. அவள் தொக்கையம்மாவிற்குக் கிட்டவாகப் போய் ஜக்கற்றைப் பற்றி இழுக்கத் தொடங்கினாள்.

"உன்னை எங்களுக்கு இனிமேல் தேவையில்லை"...

"ஓம்.....ஓம்" கத்தினாள் லக்சுமி. "போ....போய்த்துலை தொக்கைக் குண்டு... பூம் பூம்....."

தொக்கையம்மா தனது காற்சட்டையையும் கோட்டையும் கழற்றினாள். "நான் உங்கள் எல்லோரையும் வெறுக்கிறேன்... நீங்கள் எல்லோரும் செத்துத் துலையுங்கோ.. அப்பதான் எனக்கு சந்தோசம்..." என்று கத்தினாள். பிறகு மாப்பிள்ளையின் உடுப்புகளை பின்தோட்டத்திற்கு வெளியே வீசி எறிந்து விட்டு வீட்டுப்பக்கமாய் நடக்கத் தொடங்கினாள்.

நாங்கள் அவளுக்கு வைத்த பட்டப் பெயரைச் சொல்லிக் கேலிச் சிரிப்புச் சிரித்தபடி எங்கள் மணப்பெண் தயாரிப்பு வேலைகளுக்காக திரும்பினோம்.

மணப்பெண் அலங்காரம் முடிந்ததும், பொம்பிளைத் தோழியான லக்சுமி ஜானகியின் அறைக்கு வெளியே எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவரப் போனாள். பிறகு அவள் மதகுருவுக்கும் பாட்டுக்காரர்களுக்கும் ஒரு பாடலை குறிப்பிட்ட மெட்டில் பாடுமாறு சைகை காட்டினாள்.

"The voice that breathed .....O Eeeden

The first and glongus day…"

இறுதியாக நான் படிகளில் இறங்கி பின்பக்க தோட்டத்தின் முடிவில் அமைக்கப்பட்டிருந்த மணமேடையை நோக்கி நடக்கத் தொடங்கினேன். நான் மணமேடையை அடைந்த போது, குசினிக்கதவு திறபடும் ஓசை எனக்குக் கேட்டது. பார்ப்பதற்காகத் திரும்பிய எனக்கு குசினி வாசலருகே காந்தி அன்ரியும் தொக்கையம்மாவும் நின்றிருப்பது தெரிந்தது. எங்கள் சுருதி பிறழ்ந்த இசை திடீரென்று நின்று போயிற்று.

காந்தி அன்ரியின் இனிமையான புன்னகை முற்றாக மறைந்து விட்டிருந்தது. அவளது கண்கள் கோபத்தால் சிறுத்துப் போயிருந்தன.

"எனது மகளை தொக்கைக் குண்டு எண்டு சொன்னது ஆர்?" காந்தி அன்ரி கேட்டாள். ஏற்கெனவே, அவள் தலைவாசலின் ஓரம் வரைக்கும் வந்திருந்தாள்.

நாங்கள் அவளைப் பார்த்து விழித்தபடி நின்றோம். யாருக்கும் யார் சொன்னது என்று சொல்லும் தைரியம் இருக்கவில்லை. அவளது பார்வை என்மீது விழுந்தது. அவளது கண்கள் ஒருகணம் ஆச்சரியத்தால் விரிவது போல விரிந்தன. ஒரு பெரிய புன்னகை அவளது முகத்திற்குக் குறுக்காக ஓடி மறைந்தது.

"ஒருசில அடிகள் முன்னே வைத்து நடந்து வந்த அவள் என்னைச் சுட்டிக் காட்டியபடி "இது ... என்ன...இது" என்று கேட்டாள். அவளது குரலில் மெல்லிய இனிமை கசியத் தொடங்கியிருந்தது. என்னைக் கிட்ட வருமாறு சைகை காட்டினாள். அவளுக்கு கிட்டப் போக மறுத்தவனாய், நான் எனது கால்களைக் குனிந்து பார்த்தபடி நின்றேன்.

"இங்கே வா... இங்கே வா..." திரும்பவும் கூப்பிட்டாள் அவள்.

இனியும் மறுக்க முடியாது என்று தோன்றவே அவளை நோக்கி மெதுவாக நகர்ந்தேன். அவள் என்னை மேலும் கீழுமாய் பார்த்தாள். சந்தையில் ஒரு இறைச்சித் துண்டை வாங்குபவர் பார்ப்பது போல என்னை முன்னும் பின்னும் திருப்பித் திரும்பி பார்த்தாள்.

"என்ன விளையாட்டு நீங்கள் விளையாடுகிறீங்கள்?"

"இது மணப்பெண் விளையாட்டு அன்ரி" - சோனாலி பதிலளித்தாள்.

"மணப்பெண்" - அவள் வாய் மெல்ல முணுமுணுத்தது. அவளது கை எனது கையைப் பற்றியது. "என்னோடவா" என்று இழுத்தாள் அவள். நான் போக மறுத்து இழுத்தேன். ஆனால் அவளது கை எனது கையை இறுகப் பற்றியிருந்தது. அவளது விரல் நகம் எனது முழங்கையில் குத்தியது. அவள் என்னை தலைவாசல் படிகளில் மேலே இழுத்து, குசினிக்கதவை நோக்கி கொண்டு சென்றாள்.

**வரும்**


நன்றி - நூலகத்திட்டம்



– சுனந்த தேசப்ரிய

# சிங்கக் குட்டிகளின் உல்லாசபுரி

உல்லாசபுரி வேண்டிய சுகங்களை சம்பத்துக்களை அள்ளித் தரும் தீவு.' இந்நாட்டின் இயற்கை வனப்பையும் சின்னஞ்சிறு பிஞ்சுகளின் வாழ்க்கையையும் வக்கிர காமாந்தரக்காரர்களாக அலையும்




சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதற்கென்றே உருவாக்கப்பட்ட விளம்பர வாசகம். பிற்பாடு, சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட ஒரு சில தரப்பினர் இலங்கையை சிறுவர்களுடன் காமக் களியாட்டம் நடத்தக்கூடிய உல்லாசபுரி என பகிரங்கமாகவே அழைக்கத் தொடங்கியிருந்தார்கள். நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு கரையோரங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு இன்பம் வழங்கி பணம் சம்பாதித்து வரும் சுமார் 3000 (ஆண்) பிள்ளைகள் இருந்து வருவதாக ஒரு தசாப்தத்துக்கு முன்னர் அறிக்கையிடப்பட்டிருந்தது.

வறுமையிலிருந்து மீள்வதற்கான ஒரு வழியாக இதனைக் கருதியோ அல்லது எமது பாலியல் கலாசாரத்தில் ஓரினச் சேர்க்கை தொடர்பாக நிலவிவந்த விருப்புக் காரணமாகவோ (அல்லது இவ்விரண்டும் காரணமாகவோ) எமது மக்கள் இதனைச் சகித்துக் கொண்டிருக்கக் கூடும். சுற்றுலாத் துறையின் உல்லாசபுரியாக வளர்ச்சியடைந்திருந்த தாய்லாந்தில் சுமார் 5 இலட்சம் ஆண் பெண் விபச்சாரிகள் உருவானார்கள்.

வியட்நாம் போருக்கென எடுத்துவரப்பட்ட சுமார் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் வட வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நகரங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். இந்நகரங்களிலேயே ஆசியாவின் மிகப்பெரிய விபச்சார விடுதிகள் தோன்றின.

இரண்டாவது உலகப் போரின் போது ஜப்பானிய சிப்பாய்களின் சுகபோகத்திற்கென 3 இலட்சம் கொரிய யுவதிகள் கடத்திச் செல்லப்பட்டார்கள். பிரிக்கப்பட்ட யுகோஸ்லாவியாவில் இடம்பெற்ற இன மோதல்களில் 40 ஆயிரம் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு இரையாக்கப்பட்டிருந்தனர். கியூபாவில் புரட்சியை எடுத்து வருவதற்கென கெரில்லாப் படையினரை பயிற்றுவிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த சேகுவேரா அவர்களுடைய உடல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கென விபச்சார விடுதியொன்றை தெரிவுசெய்திருந்தார்.


போரின் போது குறிப்பாக கூலிப்படைகள் மூலம் நடத்தப்படும் ஆக்கிரமிப்புப் போர்களின் போது சிப்பாய்களால் பெண்கள் கெடுக்கப்படும் கொடுமை உலகம் பூராவும் நடந்துள்ள விஷயம்.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் போரில் பெரியளவில் இல்லையென்றாலும் கூட பல தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுகளுக்கும் மரணத்துக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையின் இராணுவம் பொதுவாக இளைஞர்களைக் கொண்ட ஒரு இராணுவம். 18 வயதில் இராணுவத்தில் சேர்ந்து தொடர்ந்து 12, வருடங்கள் பணியாற்றும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக் கொள்ளும் ஆட்கள் 30 வயதில் இராணுவத்தை விட்டுச் செல்கிறார்கள். 20 வருடங்கள் முழுவதும் பணியில் இருந்தாலும் அவர்கள் 38 வயதில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். இலங்கையின் இராணுவத்தைப் பொறுத்தவரையில் அதிகாரிகளைத் தவிர ஏனையவர்கள் பெரும்பாலானவர்கள் இளவயதுத் தொகுதியினராக இருந்து வருவதுடன், பாலியல் ரீதியில் சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும் உள்ளனர்.


இந்தத் தேவையை நிறைவு செய்து வைக்கும் வகையில், வடக்கு கிழக்கு போர்க்களங்களை இணைக்கும் ஒரு மையநகரமான அனுராதபுரத்தில் 2000க்கு மேற்பட்ட பெண்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். பொலன்னறுவை நகரிலும் அதேபோல இரத்மலானை விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும் விபச்சாரத் தொழில் இடம்பெற்று வருகிறது. அரசாங்கத்தின் பொலிசும் அதேபோல கலாசார பொலிஸ் அமைப்புக்களான சமயக் குழுக்களும் இது போருக்குத் தேவையான ஓர் அத்தியாவசிய சேவையாக இருந்து வருவதாக கருதிவருவதாலேயே இது குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருந்து வருகின்றனர்.

அது மட்டுமல்ல, போர்க்களத்துக்கு அயலில் உள்ள எல்லைக் கிராமங்களில் இடம்பெற்று வரும் பாலுறவுச் சம்பவங்கள் குறித்தும் கடந்த காலத்தில் தெரியவந்துள்ளது. இவை பாலியல் பலாத்காரங்களாக இருந்து வரவில்லை என்பது உண்மைதான். ஆனால், மனமொத்து இசைவுடன் ஏற்படும் உறவுகள், என அவற்றைக் கூற முடியாதுள்ளது.



பொலன்னறுவையை அடுத்துள்ள ஓர் பாடசாலையில் உயர் வகுப்புக்களில் படிக்கும் மாணவியரில் அநேகமானோர் தற்காலிக இராணுவ, பொலிஸ் காதலர்களை கொண்டுள்ளதாகவும் அவர்களின் பெற்றோர் கூட இத்தகைய தொடர்புகளுக்கு ஊக்கமளிப்பதாகவும் அதிபர் ஒருவர் ஒருமுறை கூறினார்.

போருக்கும் பாலியல் பலாத்காரத்துக்கும் மிக நெருக்கமான ஒரு தொடர்பு உள்ளது. ஆண் ஆதிக்க சமூகம் பெண்ணை பொதுவாக வெல்லப்பட வேண்டிய ஒரு பூமியாக / உடலாகவே கருதி வருகிறது. ஆக்கிரமிப்புச் செயன்முறைக்கூடாகவே இந்த வெற்றி நிலைநாட்டப்படுகிறது. பெண் ஒரு போகப்பொருளாக ஊடகங்களில் சித்திரிக்கப்பட்டுவரும் இலங்கையைப் போன்ற சமூகங்களில் இந்தச் செயன்முறை வெறுத்தொதுக்கும் கருதுகோள் விலைகொடுத்து வாங்கும் கருதுகோளாக மாற்றமடைந்துள்ளது. இன்று பெரும்பாலான ஊடகங்கள் இளம் பெண்களை கவர்ச்சியின் மோகத்தின் மையங்களாகவே வர்த்தக விளம்பரங்களில் சித்திரித்துக்காட்டி வருகின்றன.



படையில் சேர்வதற்காக காத்திருக்கும் சிறுவர்கள்

இப்பொழுது இந்தப் பின்புலம் இலங்கை அரசாங்கத்தின் தீரம் மிக்க இராணுவத்துக்கு சிப்பாய்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான விளம்பரம் இராணுவத்திற்கு ஒரு புதுப் பெயரைச் சூட்டியுள்ளது. சிங்கக் குட்டிகளின் உல்லாசபுரி என்பதே இந்தப் பெயர். இராணுவத்தில் சேர்வது என்பது, சிங்கக் குட்டிகளின் உல்லாசபுரியில் சேர்வதாகும். தொலைக்காட்சி விளம்பரங்கள் இந்த உல்லாசபுரியை காட்சி ரூபத்தில் தருகிறது. அதன்படி போர் வீரர்களைக் கண்டு இளம் (சிங்கள) பெண்கள் மோகம் கொள்கிறார்கள்.

அவர்கள் தூங்கப் போகும் பொழுது ஒளித்திருந்து பார்க்கிறார்கள். வாகனங்களைத் தள்ளும் பொழுது அதைப் பார்த்து சிக்கன உடையணிந்திருக்கும் பெண்கள் கண்ணடிக்கிறார்கள், அது மட்டுமல்ல, நவநாகரிக நங்கையரும் அவர்கள் மீது ஏக்கப் பார்வை வீசுகிறார்கள். இது தொலைக்காட்சித் திரையில் விரியும் விளம்பரம். பத்திரிகைகளில் வெளியிடப்படும் விளம்பரங்கள் இதற்கு குறைநிரப்புச் செய்கின்றன. அந்த விளம்பரங்கள் ஆண்மையை வலியுறுத்துகின்றன. ஆணழகர் குழாமொன்று புஜபல பராக்கிரமங்களைக் காட்டி இறுக்கமான முகங்களுடன் தோற்றமளிக்கின்றனர். இன்னோர் இடத்தில் இதேபோன்ற இளைஞர் குழு சிரித்த முகத்துடன் தமது துப்பாக்கிகளை காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக்கிரமிப்பு இயல்புடன் கூடிய ஆண் நடத்தை வெல்லப்பட வேண்டிய பெண் உடம்பு, அதைப் பார்த்து மயங்குதல் இராணுவத்துக்கு இலங்கை அரசாங்கம் கொடுத்திருக்கும் புதிய பொருள் விளக்கமிது. நீங்கள் ஏன் இராணுவத்தில் சேர வேண்டும் என்பது குறித்து பரம ஏழைகளான சிங்கள இளைஞர்களுக்கு இப்படிச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. உல்லாசபுரிக்கு சிங்கக் குட்டிகள் என்ற பத விம்பத்தின் மூலம் இது எடுத்து விளக்கப்படுகின்றது.

இது தமிழ் அல்லது முஸ்லிம் குஞ்சுகளின் உல்லாசபுரி அல்லது சிங்கக் குட்டிகளின் உல்லாபுரியாகும். இப்பொழுது அது தனது இனத்தைச் சேர்ந்த பெண்களையே விற்பனைப் பண்டமாக்கியுள்ளது. இதுவரை காலமும் அனுராதபுரத்தில் பொலன்னறுவையில் அல்லது இரத்மலானையில் இளம் சிங்கள சிப்பாய்களால் களவில் தேடப்பட்ட "இன்பம்" இப்பொழுது அதிகாரபூர்வமாக வழங்கப்படுகிறது.

மற்றொரு இனத்தை அடிமைப்படுத்திக் கொள்வதற்காக போரிடும் ஓர் இனம் ஒருபோதும் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. (சிங்களவர்களால் தமிழர்கள் அடிமைப்படுத்தப்படுவதைப் போலவே தமிழர்களால் முஸ்லிம்கள் அடிமைப்படுத்தப்படுவதனையும் நாங்கள் நினைவூட்டிக் கொள்ள வேண்டும்) இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த சிங்கக்குட்டி கருதுகோள் சிங்கள இனத்தின் சீரழிவின் குறியீடு. அது போர் வெறியையும் பாலியல் ஆக்கிரமிப்பையும் காட்டுகிறது. நான் சிங்களவனாக இருந்து வருவதனால் சிங்கள இனத்தின் அவல நிலை நன்கு தெரிகிறது. தமிழ் சமூகத்தின் அவலத்தை இதனை வாசிக்கும் உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



சக்கரவர்த்தியின் இந்தக்கதை கணையாழி கனடாச் சிறப்பிதழில் (டிசம்பர் 2000) பிரசுரத்திற்கென கேட்டுப் பெறப்பட்டது. எனினும், சிறப்பிதழில் பிரசுரிக்கப்படவில்லை. ஆ – ர்

# போங்கடா டேய்

[சென்ற இதழ் தொடர்ச்சி]

*து மீழீழப் பெண்ணான உங்களுக்கு ஓமனக் குட்டி என்ற மலையாளப் பெயர் வரக் காரணம் என்ன?*

*இது ஒரு மிக மிக நல்ல கேள்வி (ஏன் இது ஒரு மிக மிக நல்ல கேள்வி???) எனது தந்தையாரான ஒட்டு மடம் ஓம்காரன் மிகப் பெரிய இலக்கியவாதி (லோமரின் நண்பர், எலியட்டின் சித்தப்பா, டால்ஸ்டாயின் அப்பப்பா). இவர் முற்போக்கு மற்றும் வயிற்றுப் போக்கு, புறம்போக்கு போன்ற இலக்கிய வட்டத்துக்கெல்லாம் அப்பாற்பட்டவர். இவர் தமிழீழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருந்தாலும் இவருடைய இலக்கிய நண்பர்கள் எல்லோரும் கேரளத்தை சேர்ந்தவர்கள். ஆலப்புழை கிருஷ்ணன் நாயர், தகழி சிவசங்கரன் பிள்ளை, திருச்சூர் பிரேமா, திருவனந்தபுரம் ஸ்வப்னசுந்தரி, வைக்கம் முகமது பசீர், பாலக்காட்டு மாதவன் போன்றவர்களுடன் எல்லாம் என் தந்தை உறவாடி, இலக்கியம் செய்து கொண்டிருந்த காலத்தில் என் தந்தைக்கு இலக்கிய பணி செய்ய உதவியவர் தான் ஓமனக் குட்டி எனனும் பெண். இவள் ஒரு புதுமைப் பெண். பின்னாளில் தகழி சிவசங்கரன் பிள்ளை கூட இவள் பெயரைத்தான் தன் நாவலான செம்மீனிலும் பயன் படுத்தினார். . . ஓமனக்குட்டி என்னும் பெயர் புதுமைப் பெண்கள் எல்லோருக்கும் அமைய வேண்டும் என்ற தீவிர சிந்தனையுடன் - உயர்ந்த கருத்துக் கொண்ட அந்த பெண்ணின் பெயரை - என் அப்பாவான ஒட்டுமடம் ஓம்காரன் எனக்குச் சூட்டினார். (ஆ ஜிங்குச்சிக்கா....ஆ ஜிங்குச் சிக்கா... ஆ...ஆ)*

*(ஒட்டுமடம் ஓமனக் குட்டியின் நேர்காணலில் இருந்து. நன்றி கனடா வாரமுரசு)*

அறுபத்தி இரண்டாம் பக்கம் பார்த்தேன்.

நாய் கடித்து விட்டதா? மனைவியை அடித்து விட்டீர்களா? கிரிமினல் குற்றம். குடியுரிமை பாதிக்கப்படலாம். விபத்துக்குள்ளாகி விட்டீர்களா? முதலில் மருத்துவமனை செல்லுங்கள் (சலூனுக்குச் செல்லாதீர்கள்) பின் இவரைப் பாருங்கள். எந்த வகையான குற்றமானாலும் இவரைச் சந்தியுங்கள். குடிவரவு சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளையும் கூட இவர் தீர்த்து வைப்பார். ஆனால் இவர் ஒரு வழக்கறிஞர் இல்லை.

என்னங்கடா இது... இத்தனை பிரச்சினையும் தீர்த்து வைக்க வழக்கறிஞரால் தான் முடியும். ஆனால் இவர் ஒரு வழக்கறிஞர் இல்லை என்கிறதே விளம்பரம். அப்படியாயின் நீர் யாரு ஓய்?

ஓகோ... புரோக்கரா? அதை சொல்ல வேண்டியது தானே. தரகர் என்பது என்ன தப்பான சொல்லா? இல்லையே... மாமா 'ஜாப்' பார்த்தால் தான் கூடாது.

அறுபத்தி மூன்றாம் பக்கம் - பிறந்த நாள் வாழ்த்து

அறுபத்தி நான்காம் பக்கம்-

முப்பத்தி ஏழு நாடுகளில் ஒரே நேரத்தில் வெளிவரும் ஒரே தமிழ்ப் பத்திரிகை.

தன்னைத்தானே விளம்பரப்படுத்தியது இந்தப் பக்கத்தில்.

மிச்சமாய் இருக்கும் ஐநூற்றி இருபத்தி இரண்டையும் படிக்க வேண்டுமா என்ன. . . இதே சமாச்சாரத்துடன் பத்திரிகையின் தலைப்பு மட்டும் மாறப் போகிறது.

இன்றைய பொழுதை எப்படிக் கடத்தப் போகிறேன் என்று புரியவில்லை. நிச்சயமாக அபத்த விளம்பரங்களைப் படித்தே வாழ்க்கையை ஓட்ட முடியாது. வெளியே சென்று கலர் கூடப் பார்க்க முடியாது. போர்த்திக் கட்டிக் கொண்டு ஆணெது பெண்ணெது என்று புரியாது அலைவார்கள். குளிர் காலம்(-40°C)!

வேறு என்னதான் செய்வது?

ம் . . .வானொலி தான்!

பார்வையை அவற்றின் பக்கம் திருப்பினேன்.

தாயகத்து நினைவுகளை மீட்டுவந்து மண்ணின் மணம் மாறாது காற்றலையில் இன்பத்தமிழ் பாடி உங்கள் காதுகளை நனைத்து உங்கள் ஜன்னல் வரும் . . . ம். .

ஐந்து மீட்பர்களும் ஜன்னல் கட்டில் நீட்டிய உணர் கொம்புடன் (Antenna என்பதன் தமிழாக்கம்!) அற்புதமாய் பின்னணியில் ஒளிவட்டத்துடன் தெரிந்தனர்.

எனக்கென்னவோ சிரிப்பு வரும் போல் இருந்தது. ஏனோ மூன்று குரங்குகளுக்கு பதிலாய் ஐந்து குரங்கு

தெரிந்தது... நல்லதைப் பேசாது, நல்லதைச் செய்யாது நல்லதை ... நல்லதை



... நல்லதை...

ஐந்தில் எதைக் கேட்பது?

நேற்றுப் போட்ட வெற்றிலையின் காம்பு குப்பை தொட்டியில் போட்ட ஞாபகம். அதைத் தேடி எடுத்து வந்து கண்மூடி அதனால் தொட உணர்கொம்பு உடைந்த வானொலியை அது தொட்டது. வானொலியின் வலது புறம் உள்ள உருளியை உருட்டினேன் ...... கற ...... கறகற...... கற ...... தேசம் ...... .கற.ற.ற. ...... கடந்தாலும் ...... கற ...... தமிழ் கறற ...... இன்பத்தமிழ் கறகற ...... ர்ர்ர் ...... உஷ்ஷ்ஷ்ஷ் ...... புஷ்ஷ்ஷ் ர்ர்ர் ...... இஸ ...... குயில்ல ...... துயில் ர்ர்ர் ......

வானொலியை திசைமாற்றி வைத்தேன். சத்தம் சீராக வந்தது.

மூக்கு நிறைய சளியை நிரப்பிக் கொண்டு அடித் தொண்டையில் ஒரு குரல் 'மாட்டு வண்டியில் போன மனோரம்யமான நினைவுகளை மீட்டுவரும் சங்கானைச் சந்தை'

என்ன? மாட்டுவண்டியில் போன மனோரம்யமான நினைவுகளா? என்னங்கடா இது. . . இப்போதிருக்கும் எந்த யாழ்ப்பாணத்தார் எப்போது, எந்தச் சந்தைக்கு மாட்டு வண்டியில் போனார்கள்... இல்லாத நினைவுகளை இருப்பதாக ஏன் இவர்கள் கற்பனை செய்கின்றார்கள்?

சந்தைக்கான விளம்பரம் முடிய தகர டப்பாவில் கல் விழும் பலத்த ஓசை.

'மெத்தை வாங்கினேன் தூக்கத்தை வாங்கல்ல ...'

மலேசியா வாசுதேவன் பாதியிலேயே நிறுத்தி விட்டார்.

'பீலி மெட்ரஸ் உங்களுக்கு தூக்கத்தை வாங்கித் தருகிறது. ஒரு முறை தூங்கினால் பலமுறை தூங்கத் தோன்றும்'

என்ன ஒரு முறை தூங்கினால் பல முறை தூங்கத் தோன்றுமா? அபத்தம்... அபத்தம் . தூக்கம் என்ன சுற்றுலாத் தலமா? இல்லை ரகசிய ஸ்நேகிதியின் வீடா? ஒரு முறை போனால் பல முறை போகத் தோன்றுவதற்கு... தூக்கம் என்பது உயிரினத்தின் அன்றாடத் தேவையடா மக்காள்.

நிலையக் கலையக நேரம் சரியாக 12:30. ஒரு மணி வரை நீங்கள் கேட்டவை... அடித்தொண்டையால் பேசிய ஒலிபரப்பாளர்/ளி சில வினாடி மௌனத்தின் பின் தொடர்கிறார். . .

'ஓகோ இன்று ஞாயிற்றுக் கிழமையோ நீங்கள் கேட்டவை இல்லை. விடுமுறை விருப்பம்' விரும்பிய பாடலைக் கேட்க தொலைபேசி ஊடாக வானலைக்கு வரச் சொல்லும் அறிவிப்பாளர் யாரையாவது நேராக சந்திப்பின் கேட்க வேண்டும் 'இந்த நேரடி விருப்பம், நேயர் விருப்பம், உங்கள் விருப்பம், விடுமுறை விருப்பம், மகளிர் விருப்பம், ஆடவர் விருப்பம், நீங்கள் கேட்டவை, புதன் மலர், வெள்ளிமலர், செவ்வாய் மலர், பொங்கும் பூம்புனல். பொங்கும் பூமளம், தொங்கும் நேபாளம் இவற்றிற்கெல்லாம் ஒன்றுக்கொன்று என்ன வித்தியாசம் என்று!

இப்படித் தான் போன வராம் ஒரு நாள் புதுமை நிகழ்ச்சி, புதுமை நிகழ்ச்சி என்று தோழி ஒருத்தி சொல்லக் கேட்டு (அவர்கள் தானாம் அதை தொகுத்து வழங்குவதாக வேறு சொல்ல) கனடாத் தமிழ் வானொலி ஒன்றைத் திறந்து விட்டேன்...

என்னடா இது தமிழ் வானொலி ஆங்கிலம் பேசுது என்று எனக்கு ஒரே ஆச்சரியம். காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கூர்ந்து கேட்டதற்குப் பின்பு தான் புரிந்தது அதுவும் JUMBALAKKA JUMBALAKKA தான் என்று.

இரண்டு சிறார்கள் வானலையில் வாசல் வரை வந்து - சிறார்களிடம் அதே YOUR CHOICE தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் விபரம் கேட்டு தமிழில் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள்...(Whatz U like toa listen yaar....).... புதுமையோ புதுமை. . .

இருந்தாலும் இந்தச் சிறார்களை எனக்குப் பிடிக்கத் தான் செய்கிறது. . . இல்லையா பின்னை. இந்த வானொலிக்காரர்களும், பத்திரிக்கைக்காரர்களும் சொல்லிக் கொள்வது போல் எங்கள் குழந்தைகள் தமிழ் பேசுவது ஒன்றும் இவர்களால் இல்லை என்பதையும், ர்ர்ஜனியாலும், ஏயார் ட்ரகுமானாலும் தான் என்கிற உண்மையையும் என்னைப் போலவே இவர்களும் நம்புகின்றார்கள்.

'வானலையில் யாரோ' அடித்தொண்டையில் ஒலிபரப்பாளர்.

'கெக்கெக். . . கெக். . கெக் . . கெக்கெக்கெக்கே' (சிரிக்கிறாங்களாம்)

'வானலையில் யாரோ?' அடித்தொண்டையில் இருந்து இன்னும் கீழ் இறங்கிற்று சத்தம்.

'கெக்கெக்கெக் . . . கெக்எ. . கெக் . . கெக்கெக்கே. .'

'வானலையில் யாரோ?'

'உது நான் திருமதி சுப்புரத்தினம் புஸ்பவனம்'

'ஓ வணக்கம் . . லோங் டைம் நோ சீ (Long Time No See)யா'

'கெக் கெக்கெக் வணக்கம்'

'பார்த்துக் கனகாலம் என்டு சொன்னனான் .. புஸ்பவனம் என்ற உங்களோட பெயரின் ஆங்கிலப் பெயர் என்னவென்று தெரியுமோ?'

'ஆங்கிலப் பேரோ. . . கெக் கெக் . . உங்களுக்கு எங்களோட எப்பவும் பகிடி தான்!'

'புஸ்பவனம் என்கிற உங்களோட ஆங்கிலப் பெயர் என்னவென்டால் பிளவர் கார்டின் சரியோ? புஸ்பம் எண்டால் பிளவர். வனம் என்டால் கார்டின் சரியோ. புஸ்பவனம் என்டால் பிளவர் கார்டின் சரிதானே'

'என்ன அறிவு உங்களுக்கு . . என்ன அறிவப்பா உங்களுக்கு. (வனம் என்டால் கார்டின் என்பதான அறிவு) இவ்வளவு அறிவான ஆக்கள நாங்க பார்க்கவேயில்லை. உங்களுக்கு கோயில் தான் கட்டவேணும்.'

'நீங்கள் ஒரு அன்பில பாசத்தில சொல்லுறியள். ஆனா இஞ்சை இருக்கிற மூண்டு புத்தி ஜீவிகள் என்ன சொல்லுவினம், எங்கட சனம் கனடா வந்தும் திருந்தையில்லை எண்டு'

நன்றி - நூலகத்திட்டம்



இவங்களை எல்லாம் கவுண்டமணியட்டப் பிடிச்சுக் குடுக்க வேணும். எங்கட சனம் ஊரில இருக்கேக்க நல்ல தெளிவாயும், புத்தியாயும் தான் இருந்துகள். கனடா வந்த பிறகு தான் இந்த ரேடியாக்காரங்களும் பேப்பர்காரங்களுமாச் சேந்து சனத்தினர மூளையக் கலக்கோ கலக்கெண்டு கலக்கினதில, இதுகள் சும்மா சூறைக்காத்தில பறக்கிற எருக்கலம் பூ மாதிரி அலைக்கழிஞ்சு திரியுதுகள். இல்லாட்டிப் போனா ஒருத்தர் தமிழ் மூலம் வானொலியில தமிழ் மூலம் உரையாடுவாரே?

இந்த வருடம் பனிக்காலம் முடிஞ்சு, கொஞ்சம் கொஞ்சமாக வெயில் சுட ஆரம்பிச்ச நேரம். நான் ஒரு தடவை நெடுஞ்சாலை ஏழில் கிச்சினர் நகரம் நோக்கிப் பயணிக்க நேர்ந்தது. ஒரு நூறு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நெடுஞ்சாலையின் இரு கரைகளிலும் தாத்தாக்களும், பாட்டிகளுமாக தங்களின் பேரப்பிள்ளைகளுடன் தெருவோரம் கிடக்கும் குப்பைகளைப் பொறுக்கி அவர்கள் சாலையோரத்தைத் துப்பரவு செய்வதைப் பார்க்க எத்தனை மகிழ்வாயும், கனேடிய சீனியர்களை நினைத்து எவ்வளவு பெருமையாகவும் இருந்தது தெரியுமா?

இந்த மகிழ்வுடனேயே வீட்டுக்கு வந்து எங்கட வானொலியத் திறந்தால். . .

'வானலையில் யாரோ. . .?'

'நான் தான் ராசா மயில்வாகனம்'

'ஓ வணக்கம் ஐயா!'

'வணக்கம் மூத்த மகனே. . '

'வணக்கம்... வணக்கம் இன்று என்ன செய்யப் போகின்றீர்கள்?'

'தமிழ் மூலம் உரையாடப் போகிறேன்.'

இந்த தாத்தா வீட்டில் இருக்கும் போது என்ன மொழியில் உரையாடுவார்? பெரிசாய் கவலைப் பெரு மூச்சு வந்தது எனக்கு. அரசு தரும் வாய்ப்புக்களை அனுபவித்துக் கொண்டு வெட்டியாக வானொலியில் தமிழ் மூலம் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் வழிகாட்டிகள். ம்... ம்... நாலு சுவர்களுக்குள் அடைபட்டுப் போன சோகத்தை வானலையில் வியாபாரமாக்கிக் கொண்டிருக்கும் தந்திரம் எப்போ இவர்களுக்கு பிடிபடப் போகிறது.

தெருவில் இறங்கி தெருக்கூட்ட வேண்டாம். தெரியும், சாதித் திமிர் இடம் கொடுக்காது என்று. சக்கிலியன் என்று பார்க்கிறவர்கள் சொல்லி விடுவார்களோ என்னும் பயம் முன்னாள் வாத்தியார்களுக்கும் கிளார்க்குகளுக்கும் வரத்தான் செய்யும். உங்கள் பேரப் பிள்ளகளுக்கு பாட்டி வடை சுட்ட கதை, முயல் ஆமையிடம் தோற்ற கதை போன்றவற்றையாவது சொல்லலாமே.

உணர் கொம்பு உடைந்த வானொலியை அமுக்கி விட்டு வெள்ளியாய் உணர்கொம்பு மின்னும் வானொலியை ஒலிக்க விட்டேன்.

'இதோ வன்னியில் இருந்து எமது செய்தியாளர்'

'வன்னி நிலவரம் சிறிது பதட்டமாகத்தான் உள்ளது. செட்டிகுளம் பகுதியில் நேற்று புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒரு புலி வீரர் வீர மரணம் அடைந்தார். அத்தோடு நான்கு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.'

'வன்னி வாசி ஒருவருடன் நாங்கள் பேசமுடியுமா?' இது நேயர்.

'நிச்சயமாக'

'வணக்கம் உங்கள் பெயர் என்ன. . .

'ஏன் கேக்கிறீங்கள் . . என்ர பேர் நாதன்'

'நாங்கள் கனடாவில இருக்கிற தமிழ் ஒலி வானொலியில்.இருந்து பேசுகின்றோம். . . அங்கு வன்னியில் மக்களின் வாழ்க்கை நிலவரம் எப்படி இருக்கிறது என்று சொல்ல முடியுமா?'

'நாங்க இஞ்ச நாலு பக்கத்தாலையும் அடிபட்டுச் சாகிறம். அங்க கனடாவில சொகுசா வாழ்ந்து கொண்டு உங்களுக்கு எங்கட சாவோட விபரம் தேவைப்படுதோ...'

உர். . . . கூஷ் . . ..புஸ் . . . .

மூன்று நிமிட நெடு இரைச்சலுக்குப் பின் ஒலிபரப்பாளர் இடையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு(?)க்கு வருந்தினார். வன்னிவாசி சொன்னது நியாயம் தான். அந்தச் சனத்தோட சாவு விபரம் அறிந்து ஆதங்கப்படுவது குரூர குணம் தானே ...

வினைதீர்க்கும் முத்துமாரி - எங்கள்

குறை கேட்டு பிணி தீர்க்கும் முத்துமாரி

பஞ்சம் நீக்கி செல்வம் தரும் முத்துமாரி.



எல். ஆர். ஈஸ்வரியின் பாடல் இசையுடன் துவங்கி இடையிலேயே நிற்கிறது. பின், விளம்பர அறிவிப்பாளி தன் குரலை இலேசான சோகத் தொனியுடன் வெளிப்படுத்திச் சொல்கிறாள்.

மிசிசாகா டிக்ஸி அன்ட் டண்டாஸில் இதுவரை காலமும் இயங்கிவந்த ஸ்ரீ முத்துமாரி அம்மன், நிரந்தர இடமாக டிக்ஸி அன்ட் டெறிக்கு இடம் பெயர்ந்துள்ளது (அஃறிணை). பொதுமக்கள் வாக்களித்தபடி நிதி உதவி செய்யாத காரணத்தால், தனியார் ஒருவரிடம் வட்டியில்லாத கடனாக நான்கு லட்சம் டாலர்கள் கடனாகப் பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் உடனடியாக கடனை அடைப்பதற்கும், திருப்பணியைத் தொடர்வதற்கும் பணம்

## சக்கரவர்த்தி

தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்'

அடி ஆத்தா. . .!

மற்ற இரண்டு வானொலிகளையும் கேட்க வேண்டும் என்று தோன்றவில்லை எனக்கு. இந்த வானொலியின் அலைவரிசைக்கும் எனது அலைவரிசைக்கும் ஒரு போதும் சரிவராது.

அப்படி என்னத்தைப் பெரிதாய் ஒலிபரப்பி விடப்போகிறார்கள். தமிழ் மூலம் உரையாடி விட்டு நன்றிகள் என்று விடைபெறப் போகிறார்கள். இந்தத் தமிழ் மூலம் உரையாடும் தாத்தாக்கள் தங்கள் மூத்த மகன்களிடம் 'மகள்களிடம் சொல்லக் கூடாதா? நன்றிகள் என்று ஒரு சொல் தமிழில் இல்லையடா மகனே/ள . . தாங்ஸ்சை தமிழில் மொழி பெயர்த்து பேசுவது பிழையடா மூத்த மகனே/மகளே என்று.

என்ன சொல்லி என்ன புண்ணியம்.

பத்திரிகையும் வேண்டாம். வானொலியும் வேண்டாம். மீதமாய் இருப்பது தொலைக்காட்சி ஒன்று தான். . . அது வேண்டவே வேண்டாம். போனவாரம் பார்க்க நேர்ந்தது.

தெருவில் போகும் தமிழர் ஒருவரை நிறுத்தி வைத்து, மைக்பிடித்த ஒருவர் கேட்கிறார் 'ஏ.ஆர். ரஃமான் கனடா வருவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்' அடப் பாவிகளா!

ஏ.ஆர். ரஃமான் வந்து போய் மூன்று மாதங்களுக்கு மேலாயிற்று ... சரி ... அவன் வந்தால் தான் என்ன? போனால் தான் என்ன? முதலில் இவர்களின் பாஸ்போரட்டை கிழித்து விட்டு பலவந்தமாய் இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

அப்புறம் பார்த்தால் தாயகத்து நினைவை மறக்காமல் இருக்க, பத்திரிகையிலும் வானொலியிலும் சொல்லப்பட்ட அதே, ஒரு பல் பிடுங்கினால் பக்கத்துப் பல் பிடுங்குவது இலவசம். ஆதிசோமனை அணுகவும். மற்றும் ம. தூள், மி.தூள், ப.தூள், உ.பருப்பு, க. பருப்பு, க.வேப்பிலை, வா.இலை, இன்ன பிற. . .

அப்புறம் மூக்கை அறுத்து லூாணிக்குப் (ஒரு பறவை) போட்டு விட்டு ஒருத்தி கர்நாடக சங்கீதம் பாடினாள். அப்பாடலுக்கு சேலை அணிந்த இரண்டு குட்டி ரோபோக்கள் குறுக்கு வாக்கிலும், நெடுக்கு வாக்கிலும் என்னவோ பண்ணின(கராத்தே ஸ்டைலில்) . . .

என் மனைவியைக் கூப்பிட்டு 'என்ன இது வினோதமாய் ஏதோ இங்கு நடக்கிறதே என்ன இது' என்றேன்.

என் மண்டையில் மிகப்பெரிய குட்டு ஒன்றை வைத்தாள். 'இது கூடத் தெரியேல்லையே? என்ன ஆம்பிளை நீங்கள்? இது தான் கனடாப் பரத நாட்டியம்' என்றாளே பார்க்கலாம். நான் விகூஷப் பூண்டை மிதித்தது போல் ஆனேன். அன்றோடு போயிற்று தொலைக்காட்சி பார்க்கும் ஆசை.

இவை எல்லாவற்றையும் விட தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் எவ்வளவோ மேல். குகூஷ்புவுக்கு பிள்ளை பிறந்ததை எவ்வளவு விபரமாக நேர்முக வர்ணணை மாதிரி ஏழு, எட்டுப் பக்கங்களுக்கு எழுதியிருந்தார்கள். கலர்ப்படம் வேறு. அந்தப் பிள்ளைத் திரேசாவை பிடித்து வந்து அவளுக்கு ஒரு ஜட்டியைக் குடுத்து போடவைச்சு மோட்டார் வண்டி எப்படி ஓட்டுவது என்று எத்தனை விளக்கமாக வர்ணப் புகைப்படத்துடன் பிரசுரிக்கின்றார்கள்.

போன வார பத்திரிகை ஒன்றில் கூட, தமிழ் மாடல் மகேஸ்வரியையும், ஸ்வேதா ஜெய்சங்கரையும் விதம் விதமாக ஜட்டி, சட்டையெல்லாம் போடவைத்து துள்ளுவதுமாதிரி, ஓடுவது மாதிரி, நடப்பது மாதிரி, பாய்வது மாதிரி, குந்தி இருப்பது மாதிரி, மல்லாக்காகப் படுப்பது மாதிரி - ஒண்ணுக்கு இருப்பது மாதிரி - மட்டும் தான் அவர்கள் போடவில்லை. மற்றைய எல்லா விதமாகவும் போட்டிருந்தார்கள். பத்திரிகை விடுவது என்றால் ஒரு கரிசனை இருக்க வேண்டும். தமிழ் நாட்டு பத்திரிகை அளவுக்கெல்லாம் நாங்கள் கேட்கவில்லை. ஏதோ அறுபத்தி நான்கு பக்கங்களில் அறுபத்தி மூன்றை விளம்பரத்துக்கு எடுத்துக் கொண்டாலும் ஒரே ஒரு பக்கத்தையாவது செய்திக்கு, சிந்தனைக்கு. சமுதாய முன்னேற்றத்துக்கு,

அறிவியலுக்கு என்று பயன்படுத்தலாமே . .

இவர்களுக்கு என்ன அக்கறை சமூகம் பற்றி. இந்த ஊடகங்களில் பொழுதைக் கடத்துவதைக் காட்டிலும் தூங்குதல் மேல்

புத்தகக் கட்டைக் காலால் ஒதுக்கி விட்டுச் சாயமுற்பட்டேன். ஒதுங்கிய புத்தகத்தில் ஒன்று நடுப்பக்கத்தை ஆவென்றது.

நிமிர்ந்து பார்த்தேன்.

'21ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லப்போவது புலம்பெயர்ந்த தமிழர்களே...'

என்ன?

இருகை கொண்டு கண்களைக் கசக்கிவிட்டு புத்தகத்தை என் முகத்துக்கு நேர் பிடித்துப் பார்த்தேன். அதே தான்.

என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. அல்லது எனக்கு சித்தப்பிரமை பிடித்து விட்டதா?

'இஞ்சேரப்பா. . . இஞ்சேரப்பா' மனைவியை அழைத்தேன்.

'என்ன?'

'இதை ஒருக்கால் படியும்'

'எதை?'

'இதைத்தான்.'

'இருபத்தி ஓராம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லப் போவது புலம் பெயர்ந்த தமிழர்களே.' அவளும் அதையே தான் படித்தாள்.

என் மண்டைக்குள் விறுவிறுத்து எதுவோ ஏறியது. நிற்கிறேனா . . சரிகின்றேனா. . பறக்கின்றேனா. . . வானம் உடைவது போல் என் மண்டைக்குள். . . என்னாயிற்று எனக்கு?

விறுவிறுவென்று எழுந்து என் படுக்கை அறை நோக்கி ஓடினேன்.

'எங்கை. . ? எங்கை அது?'

'அடுக்கி வச்ச உடுப்பையெல்லாம் எதுக்கு தூக்கி எறியிறியள்?'

'எங்கையது? எங்கையது?'

'என்ன வேணும் உங்களுக்கு. . ஏன் இப்ப இன்கம்டக்ஸ் பேப்பரையெல்லாம் எறியிறியள்?'

'எங்கை அது?'

'சொல்லித் துலையுங்கோவனப்பா?'

'என்ர பாஸ்போர்ட்!'

'எதுக்கு இப்ப அது ?'

'அதைக் கிழிச்செறிஞ்சு போட்டு இலங்கைக்குப் போய் சண்டை பிடிக்கப் போறன்.'

நன்றி - நூலகத்திட்டம்



# உரைக்குறிப்பு

**- அபூசாலி**

## தமிழில் ஒரு தடம்!

பேராசிரியர் சிவத்தம்பியின் அண்மைக்கால வெளியீடுகளில் ஒன்றான "ஈழத்துத் தமிழ் இலக்கியத் தடம் - 1980 - 2000 - பார்வையும் விமர்சனங்களும்" என்னும் நூல், நிச்சயமாக அவர் வெளியிட்ட நூல்களுள் முக்கிய இடத்தை வகிக்கப் போகிறது என்று துணிந்து கூறலாம். அதற்குரிய முக்கியமான காரணங்களாக பின்வருவனவற்றைச் சுட்டலாம்.

முதலாவது இந்நூலில் இடம் பெறும் கட்டுரைகள் 1960க்குப் பின் ஈழத்து இலக்கியப் பரப்பில் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களைப் பற்றிப் பேசுவனவாய் உள்ளன. அப்படி அவை பற்றிப் பேசும் போது, அவை பற்றிய ஆசிரியரின் கருத்தியல் ரீதியான சிந்தனை துலக்கமுறுகிறது. இதன் மூலம் இவரது எதிர்ப்பாளர்கள் இவரை "ஒரு நழுவல் பேர்வழி", "ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொன்று கதைப்பவர்", "காலத்துக்கு காலம் தன்கொள்கையை மாற்றுபவர்" என்று குற்றஞ்சாட்டுவதற்கெல்லாம் இவை பதில் அளிப்பதாய் உள்ளன.

இரண்டாவது மார்க்சியத்தை ஒரு இயங்கியலாகப் பார்க்காமல் ஓர் தேங்கிய குட்டையாகப் பார்த்த பார்வையே மார்க்சியத்தின் முற்போக்குக் குணாம்சம் இலங்கை அரசியலிலும் சரி, சமூக கலை இலக்கியத்திலும் சரி, மழுங்கடிக்கப்பட்டதற்குரிய காரணம் என்பது பேராசிரியரின் கட்டுரைகளில் தெளிவாக்கப்படுகின்றது. இந்த மழுங்கடிக்கப்பட்ட பார்வையே பேராசிரியரையும் ஒரு மார்க்சிய எதிர்ப்பாளராக இவர்களால் பார்க்கப்படக் காரணமாகிறது என்பதும் இவை மூலம் தெளிவாகின்றது.

மூன்றாவது இந்நூல் மூலம் சந்தர்ப்பவாதிகள் தம்மை வளர்த்துக் கொள்ளக் கூறுகின்ற மாற்றத்திற்கும், ஒரு முற்போக்கான பொது முன்னேற்றத்தின் நோக்கில் முன்வைக்கும் மாற்றத்திற்குமுரிய வித்தியாசத்தைக் காட்டுவது அவரது கருத்தியல் சிந்தனையே. இந்நிலையில் சிவத்தம்பி தனது ஒவ்வோர் நிலைப்பாட்டையும் அதன் வியாக்கியானங்களையும் இன்றைய அறிவுலகு தந்த வெளிச்சத்திலேயே பார்த்துள்ளார் என்பதற்கும் இந்நூல் உதாரணமாக உள்ளது. மேலும் இதனால்தான் இந்நூலாசிரியர் தான் கடந்து வந்த பாதையில் விட்ட தவறுகளையும் (இந்த வெளிச்சம் தரும் பலத்தினாலேயே) ஏற்றுக்கொள்பவராகவும் நிற்கிறார்.

அதனால் தான் இந்நூலாசிரியர் பின்வருமாறு கேட்கிறார்.

"இந்தக் கட்டத்தில் இலக்கியப் பணி யாது? இன்று பிரத்தியட்சமாகவுள்ள அரசியல் நிகழ்வுகளையும் அவை ஏற்படுத்தும் உணர்வு நிலைகளையும் உள்ளது உள்ளவாறே ஏற்றுக் கொள்வதா? அன்றேல் அவற்றின் தோற்றம் வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்வதா? இப்பிரச்சினைகள் இல்லையென்பது போல் அவற்றைப் புறக்கணிப்பதா? இந்த நடவடிக்கைகளின் மனிதநிலை வேர்கள் யாவை? இவை பெற்றுள்ள உருவும் பொருளும் எந்த அளவுக்கு இயைபானவை? இந்த நடவடிக்கைகள் எவ்வாறு அத்துணைப் பிரபல்யத்தைப் பெறுகின்றன? இந்நடவடிக்கைகள் இருக்கும் சில அநீதிகளை இல்லாமல் ஆக்குவதற்கான போராட்டமா? அல்லது புதிய ஒரு சமுதாய முறைமைக்கான போராட்டமா? அதாவது இந்த நடவடிக்கைகளை எதிர்நிலை நடவடிக்கைகளாகக் கொள்வதா? அன்றேல் ஆக்கபூர்வமான ஒரு புதிய நிலைக்கான நடவடிக்கையாகக் கொள்வதா? இவை பற்றிக் குறிப்பிடும் இலக்கியங்கள் இப்புதிய சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் சக்திகளைச் சரிவர இனங்கண்டு கொண்டுள்ளனவா? (புதிய சவால்கள், புதிய பிரக்ஞைகள், புதிய எழுத்துக்கள்)




இத்தகைய கேள்விகளை இன்றுள்ள சகல கலை, இலக்கிய கர்த்தாக்களும் தம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றை உள்வாங்கி எதிர்கொள்வதற்கான சமூக அரசியல் தத்துவார்த்த பலமுள்ள கருத்தியல் முதிர்வு நம் எழுத்தாளர்களுக்குத் தேவை. இத்தேவையானது 'கருத்தியல்' என்ற போர்வையில் பல முற்போக்காளர்கள் அழுத்தும் கட்டுப்பெட்டித்தனங்களை நிராகரிக்கும் என்பது வெளிப்படை.

இதனால் தான் இந்நூலாசிரியர் பின்வருமாறு தனது முன்னுரையில் கூறுகிறார்.

"ஈழத்தில் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வரலாறும் அதன் சாதனைகளும் கூட, அந்த முற்போக்கு இலக்கிய இயக்கத்தினரால், பின்னர் வந்த கோச வாய்ப்பாடுகளால் மறுதலிக்கப்படும் ஒரு நிலைமையையும் 1980 - 2000 வரைக்காலப் பிரிவிலே காணக் கூடியதாக உள்ளது...... சமூகவியல் அறிவின்மையை மன்னிக்கலாம். தாம் எழுதியதைத் தாங்களே நிராகரிக்கும் அறியாமையை எவ்வாறு மன்னிப்பது, இது தனிப்பட்டவர்களின் அவலம் அல்ல. ஈழத்து முற்போக்கு இலக்கிய இயக்கம் அதற்குரிய தர்க்க ரீதியான வளர்ச்சியைப் பெறவில்லை என்பது தான் உண்மை."

***

இந்நூலிலே முன்னுரையோடு - முன்னுரையும் ஒரு கட்டுரைக்கான தாக்கத்தைக் கொண்டுள்ளது - 15 விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் கடந்த தசாப்தங்களில் ஈழத்தில் ஏற்பட்டு வந்த கலை இலக்கிய சமூக, அரசியல் மாற்றங்களையும் அவற்றின் போக்குகளையும் ஆய்வுக்கெடுப்பவையாக உள்ளன. இவற்றில் முக்கியமாக 'புதிய சவால்கள், புதிய பிரக்ஞைகள், புதிய எழுத்துக்கள்', 'ஈழத்து தமிழ் இலக்கியத்தில் முற்போக்குவாதத் தொழிற்பாடுகள்', 'உயிர்ப்புகளின் உயிரைத் தேடி', 'சேரனின் கவிதைகள் பற்றிய விமர்சனம்', 'இலங்கை அரசியற் சூழலில் தமிழ் தேசியம்', 'தலித், 'தலித் இலக்கியம் என்ற வகைப்பாடு இலங்கைக்குப் பொருந்துமா?', 'புலம்பெயர் தமிழர் வாழ்வு', இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும்' ஆகிய கட்டுரைகள் பல விஷயங்களை முன்வைப்பதோடு, வாசிப்பவரை பல்வகைச் சிந்தனை, எதிர்வினை போன்றவற்றுக்கும் ஆற்றுப்படுத்த வல்லனவாய் உள்ளன.

'தமிழ் தேசியம்' சம்பந்தமாக சிவத்தம்பி ஒரு வகை 'நழுவல்' போக்கையே கொண்டுள்ளார் என்பவர்களுக்கும் 'மார்க்சீயம் பற்றி அவருக்கிருந்த தெளிவுகள் ஆட்டங்கண்டு விட்டன' என பழைய அவரது அணியினர் (டொமினிக் ஜீவா போன்றவர்கள்) வைக்கின்ற குற்றச் சாட்டுகளுக்கும் முறையே 'இலங்கை அரசியல் சூழலில் தமிழ் தேசியம்', புதிய சவால்கள், புதிய பிரக்ஞைகள், புதிய எழுத்துக்கள்', 'ஈழத்து தமிழ் இலக்கியத்தில் முற்போக்குவாதத் தொழிற்பாடுகள்', 'தலித் இலக்கியம்' என்ற வகைப்பாடு' போன்ற ஆய்வுரைகள் பதில் அளிப்பனவாய் உள்ளன.

இவை நீங்கலாக இவர் ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசும்போது சில சரியான விஷயங்களை முன்வைக்கின்றார். எனினும், இவ்விலக்கிய முயற்சிகளின் பின்னின்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள் பற்றிக் குறிப்பிடும் போது, எல்லாவற்றுக்குள்ளும் இரண்டொரு தெரிந்த எழுத்தாளர்களையே திரும்பத் திரும்பச் சுட்டுகின்ற போக்கிலுள்ள தவறு பற்றி நாம் குறிப்பிட வேண்டும். உதாரணமாக அண்மைக் கால இலக்கிய கர்த்தாக்கள் பற்றிப் பேசும் போது தெணியான், ரஞ்சகுமார், உமா வரதராஜன், சேரன் ஆகியோர் பற்றி மட்டுமே குறிப்பிட்டுச் செல்லும் போக்கு அகன்ற ஆய்வுக்குரியதெனச் சொல்ல முடியாது. இவரது ஆய்வின் போதாமையின் வெளிப்பாடே இது.

'ஈழத்தில் தமிழ் இலக்கியம் - 1965 - 1989 கட்டுரை ஆழமான ஆய்வை உள்ளடக்கவில்லை என்றே கூற வேண்டும். இக்கால கட்டமே பல்வகைப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்ததோடு அவற்றிலிருந்து இன்னொரு கட்டத்தை நோக்கி முன்னகர்ந்த காலமுமாகும். இதற்குத் துணை புரிந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் யார், யார் என்பவை பற்றி கனதியான ஆய்வை மேற்கொண்டிருந்தால் மிக மிக வெவ்வேறு கருத்துடைய எழுத்தாளர்களின் பங்களிப்பும் அவற்றின் இயக்க ஓட்டங்களும் தெரிய வந்திருக்கும். இக்கட்டுரை இவை பற்றி கூறாமல் போனதற்குக் காரணம் இது ஒரு மேலோட்டமான கட்டுரையாக இருப்பதே என்றும் கூறலாம். இவ்வாறே 'அழகியல் மார்க்சீயமும் மார்க்சீய அழகியலும்' பற்றி பேசும் கட்டுரையும் பலவித போதாத் தன்மைகளோடு முடிவுறுகிறது. இவ்விஷயம் பற்றி ஏ.ஜே.கனகரத்தினா, றெஜி சிறிவர்த்தன ஆகியோர் சிந்தித்தவை பற்றி நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவை நீங்கலாக இந்நூல் பல மட்டங்களில் பல்வகைச் சிந்தனை ஓட்டங்களை ஊற்றெடுக்க வைத்து ஆற்றுப்படுத்துவதாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்நூலை வெளிக்கொணர முன்னின்ற மூன்றாவது மனிதன் வெளியீட்டாளரான எம்.பௌஸர் பாராட்டப்பட வேண்டியவரே.


**ஈழத்துத் தமிழிலக்கியத் தடம்**
**1980 – 2000**
**பார்வையும் விமர்சனங்களும்**

கார்த்திகேசு சிவத்தம்பி

வெளியீடு :மூன்றாவது மனிதன்,
இல.37/14,வொக்ஸ்வல் வீதி,
கொழும்பு-02

**விலை : 210.00**

# வருகைகள்




**அரசறிவியல் மூலதத்துவங்கள்**

அம்பலவாணர் சிவராஜா

வெளியீடு : குமரன் புத்தக நிலையம்
இல.201, டாம் வீதி,
கொழும்பு-12.

**விலை : 120.00**

அரசறிவியல் மூல தத்துவங்கள் இரண்டாம் பதிப்பு குமரன் வெளியீடாக வெளிவந்துள்ளது. அரசியல் திட்டமும் மாற்றமும் என்பதிலிருந்து சற்று மாறுபட்ட வடிவில் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. க.பொ.த உயர்தர மாணவர்களுக்கும், பல்கலைக்கழக முதல் வருட மாணவர்களுக்கும் விசேடமாக உதவும் பொருட்டு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு முதல்பதிப்பில் காணப்பட்ட சில குறைபாடுகளை தீர்க்கும் முறையில் வெளிவருகிறது எனவும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.




**பெண்ணியப் பார்வையில் திருக்குறள்**

செ.கணேசலிங்கன்

வெளியீடு : குமரன் புத்தக நிலையம்
இல.201, டாம் வீதி,
கொழும்பு-12.

**இந்திய விலை : 36.00**

இலக்கியத்தில் பெரும் படைப்புக்களைத் தந்த செ.கணேசலிங்கனின் பெண்ணியப் பார்வையில் திருக்குறள் வெளிவந்துள்ளது. அரசியல், பொருளாதார, சமூக, ரீதியில் ஆண் பெறும் உரிமைகள், வாய்ப்புக்கள் யாவும் பெண்களுக்கும் சமனாகக் கிட்ட வேண்டும் என்பதுடன் ஆணாதிக்க படிநிலை சமூக உறவுகளை உடைப்பதற்குமான இயக்கம். இவ்வாறான பெண்ணியக் கண்ணோட்டத்தில் அனைத்துப் பொருட்களும் கலை, இலக்கியங்கள், அறநெறிகள், சமூக, பண்பாட்டு விஷயங்கள் யாவும் ஆராயப்படுகின்றன. அவ்வாறு நோக்கும் போது திருக்குறளில் பெண்கள் பற்றி எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதே இந்த நூலில் நோக்கப்பட்டுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



# நிலாவின் இரு கவிதைகள்

## நீ வராத பொழுதுகளும் உனக்கான காத்திருப்பும்

பயங்கரம் மிகுந்த இரவும்
நிலவில்லாத அமாவாசை மேகமும்
கீச்சிடும் சில்வண்டுகளின் ஒலியும்
நாராசமாய் ஒலிக்கும் தவளையின் கத்தல்களும்
மனத்தில் பயத்தை வரவழைக்க
காத்திருந்தேன் உனது வருகைக்காக!

நீ வராத அந்தப் பொழுதுகளில்
அவன் வந்தான்!
பின் மற்றொருவன்!
அதன் பின் வேறொருவன்
அவன்கள் எனது நண்பர்கள் என்றில்லை
எனது உறவுகள் என்றுமில்லை
இலிங்கம் தரித்தவன்கள் - அந்த
இலிங்கங்கள் எனை நோக்கி
நிமிரும் கணத்தில் இறந்து போனேன் எனக்குள்ளே!

இவன்களின் வார்த்தைத் தெறிப்புகளின்
வக்கிரத்தில் நான் உறைந்து போன
அத்தருணத்தில் தான் தேடினேன்
உன் அரவணைப்பை!
நீயோ எனை மறந்து
எங்கோ தொலைந்து போனாய்
என் கனவு நண்பனே!

எனது இருப்பின் சொச்ச தருணங்களில்
வந்து போய்க் கொண்டிருப்பவர்களும்
முரண்பட்டு, கூறுபோட்டு
வாய்யாலம் காட்டி
வக்கிரத்தில் உறைய வைத்து
உறிஞ்சிக் குடிக்கிறார்கள்
எனது குருதியை!

அரக்கன்களின் பிடியில்
சிதறும் என் உணர்வுகளை
கூட்டி அள்ளி ஒன்றாக்கவும்
கழுகுக் கண்களின் காம ஒளி
என்னில் பட்டுத் தெறிப்பதை விலக்கவும்
தீமைகள் எனைத் தீண்டாமல் செய்யவும்
வா என் கனவு நண்பனே!
நீ வரும் தருணத்துக்காய் காத்திருக்கிறேன்
இன்றும் நான்!

## பூட்டிய கதவினை...

என்னை யாரும் அறிய முடியாது
வனத்திலிருக்கும் வண்ணாத்துப் பூச்சியையும்
துள்ளித் திரியும் கன்றுக் குட்டியையும்
மென்மையான மலர்களையும் தவிர!

முட்களில் வாழ்ந்து
முட்களினால் படரப்பட்டு
முட்களினால் பாதுகாக்கப்பட்ட நான்
கள்ளியின் மேல் பூத்திருக்கும்
பூப்போன்றவள்!

நான்கு சுவர்கள் சொல்லும்
என் தனிமை பற்றி
தனிமையின் துயரம் பற்றி
வாழ்தலின் வெறுமை பற்றி

நான்கு சுவருக்குள் கூட
உனது வக்கிரங்கள்
பூட்டிய கதவினை
உடைத்து எனைத் தாக்கும்.

எனது குளியலறை
சொல்லும் எனது கண்ணீரின்
அர்த்தத்தை!
காதலின் ஏக்கத்தை
விடைதராத வினாக்களை!

மிரட்டல்கள் தோய்ந்த
பகலின் தனிமையில்
நீ என்னிடம் கேட்பது
காதலையல்ல காமத்தை!
நான் உன்னிடம் வேண்டுகிறேன்
எனது சுதந்திரத்தை!
நிர்மலமான சுதந்திரத்தை!

# சூட்கேசில் பத்திரிகை சுமந்தபடி பயணித்தேன்!

நினைவுக் குறிப்புகள் - 11

இரண்டாவது தடவையாக நான் அங்கு போன போது தனியாகவே போனேன். அவரிடம் கொடுப்பதற்காக ஒரு கடிதம் என்னிடம் இருந்தது. எனது அனுபவக் குறைவினால் ஒரு முட்டாள்தனமான வேலையை அப்போது நான் செய்து விட்டேன். மத்திய தரவர்க்கத்துப் பழக்க வழக்கங்களுக்கேற்ப ஒழுங்காக வளர்க்கப்பட்டிருந்ததால், ஒருவருடைய அறைக்குள் கதவில் தட்டாமல் உள்நுழையக் கூடாது என்ற நம்பிக்கை என்னிடம் இருந்தது. நான் கதவில் மெதுவாகத் தட்டினேன். அங்கு எந்த ஆளரவமும் இல்லாத அமைதி நிலவியது. சிறிது நேரம் கழித்து நான் மீண்டும் தட்டினேன்.


இம்முறை எனது தட்டு சற்றுப் பலமாக இருந்தது. மீண்டும் அதே அமைதி. திரும்பவும் ஒரு முறை இன்னும் சற்றுப் பலமாகத் தட்டினேன். சிறிது நேரத்தில் லெஸ்லி என்னை ஒரு ஜன்னலினூடாகப் பார்த்து உள்ளே வருமாறு சைகை காட்டினார். சிறிது நேரம் தங்கிவிட்டுப் போவதற்காக வந்திருந்த விவியும் அங்கு இருந்தார். அங்கே ஒரு உதவியாளும் இருந்தார். அவர் தான் அனேகமாக கதவில் தட்டுபவர்களுக்கு மறுமொழி சொல்லுவார். ஆனால், அன்று அவர் சந்தைக்குப் போயிருந்தார். லெஸ்லியும் விவியும் இந்தத் தட்டுதலால் சற்று ஆடிப் போயிருந்தார்கள். (அது ஒரு பொலிஸ் உளவாளியாக இருக்குமோ என்ற பயத்தால் முதலில் மௌனமாக இருந்திருக்கிறார்கள். ஆனால், மீண்டும் தட்டப்பட்டதும் அவர்களது சந்தேகம் மேலும் வலுத்தது. இதனால் தான் லெஸ்லி வருவது வரட்டும். எதற்கும் ஒருமுறை எட்டிப் பார்த்து விடுவோம் என்று துணிந்து ஆபத்தை எதிர் நோக்கத் தயாராக ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்திருக்கிறார். என்னைக் கண்டதும், "தட்ட வேண்டாம்... பேசாமல் நேரடியாக உள்ளே வா" என்றார் அவர்.

கட்சியின் தலைமையிலிருந்தவர்களுள் டொறிக்கையும் பிறகு கொல்வினையும் அறிந்தளவுக்கு லெஸ்லியை அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குப் பெரிதாகக் கிடைக்கவில்லை. லெஸ்லியை சந்திக்கச் சென்ற எனது பயணங்கள் சுருக்கமானவையாகவும் கொஞ்சக் காலத்துக்கு மட்டுமே நீடித்தவையாகவும் இருந்தன. ஏனென்றால் அவர் சில நாட்களில் இந்தியாவிற்குச் சென்று விட்டார்.

ஆனால் விவி அவரது ஆர்வத்துடிப்பும் கவர்ச்சியும் காரணமாக யாருடைய மனதிலும் ஒருமுறை பார்த்தாலே பதிந்துவிடும் இயல்பு கொண்டவராக விளங்கினார்.

எனது அடுத்த நடவடிக்கை சட்டவிரோத அச்சகத்திற்குப் போவதாக இருந்தது. அச்சு இயந்திரம் மிகவும் சிறியது. கையாலும் காலாலும் கட்சியின் நம்பிக்கைக்குரிய ஒரு தொழிலாளியால் இயக்கப்பட்டு வந்தது. இந்தக் கதையில் பின்னர் வரவுள்ள முக்கிய பகுதி ஒன்றில் அவர் திரும்பவும் வருவார். நான் அவரை ஜி என்று அழைக்கிறேன். அவர் அங்கேயே தங்கியிருந்து வேலை செய்தார். அங்கே அச்சுக் கோர்க்கத் தேவைப்படும் வேளைகளில் இன்னும் ஒருவர் வந்து போவார். இந்த அச்சுயந்திரம் இயங்கும் போது ஒரு வித கிளாங்... கிளாங் ... என்ற ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது. இந்தச் சத்தம் அருகிலுள்ள வீடுகளுக்கு போவதைத் தடுப்பதற்காக அங்கே ஒரு கொண்டு திரிவதற்கு வசதியான 'கிராமபோனை' வைத்திருந்தார்கள். கூடவே ஒரு சில 'றெக்கோட்' தட்டுகளும் இருந்தன. அச்சியந்திரம் வேலை செய்யும் போது இந்த இசைத்தட்டுக்கள் போடப்படும் அவற்றுள் மிகவும் இனிமையான 'மே சுவீற் ஒப்லிவியன் லல்தீ....' என்ற மொன்ரோவேடியின் பழைய 'கொலம்பியா ஹிஸ்ரோறி ஒப் மியூசிக்' இன் பாடல் வரிசைகளில் ஒன்றாக வந்த பாட்டின் இசைத்தட்டும் இருந்தது. அச்சுக்கோர்ப்பவருக்கு இது ரொம்பவும் பிடிக்கும். அது மிகவும் இதமானது... வருடிக் கொடுப்பது போன்றது என்று அவர் சொல்லுவார். அச்சியந்திரம் வேலை செய்யும் வேளைகளில் எல்லாம் அது தான் அவரது முதலாவது தெரிவாக இருந்தது. அவருக்கு இயல்பாகவே நல்ல இசை சுவைத் தேர்வு இருந்தது.

அச்சகம் தொடர்பான எனது வேலை இரண்டு அம்சங்களைக் கொண்டது. பத்திரிகைக்கான எழுத்துப் படிமங்கள் தயாரானதும் அவற்றை அச்சுக் கோர்ப்பதற்காக எடுத்துச் செல்வேன். அவை அச்சடித்து முடிந்ததும் அவற்றை நான் வெளியே எடுத்துச் செல்வேன். அல்லது எடுத்துச் செல்ல ஒழுங்கு செய்வேன். ஒரு பத்திரிகைகள் அடங்கிய பாரமான சூட்கேஸ் ஒன்றுடன் திரிவதற்கு என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டேன். அப்போது, ஏர்ணஸ்ட் டி சிக்கேரா என்ற ஆங்கில பீடத்தில் இருந்த ஒரு இளம் விரிவுரையாளரை எனக்கு உதவுமாறு டொறிக் கூறியிருந்தார். ஏணஸ்ட் ஒரு மார்க்ஸிஸ்ட் அல்ல. ஆனால் அந்தக் காலத்தில் வாழ்ந்த சில ஆங்கிலம் படித்த புலமையாளர்களைப் போல அவருக்கும் லங்கா சமசமாஜக் கட்சியின் மீது ஓரளவு அனுதாபம் இருந்தது. அவர் கார் ஒன்றை ஓட்டி வருவார்.




தலைமறைவு வாழ்க்கை
றெஜி சிறிவர்த்தன

நாங்கள் இருவருமாக அச்சகத்திற்குப் போவோம். பேப்பர் அடங்கிய சூட்கேசை காரில் ஏற்றுவோம். பேப்பர் விநியோகிக்கப்பட வேண்டிய இடத்தில் அதனை கொண்டுபோய் இறக்கி விடுவோம்.

இந்தச் சட்டவிரோத கூட்டு நடவடிக்கை காரணமாக, அன்று வரை வகுப்பறையில் மட்டும் கண்டு தெரிந்த ஒருவராக இருந்த ஏர்ணஸ்ட்டுடன் நான் நட்பை வளர்த்துக் கொண்டேன். பைரனின் இயல்பைக் கொண்ட ஒரு ஏக்கம் அவரது முகத்தில் காணப்பட்டது. (அவருடைய இலக்கிய ஆர்வத்துக்குரியவர்களுள் பைரனும் ஒருவர்) ஆனால், இது வெறும் வெளித்தோற்றம் அல்ல. அவருடன் நெருங்கிப் பழகியபின் அவரது வாழ்க்கையில் மிகவும் ஆழமான ஒரு சோகம் இருப்பதை நான் தெரிந்து கொண்டேன். அவருக்கு பல்கலைக்கழகத்தில் படித்து வந்த ஒரு மாணவியுடன் காதல் தொடர்பு இருந்தது. அவளும் அவரைக் காதலித்து வந்தாள். ஆனால் அவள் ஏனோ திடீரென்று சுகயீனம் கண்டு இறந்து விட்டாள். அதுவும் ஏர்ணஸ்ட் நகருக்கு வெளியே சென்றிருந்த ஒரு சில நாட்களில் தான் இது நடந்தது.

**இந்த அவலம் அவர் மனதில் பெரிய காயத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் அவரைச் சந்தித்த போது அவர் அந்தக் காயத்திலிருந்து இன்னமும் முற்றாக விடுபடாதவராகவே இருந்தார்.**

அவர் திரும்பி வரும் வரை இது நடந்ததே அவருக்குத் தெரியாது. திரும்பி கொழும்புக்கு வரும் போது அவள் இறந்து அடக்கமும் செய்யப்பட்டிருந்தாள். இந்த அவலம் அவர் மனதில் பெரிய காயத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் அவரைச் சந்தித்தபோது அவர்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



## எஸ்.எம்.ஜி. எழுதும் "எனது பத்திரிகை உலக அனுபவங்கள்" தொடர்பான சில கருத்துக்கள்

# இரண்டு மணியங்களில் அவர் சொல்வது எந்த மணியத்தை?

– மு.சின்னத்தம்பி

சரிநிகர் இதழ் 209 இல் மூத்த பத்திரிகையாளர் திரு.எஸ்.எம். கோபாலரத்தினம் (எஸ்.எம்.ஜி.) அவர்கள் எழுதும் "எனது பத்திரிகை உலக அனுபவங்கள்" என்னும் தொடரைப் படிக்கக் கிடைத்தது. மகிழ்ச்சி. பாராட்டப்பட வேண்டிய நல்ல முயற்சி. ஒரு குறிப்பிட்ட முக்கியமான காலகட்டத்தில் யாழ்ப்பாணம் "ஈழநாடு" பத்திரிகையின் முக்கிய பொறுப்புகளில் இருந்தமையால் இக்கட்டுரையை எழுதும் தகுதியை அவர் வாய்க்கப் பெற்றவர் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

அவர், மேற்படி குறித்த தொடரில் குறிப்பிடுகின்ற சம்பவங்களில் நானும் நேரடியாக பங்குபற்றியவன் என்ற முறையில் சில தகவல் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதில் தவறில்லை என நினைக்கின்றேன். இன்னுமொரு முக்கியமான விடயமென்னவெனில் சம்பவங்கள் கூறும் போது, சூழலையும் சம்பந்தப்பட்ட மனிதர்களின் பொறுப்பு நிலையையும் விளங்கிக் கொள்வதற்காக சம்பவம் நிகழ்ந்த ஆண்டைக் குறிப்பிடுவதும் அவசியமானது என்பது எனது பணிவான அபிப்பிராயமாகும்.

முதலாவதாக கட்டுரைத் தொடரில் 'பீங்கிங் மணியம்" என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார். ஆனால் 1960 களில் எமது கட்சியில் இரண்டு மணியங்கள் இருந்தனர். ஒருவர் கே.ஏ.சுப்பிரமணியம் (இவரையே எஸ்.எம்.ஜி. கட்டுரையில் குறிப்பிடுகிறார்) மற்றவர் "இயக்கச்சி மணியம்" என்று அழைக்கப்பட்ட எஸ்.சுப்பிரமணியம். 1972 இல் கட்சி பிளவுபட்ட பொழுது முன்னவர் சண்முகதாசன் அணியிலும் பின்னவர் கார்த்திகேசு மாஸ்டர் அணியிலும் இணைந்து செயற்பட்டனர்.

இரண்டாவதாக அமெரிக்கத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்தின் போது கூழ்முட்டை எறிந்தவர்களில் மணியம் முதன்மையானவர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த எதிர்ப்பை ஒழுங்கு செய்த கட்சித் தலைவர்களில் மணியமும் ஒருவர். ஆனால் அவர் நேரடியாகப் பங்குபற்றவில்லை. வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்ட கண்மூடித்தனமான தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்கு எதிராக உலகம் பரந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஒரு அங்கமாகவே இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் அன்றூ வி.கொறிக்கு எதிரான ஆர்ப்பாட்டமும் கூழ்முட்டை வீச்சும் எமது கட்சி வாலிப அணியினால் மேற்கொள்ளப்பட்டது.

1968 ம் ஆண்டு யாழ் பொதுநூலகத்தில் அமெரிக்க நூலகப் பிரிவு ஒன்றை அவர் ஆரம்பித்து வைக்க வந்த பொழுதே இது நிகழ்ந்தது. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியையொட்டி, அப்பொழுது எமது கட்சி உறுப்பினரான கரவை கந்தசாமி (பிற்காலத்தில் புளொட்டின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவராக இருந்து சுட்டுக் கொல்லப்பட்டவர்) என்பவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார்.

மூன்றாவதாக பொலிசாரின் தடையை மீறி ஊர்வலத்திற்கு தலைமை தாங்கி, உதவி பொலிஸ் சுப்ரின்டென் லியனகேயின் தாடையை கொடிக்கம்பத்தால் அடித்து வீழ்த்தியவர் மணியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் தவறான தகவலே.

1966 அக்டோபர் 2ம் திகதி நடந்த தீண்டாமைக்கு எதிராக எமது கட்சி நடாத்திய முதலாவது ஊர்வலமே இங்கு குறிப்பிடப்படுகின்றது.

1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் அமைந்த ஐ.தே.க. தலைமையிலான கூட்டரசாங்கத்தில் தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன. இவ்வரசு பதவிக்கு வந்ததும் இக்கட்சிகளின் உயர்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பல்வேறு வகையான துன்புறுத்தல்களையும் தாக்குதல்களையும் தொடுக்க ஆரம்பித்தனர். அதற்கெதிரான எவ்வித நடவடிக்கையையும் பொலிஸார் (கூடுதலாக அப்பொழுது உயர்சாதி தமிழ் பொலிசாரே இருந்தனர்) எடுக்கவில்லை.

எனவே இந்த அநீதிகளுக்கெதிராக எமது (சீனசார்பு) கம்யூனிஸ்கட்சி சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் யாழ் முற்ற வெளி மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்றையும் ஏற்பாடு செய்தது. ஆனால் பொலிஸார் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்க மறுத்து விட்டனர். கட்சியின் பொதுச் செயலாளர் சண்முகதாசன் பொலிசாரிடம் நேரடியாகக் கேட்டும் கூட அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் தடையை மீறி ஊர்வலம் சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டது. ஊர்வலத்தை வி.ஏ.கந்தசாமி (கட்சியின் வடபிரதேச செயலாளர்) கே.ஏ.சுப்பிரமணியம், டாக்டர் சு.வே.சீனிவாசகம், டி.டி.பெரேரா( விவசாயிகள் சம்மேளன பொதுச் செயலாளர்) கே.டானியல், எஸ்.ரி.என்.நாகரத்தினம் (பின்னர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவராக இருந்தவர்) மு.முத்தையா முதலியோர் தலைமை தாங்கிச் சென்றனர். சுன்னாகம் பொலிஸ் நிலையம் அருகில் ஊர்வலம் சென்றதும் பொலிசார் தடுத்து நிறுத்தியதால் இருபகுதியினருக்கும் இடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் பொலிசார், ஊர்வலத்தில் சுலோகங்கள் எதுவும் எழுப்பாது இரண்டு இரண்டு பேராக யாழ்நகர் செல்ல அனுமதித்தனர். அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள் வாய்களை கறுப்புத் துணியினால் கட்டியவாறு யாழ்நகர் நோக்கி மௌன ஊர்வலமாகச் சென்றனர். அங்கு முற்ற வெளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீண்டாமைக்கெதிரான மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதுவே நடந்தது. மற்றும்படி பொலிஸ் அதிகாரி லியனகே மணியத்தால் தாக்கப்பட்ட சம்பவம் எதுவும் அங்கு நடைபெறவில்லை.

மூன்றாவது விடயம், 1969ம் ஆண்டு மேதின ஊர்வலம் பற்றியது. அப்பொழுது ஆட்சியிலிருந்த ஐ.தே.க. அரசு அந்த ஆண்டு மேதினமும் வெசாக் தினமும் ஒரே நாளில் வந்ததைக் காரணம் காட்டி மே 1ம் திகதி மேதினக் கூட்டங்கள், ஊர்வலங்களுக்குத் தடைவிதித்தது. இதை ஏற்றுக்கொள்ளாத எமது கட்சி சர்வதேசத் தொழிலாளர் தினத்தை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நினைவுகூரத் தீர்மானித்தது. கொழும்பில் அப்போது எமது கட்சி அங்கத்தவராக அருந்த கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.பண்டாரநாயக்கா தலைமையில் தடையை மீறி ஊர்வலம் நடந்தது. எஸ்.டி. உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் ஊர்வலத்தை நடைபெறாமல் தடுக்கும் நோக்குடன் அப்பொழுது வடபகுதி பொலிஸ் அதிபராக இருந்த சுந்தரலிங்கம் எமது கட்சி காரியாலயத்தை மேதினத்தன்று காலை சுற்றி வளைத்து, கட்சியின் வடபிரதேசச் செயலாளர் வி.ஏ.கந்தசாமியையும், தொழிற்சங்கப் பிரதிநிதி எஸ்.சிவதாசனையும் (இப்போது ஈ.பி.டி.பி. எம். பி.) பூகன்ஸ் வடிவுநாதன் என்பவரையும் கைது செய்து கிளிநொச்சிக்குக்கு கொண்டு சென்று அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விட்டனர். இருந்தும் திட்டமிட்டபடி மாலையில் ஊர்வலம் யாழ் நகரில் நடாத்தப்பட்டது. ஊர்வலத்தின் ஒரு கட்டத்தில் முற்றவெளிக்கு அண்மையில் கே.கே.எஸ். வீதியில் ஊர்வலம் மீது பொலிசார் குண்டாந்தடி கொண்டு தாங்கியதால் இருபகுதியினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. பொலிசார் குண்டாந்தடியால் தாக்க, ஊர்வலத்தினர் தமது கொடிக் கம்பங்களால் பதிலுக்குத் தாக்கினர். இதில் இரு பகுதியினருக்கும் காயம் ஏற்றபட்டது. இறுதியில் கட்சி முக்கியஸ்தர்களான கே.எ.சுப்பிரமணியம், எம்.எ.சி.இக்பால். கே.சுப்பையா, மரைக்காபர், அ.கௌரிகாந்தன் ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இருந்தும் பின்னர் கந்தர்மடத்தில் தனியார் காணியொன்றில் மேதினக் கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் குறிப்பிடப்பட வேண்டியது என்னவெனில் கட்டுரையாசிரியர் குறிப்பிட்டது போல ஊர்வலத்தினர் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என எஸ்.பி.சுந்தரலிங்கம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார் என்பது தவறானது என்பதே.

இன்னுமொரு விடயம் என்னவெனில் 1966 ஆண்டிலும் ஐ.தே.க. அரசு யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்திற்கு தடைவிதித்திருந்தது. அப்பொழுதும் எமது கட்சி தடையை மீறி மேதின ஊர்வலத்தை நடாத்தியதுடன் யாழ் முற்றவெளியில் மேதினக் கூட்டத்தையும் நடாத்தியது. இங்கு குறிப்பிடக்கூடியது. அப்பொழுது அவ்வூர்வலத்தை மணிக்கூட்டு வீதியில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் லியனகே தலைமையில் வழிமறித்த பொலிசார், பின்னர் ஊர்வலத்திற்கு முன்னால் ஜீப் வண்டியில் முற்றவெளி வரை சென்றார். இதை புகைப்படமெடுத்து தன் பத்திரிகையில் வெளியிட்ட கொழும்பு ஆங்கிலத்தினசரி ஒன்று "ஏ.எஸ்.பி.லியனகே தலைமையில சீனசார்பு கம்யூனிஸ்ட்டுக்கள் யாழ் நகரில் மேதின ஊர்வலம்" என கேலியாக தலைப்பிட்டு செய்தி பிரசுரித்தது. இருப்பினும் இவ் ஊர்வலத்தில் பொலிசார் எவ்வித இடையூறையும் செய்யவில்லை.

நான்காவது விடயம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் யாழ்ப்பாணம் விஜயம் பற்றியது. 1975ம் ஆண்டு ஜே.ஆர். எதிர்கட்சித் தலைவராக இருந்த போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார். இச்சந்தர்ப்பத்தில் ஐ.தே.க. யாழ் கிளை ஒரு பொதுக் கூட்டத்தை யாழ் முற்றவெளியில் ஏற்பாடு செய்தது.

இக்கூட்டத்தில் பேசிய ஜே.ஆர்., "மீண்டுமொருமுறை பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டால், நான் 1957 இல் செய்தது போல அதை எதிர்த்து மீண்டுமொரு முறை கண்டி

யாத்திரரை செல்வேன்" என்று கில்லாடித்தனமாகவும் . திமிர்த்தனமாகவும் கூறினார். அவ்வளவு தான். கூட்டத்தில் கூச்சல் குழப்பம் ஏற்படத் தொடங்கியது. குறிப்பாக ஸ்ரீமாவோ அரசு கொண்டு வந்த புதிய குடியரசு அரசியல் அமைப்பால் கொந்தளிப்பு நிலையிலிருந்த தமிழ் இணைஞர் சமுதாயம் கொந்தளித்து எழுந்தது. கூட்ட முகப்பில் நிறுவப்பட்டிருந்த அலங்காரச் சிகரம் கிழித்து விழ்த்தப்பட்டது. அலங்காரங்கள் பிய்த்தெறியப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கூட்டம் இடையில் நிறுத்தப்பட்டது. ஜே.ஆர். கூட்ட மேடையில் இருந்து பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார். யாழ் கோட்டையில் அமைந்திருந்த அரச மாளிகையில் (king House) சிறிது நேரம் ஒய்வெடுத்த ஜே.ஆர். இரவோடு இரவாக கார் மூலம் கொழும்பிற்புக்குச் சென்றார்.

**யாத்திரரை செல்வேன்" என்று கில்லாடித்தனமாகவும். திமிர்த்தனமாகவும் கூறினார். அவ்வளவு தான். கூட்டத்தில் கூச்சல் குழப்பம் ஏற்படத் தொடங்கியது. குறிப்பாக ஸ்ரீமாவோ அரசு கொண்டு வந்த புதிய குடியரசு அரசியல் அமைப்பால் கொந்தளிப்பு நிலையிலிருந்த தமிழ் இளைஞர் சமுதாயம் கொந்தளித்து எழுந்தது. கூட்ட முகப்பில் நிறுவப்பட்டிருந்த அலங்காரச் சிகரம் கிழித்து வீழ்த்தப்பட்து. அலங்காரங்கள் பிய்த்தெறியப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கூட்டம் இடையில் நிறுத்தப்பட்டது. ஜே.ஆர். கூட்ட மேடையில் இருந்து பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.**

இந்தக் கூட்டத்தைக் குழப்பியவர்கள் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினரும் அப்பொழுது யாழ்ப்பாண ஸ்ரீ.ல.சு.கட்சி அமைப்பாளராக இருந்த அல்பிரட் துரையப்பாவினுடைய ஆதரவாளர்களும் என தமிழரசுக் கட்சியனரும் ஐ.தே.கட்சியினரும் ஒரு பிரச்சாரத்தைக் கிளப்பிவிட்டாலும் உண்மையில் இக்குழப்பத்தில் கட்சியோ கே.ஏ.சுப்பிரமணியமோ எவ்வித த்திலும் பங்குபற்றவில்லை. (பங்கு பற்றியிருந்தாலும் தவறில்லை என்ற போதிலும் கூட)

மீண்டும் யாழ்ப்பாணம் வந்து பேசுவதாக ஜே.ஆர். கூறிச் சென்றாலும் அவர் மீண்டும் ஒரு போதும் வரவேயில்லை. ஆனால் அவர் அன்று தனக்கு நேர்ந்த அவமானத்துக்கான பழி தீர்த்தலைப் பின்னர் முழு தமிழ் சமுதாயத்தின் மீதும் தீர்த்துக் கொண்டார்.

1977 இல் பதவிக்கு வந்ததும் தமிழ் மக்களுக்கெதிராக முழு அளவிலான வன்செயல் ஒன்றைத் தூண்டியதுடன் அதன் பழியை இடதுசாரிக் கட்சியின் மேல் போட்டு அவற்றையும் தடை செய்தார். தமிழர்களைப் பார்த்து யுத்தம் என்றால் யுத்தம். சமாதானம் என்றால் சமாதானம்" எனச் சவால் விட்டதுடன் சொன்னபடியே தமிழ் மக்களின் மேல் முழு அளவிலான யுத்தம் ஒன்றையும் ஆரம்பித்து வைத்து வரலாற்றின் போக்கையே மாற்றி விட்டார்.

## வண்ணத்திலும் புதுமை! எண்ணத்திலும் புதுமை!!

நான் சரிநிகரின் நீண்ட நாளைய வாசகன். முகப்புப் பக்கத்தில் கறுப்பு வெள்ளையில் அது படங்களூடாகவும் வடிவமைப்பினூடாகவும் வெளிப்படுத்திய எண்ணங்களைக் கண்டு பிரமித்திருக்கிறேன். அந்த வகையில் சரிநிகரின் வடிவமைப்பாளர் பாராட்டுக்குரியவர்.

பின்னர் வண்ணத்தில் வருவதாக அறிந்ததும் என்மனக்கண் முன்னே ஏற்கெனவே வண்ணத்தில் வந்து கொண்டிருந்த சில பத்திரிகைகளின் முகப்புத் தான் ஞாபகத்திற்கு வந்தது. அதனால் வண்ணம் தேவையில்லை என்றும் சரிநிகருக்கு அறிவித்திருந்தேன். ஆனால் இப்போது வண்ணத்தினாலான சரிநிகரைப் பார்க்கிற போது வண்ணத்தை எவ்வளவு அர்த்த புஷ்டியுடன் பயன்படுத்தலாமென்று புரிகிறது. சரிநிகர் உள்ளடக்கத்தில் மட்டுமல்ல வண்ணத்திலும் தனக்கான ஒரு தனிப்பாணியை உருவாக்கிக் கொண்டுள்ளது. உதாரணமாக ஜே.வி.பி. பற்றிய ஒரு கட்டுரையின் தலைப்பில் 'ஜே.வி.பி. கோஷத்தில் சிவப்பு கொள்கையில் கறுப்பு' என்ற வாக்கியத்தில் என்ற சொல் சிவப்பு நிறத்திலும் கறுப்பு என்ற சொல் கறுப்பு நிறத்திலும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இது நுணுக்கமான ஒரு வேலைப்பாடு.

மற்றையது தேர்ந்தெடுக்கும் படங்கள். கட்டுரைகள் வெளிப்படுத்தும் விடயங்களுக்கு வலுச்சேர்க்கும் படங்களை தேர்ந்தெடுத்து வெளிப்படுத்துவதென்பது ஒரு தனிக்கலை. பிந்துனுவெவவில் கொல்லப்பட்ட இளைஞர்களுடைய படங்களை நான் வேறெந்தப் பத்திரிகையிலும் பார்த்ததில்லை. மலையகத்தில் மாதவன் என்ற இளைஞனின் வீடு தாக்கப்பட்டு கொல்லப்பட்ட படங்கள் வேறெங்கும் வெளியாகவில்லை. அக்கரைப்பற்று பள்ளிவாசலில் பொலிஸாரின் வெறியாட்டங்கள் குறித்த படங்கள் வேறெங்கும் காணக்கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களுடைய புகைப்படங்களை எடுப்பதென்பதே சாத்தியமில்லாத நேரத்தில் அவையும் சரிநிகரில் வெளியாகியிருந்தன. (இதில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். பெண்களுடைய கவர்ச்சிப் படங்களை முன்பக்கத்தில் பிரசுரித்து பணம் பண்ணும் பத்திரிகைகளிடையே, பல்வேறு துறைகளில் ஆளுமையுடைய பல பெண்களின் படங்களை முன்பக்கத்தில் பிரசுரித்து அவர்களுக்கு ஒரு கௌரவம் கொடுத்திருக்கிறது. இதில் மாற்றுப் பத்திரிகை என்பதை சரிநிகர் மீண்டுமொரு முறை நிரூபித்திருக்கிறது.) இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஒரு சம்பவம் மட்டக்களப்பில் நடந்தாலென்ன, திருமலையில் நடந்தாலென்ன மலையகத்தில் நடந்தாலென்ன அவற்றிற்குரிய படங்கள் சரிநிகரில் இருக்கும். அதே நிறையச் செய்திகளைச் சொல்லி விடும். வாரப் பத்திரிகைகளில் வண்ணத்தில் ஒரு புதுமையை சரிநிகர் செய்து வருகிறது. அந்த வகையில் அது பாராட்டுக்குரியதும் முன்மாதிரியானதுமாகும்.

- எம்.ஐ.ஏ.ஸாகிர், புத்தளம்.

## சிங்களத்திலிருந்தும் மொழி பெயர்க்குக!

சிங்கள மொழியிலிருந்து சிறந்த படைப்பாளர்களையும் சிறந்த படைப்புக்களையும் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தது சரிநிகர். அண்மையில் பிரசன்ன விதானகே என்கிற திரைப்பட நெறியாளர் நெறியாள்கை செய்த 'பௌர்ணமி நிலவில் ஒரு மரணம்' என்ற திரைப்படம் தடை செய்யப்பட்ட செய்தியை தினப்பத்திரிகை வாயிலாக அறிய முடிந்தது. ஆனால் அந்தத் திரைப்படம் எது பற்றியது. நெறியாளர் அத்திரைப் படத்தைப் பற்றி என்ன சொல்கிறார் என்கிற விடயங்களைப் பூரணமாக அறிந்து கொண்டது சரிநிகரில் தான்.

அதேபோல ராவய பத்திரிகையில் எழுதிவரும் மஞ்சுள வெடிவர்த்தனவின் சிறுகதைத் தொகுப்பு தடை செய்யப்பட்டதும் அது பற்றிய விளக்கமான விபரங்களைச் சரிநிகரில் தான் பார்க்க முடிந்தது. இதேபோல் பெண் திரைப்பட நெறியாளரான அனோமாவுடனான நேர்காணல், அண்மையில் சிங்களத்தில் பிரபலமான நாவலான 'அங்கிலி கணின அங்கிலி துடு என்ற நாவலாசிரியர் கவிந்த ஜயசேகரவுடனான நேர்காணல் என்பனவும் மிகவும் பிரயோசனமான பகுதிகளாகும். சிங்களத்தில் வாசிக்க முடியாத, ஆனால் சிங்களப் படைப்பாளிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என அறிய விரும்பும் என்னைப் போன்றவர்களுக்கு அப்பகுதி மிகவும் பிரயோசனமானதாகும்.

Funny Boy என்கிற ஆங்கிலத்தில் மிகவும் பிரபலமான நாவலைத் தமிழில் மொழி பெயர்க்கிறீர்கள். நல்ல முயற்சி. இதேபோல் சிங்களத்தில் இருந்து சில சிறப்பான நாவல்கள், சிறுகதைகள், கவிதைகளைத் தமிழில் மொழி பெயர்த்து சரிநிகர் வாசகர்களுக்காகத் தரலாம் அல்லவா?

- என்.ரவிசங்கர், வவுனியா.

## சூட்கேசில் ... ... ...

அந்தக் காயத்திலிருந்து இன்னமும் முற்றாக விடுபடாதவராகவே இருந்தார். நான் ஏர்ணஸ்ட்டுக்கு இரண்டு காரணங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். ஒன்று எங்கள் பத்திரிகை விநியோகம் முடிந்ததும் அவர் என்னை கிளப் ஒன்றுக்கு (20th century club) அழைத்துச் செல்வார். அங்கே அவர் எனக்கு பியர் அருந்தக் கற்றுக் கொடுத்தார். அடுத்தது அவர் பைரனின் கடிதங்களையும் எழுத்துக்களையும் எனக்கு அறிமுகம் செய்தார். (பைரனின் கவிதைகளை நான் முன்னமே அறிவேன். அவற்றை நான் விரும்பவும் செய்தேன்) இவை எனது வாழ்க்கையில் நிலையான மகிழ்வையூட்டிய விடயங்களில் ஒன்று எனலாம். எப்படியோ அச்சகத்தை அடிக்கடி இடம் மாற்ற வேண்டிய இருந்தது. யுத்தகால பாதுகாப்பு செயற்பாடுகளின் கெடுபிடி காரணமாக இது நடந்தது. கடைசியாக அதைக் கொழும்புக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டி வந்தது. இதனால் நான் பஸ்ஸில் நீண்டதூரம் பயணம் செய்து பத்திரிகையைக் கொண்டுவர வேண்டியிருந்தது. ஒருநாள், எனக்கு நல்ல ஞாபகம். பஸ் மிகவும் நெரிசலாக இருந்ததால், நடத்துனர் எனது சூட்கேசை பஸ்சின் மேலுள்ள பொதிகள் போடும் இடத்தில் போடும்படி வலியுறுத்தினார். சூட்கேசை வாங்கி மேலே ஏற்றும் போது, அது அவர் சற்றும் எதிர்பார்க்காதளவு பாரமாக இருப்பதைக் கவனித்து விட்டு என்னிடம் 'சரியான பாரம்' என்றார். நான் ஓமோம். என்னுடைய எல்லாப் புத்தகங்களும் அதில் இருக்கின்றன' என்று சொல்லிச் சமாளித்தேன். சூட்கேசில் அன்று நான் போட்டிருந்த பூட்டு அவ்வளவு நல்லதல்ல. நான் எனக்குள் என்னை ஒரு திரைப்படப் பாத்திரமாக யோசித்தேன். பூட்டுக் கழன்று அதிலிருந்த சட்டவிரோதப் பத்திரிகைகள் எல்லாம் பஸ் ஓட ஓட கிராமத்து தெருக்களில் வீசப்பட்டுச் செல்வதாக ஒரு காட்சி என் கற்பனையில் விரிந்தது. ஆனால், அப்படி எதுவும் ஒருபோதும் நடக்கவில்லை.

[வரும்]

## பாடசாலை மாணவர்கட்கான சிறுகதை, கவிதைப் போட்டி

பாடசாலை மாணவர்களின் படைப்பிலக்கிய ஆளுமைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சரிநிகர் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்.

முதற்பரிசு ரூபா 1500
இரண்டாம் பரிசு 1000
மூன்றாம் பரிசு 500

போட்டி விதிகள்:

1. ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களின் சொந்த ஆக்கமாக, இதற்கு முன் எங்கும் வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.

2. ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரால் உறுதி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. கதைகள் புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் ஆறு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.

4. போட்டி முடிவுத் திகதி ஜனவரி 15,2001

5. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

6. அனுப்பப்படும் படைப்புகளில் பெயர் எழுதப்படாமல், தனியான தாளில் பெயர் விபரம் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**ஆசிரியர்**
சரிநிகர்
இல: 19/04, 01/01, நாவல வீதி,
நுகேகொடை.

**பாடசாலை விடுமுறை காரணமாக முடிவுத் திகதியை பின்போடுமாறு பல ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க முடிவுத் திகதி ஜனவரி 15ற்குப் பிற்போடப் பட்டுள்ளது.**

## அதற்கும் காரணம் நீங்கள் தானா?

சரிநிகர் இதழ் 213ல் ஐயப்பதாசனின் நானே புராணம் பார்த்தேன். டக்ளஸ்ஸுக்கு அமைச்சர் பதவி வாங்கிக் கொடுத்தது நானே எனக் கூறும் ஐயப்பதாசன் அமைச்சர் டக்ளஸ் பாராளுமன்றத்தில் கை உயர்த்துவதற்கும் நானே காரணம் இலங்கையில் அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என்பன தொடர்ந்தும் அமுலிலிருப்பதற்கும் நானே காரணம். நாகர் கோயிலிலும், நவாலியிலும், புதுக்குடியிருப்பிலும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கும் நானே காரணம் என்று கூறுவாரா?

ஐயா ஐயப்பதாஸன் அவர்களே நீங்கள் வேண்டுமானால் சந்திரிகாவுக்குப் பிடித்த கடலைவடை சுட்டு ஒரு தங்கத்தாம்பாளத்தில் கொண்டு போய் அம்மையாரின் பாதாரவிந்தங்களில் வைத்து பூசை செய்யுங்கள். ஆனால் சாதாரண தமிழ் மக்களுக்கு உங்கள் சேவையும் தேவையில்லை. உங்களால் கிடைத்ததாக நீங்கள் சொல்கின்ற அமைச்சர் பதவியும் தேவையில்லை. இன்று தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் நிம்மதியான வாழ்க்கையே. அதை உருவாக்க உங்களால் முடியுமா. முடிந்தால் செய்யுங்கள்!

-பரமேஸ், யாழ்ப்பாணம்

## சரிநிகர் எப்போதும் சரிநிகர் தான்

சமீபத்தில் ('தமிழ்இனி'க்குப்பின்) "சரிநிகர்" பார்த்த போது நியாயமானதொரு பயம் என்னைத் தொற்றிக் கொண்டது. ஏனென்றால் சரிநிகரின் முன் பக்கம் வர்ணமடித்த படங்களுடன் காணப்பட்டது தான். என்ன ஏனைய மாயைப் பத்திரிகையின் வியாபாரத்தனம் சரிநிகருக்கும் கடத்தப்பட்டு விட்டதோ என்கிற ஒரு அவசத்தோடு பத்திரிகையைப் புரட்டி, பின் தெளிந்தேன். சரிநிகரின் நேர்த்தியில் வர்ணமடித்த முதல் பக்கம் எவ்வித ஆளுமையையும் செலுத்தவில்லை என்பதை உணர்ந்தேன். இப்போதெல்லாம் சரிநிகரின் வாசித்தலின் அங்கீகாரப்பரப்பு வியாபித்துள்ளது தெரிகிறது. பல்கலைக்கழக மாணவர்களிலிருந்து பாடசாலை மாணவர்கள் வரையிலாக அது ஆரோக்கியமான சமூகத்தின் அடிப்படையான செயற்பாடு.

இப்போது எனக்கு ஒரு நம்பிக்கை உண்டு. அது சரிநிகரின் செயற்கைத்தனமான மாயை எப்போதும் தொற்றாது என்பதும், அதனுடைய ஆரோக்கியமான மாற்றிலக்கிய பண்பு மாறாது என்பது தான் அது.

பெண்களை வியாபாரக் கருவியாக பயன்படுத்தி, சம்பாதித்துக் கொண்டிருக்கிற இன்றைய மாயை பத்திரிகைகளிலிருந்து முற்றிலுமாக விலகி "பெண்கள்" சார்ந்த பார்வையில் மிக கனதியான வீச்சோடு நிற்கிற பத்திரிகை சரிநிகர் தான்.

ஏ.எம்.குர்ஷித், மருதமுனை

**வாசகர்களுக்கு ஒரு அறிவித்தல்:**
**அடுத்த சரிநிகர் - இதழ் (216) ஜனவரி 7 இல்**

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல 19|04, 01|01, நாவல வீதி, நுகேகொட

தொலைபேசி, தொலைமடல் 074400045

**மின்னஞ்சல்** :sarini@sltnet.lk


## நான்காவது காலடி!

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய வாசகர்களுக்கு,

வணக்கங்கள்!

இந்த வருடத்திற்கான இறுதி இதழ் இது.!

ஒரு மகிழ்ச்சியான செய்தியுடன் 2000ஆம் ஆண்டை முடித்து வைத்து வெளிவருகிறது இவ்விதழ்!

ஆம்.! 2001வது ஆண்டில் தனது பதினோராவது வயதை எட்டவிருக்கும் சரிநிகர் இந்த 215வது இதழுடன் தனது நாலாவது காலடியை எடுத்து வைக்கிறது!

ஆமாம்!.உங்கள் அன்புக்குரிய சரிநிகர் இந்த இதழிலிருந்து தனது நாலாவது காலடியை ஒரு புதிய தளத்தில் எடுத்து வைக்கிறது என்பதைப் பெருமையுடன் அறியத்தருகிறோம். இந்த இதழுடன் அது உங்களை பத்திரிகை வாயிலாக மட்டுமன்றி இணையத்தளத்தினுடாகவும் சந்திக்க வருகிறது.இந்த இதழை நீங்கள் சரிநிகரின் இணையத் தளத்திலும் (sarinihar.com)பார்க்க முடியும்.

1990இல் அது தனது முதலாவது காலடியை எடுத்து வைத்த போது ஒரு மாதாந்த இதழாக தன் பயணத்தை ஆரம்பித்தது.

உண்மையை உரைப்பதற்கும் உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்கும் தமிழில் ஒரு பத்திரிகை இலங்கையில் இல்லையே என்ற குறையை நிறைவு செய்வதாய் அதன் வரவு அமைந்தது. நாட்டின் அரசியல் நெருக்கடியின் அதிகரிப்பும், மக்களின் உரிமைக்காகக் கொடுக்கப்பட வேண்டிய சரிநிகரின் குரல் இன்னமும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற தேவை பலராலும் உணரப்பட்டதும் காரணமாக 1993ல் அது இருவாரங்களுக்கொருமுறை இதழாக தனது இரண்டாவது காலடியைப் பதித்து உங்கள் முன் நடைபோட்டது. இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மாற்றுப் பத்திரிகை வரலாற்றையே உருவாக்கி வைத்த சரிநிகர் பலத்த நிதி நெருக்கடிகயையும், அரசியல் நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட போதும் வாசக அன்பர்களதும் ஆதரவாளர்களதும் உதவிகளால் இன்றுவரை தனது கடமையை ஆற்றிவர முடிந்திருக்கிறது தமிழ் அரசியற் சூழலில் சமாதானம்,ஜனநாயகம்,அரசியல் உரிமை என்பன குறித்த தீவிரமான கருத்தாடல்களும் விவாதங்களும் நடாத்தப்பட வேண்டிய ஒரு தேவை முன்னைப்போதையையும் விட இப்போது அதிகரித்திருக்கிறது என்பதாலும் அதன் காரணமாக சரிநிகர் மேலும் அதிகளவிற் செயற்பட வேண்டியிருப்பது உணரப்பட்டதாலும் பலத்த நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் கடந்த செப்டம்பர் மாதம் முதல் தனது பத்தாவது ஆண்டில் தனது மூன்றாவது காலடியை முன்வைத்து வார இதழாக உங்கள் முன் வரத்தொடங்கியது.

கடந்த பத்தாண்டுகாலம் முழுவதும் உங்களது ஒத்துழைப்பாலும் ஆதரவாலும் சரிநிகர் தனது பெயருக்கேற்ற விதத்தில் சரிநிகராக, ஒரு பத்திரிகைக்குரிய கடப்பாட்டுடனும், பொறுப்புடனும் செயற்பட்டு வந்துள்ளது. உண்மைக்காகவும், நியாயத்துக்காகவும் அது இடையறாத உறுதியுடன் செயற்பட்டுவந்துள்ளது,வந்துகொண்டிருக்கிறது.

தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் உரிமைக் குரலாகவும், அவர்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டத்திற்கு ஆதரவாக ஓங்கிக் குரலெழுப்பும் உறுதியான சகாவாகவும் அது செயற்பட்டு வந்துள்ளது, வந்துகொண்டிருக்கிறது.

இந்த நாட்டின் ஒடுக்கப்படும் மக்களின் குரலாக, ஜனநாயகம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், மனித உரிமைகள் என்பவற்றிற்காக போரிடும் உறுதி குலையாத போராளியாக அது செயற்பட்டு வந்துள்ளது, வந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பணியில் இது தொடர்ந்தும் செயற்பட்டு வர வேண்டுமானால் அதற்கு இன்னும் அதிகமான ஆதரவை தமிழ் முஸ்லிம் மலையக அன்பர்கள் தந்துதவ வேண்டும். எந்தக் காலத்திலும் சரிநிகர் தனது சொந்தக்காலில் நிற்பதற்கேற்ற பலத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவே அது தனது கடமையைச் சிறப்புற ஆற்ற முடியும் என்று கருதுகிறது.

இதை நோக்கமாகக் கொண்டு சரிநிகர் தனக்கென ஒரு நிதியத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. நிதியத்துக்கான நிதிசேகரிப்பு வேலைகளிலும் ஒருசில அன்பர்கள் இறக்கி விடப்பட்டுள்ளார்கள். இந்த நிதியத்துக்கு தமிழ், முஸ்லிம், மலையக அன்பர்கள் தம்மாலியன்ற அளவுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். சரிநிகரின் வளர்ச்சிக்காக பணமாகவோ பொருளாகவோ மட்டுமன்றி வர்த்தகர்கள் விளம்பரங்களைத் தந்துதவுவதன் மூலமும் சரிநிகருக்கு உதவ முடியும்.

வாசகர்கள் ஒவ்வொருவரதும் சரிநிகர் இது. இதைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரதும் பொறுப்பல்லவா?

### வன்னியிலிருந்து ஒரு கடிதம்:

## - வரியிலிருந்து எம்மை விடுவியுங்கள்!

யுத்தம் எல்லாச் சுமைகளையும் மக்கள் மேல் திணித்து விடுகிறது. அரசாங்கம் ஜி.எஸ்.ரியை அறிமுகப்படுத்தியது அந்த ஜி.எஸ்.ரியால் பாதிக்கப்பட்டவர்கள் மக்களே தவிர வர்த்தகர்களல்ல. யாழ்ப்பாணத்துக்குப் பொருட்களை அனுப்ப கப்பல் கொம்பனி பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குக் பொருட்கள் கொண்டு வருவதற்கான செலவை விட அதிக தொகையை அறவிடுகிறது. அதனையும் செலுத்த வேண்டியிருப்பது தமிழ் மக்களே.

இங்கே பாருங்கள், வவுனியாவில் தமிழ் குழுக்களின் வரி அறவீடுகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்று கொதித்துப் போய் இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா அரச அதிபருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டள்ளது .

அந்தக் கடிதத்தின் ஒரு பிரதி சரிநிகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்திலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

வவனியாவில் தமிழ்க் குழுக்களின் வரி அறவிடல் எல்லையில்லாமல் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதிகமாக இதற்குப் பலியாவோர் வன்னி வாழ் மக்களே. இந்த விடயங்களை அறிந்திருந்தும் எவரும் வெளிப்படுத்துவதில்லை. வெளிப்படுத்தப் பயம். எனவே இதனைத் தங்களிற்கு முழுமையாக அறியத் தருகின்றோம்.

வன்னிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் பார ஊர்திகள் ஒவ்வொன்றிற்கும் புளொட் அமைப்பு ஆறாயிரம் ரூபாவை பார ஊர்திகள் சங்கம் ஊடாகப் பெற்றுக் கொள்கின்றது,

ரெலோ நேரடியாகவே மூவாயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்கின்றது, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணியினா இரண்டாயிரம் ரூபாவை அறவிடுகின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதரணி ஆயிரம் ரூபாவை வாங்குகின்றது.

அத்துடன் சீனி மூடை ஒன்றிற்கு பதினைந்து ரூபாவையும், ஒரு பரலிற்கு நூறு ரூபாவையும் வாங்குகிறது.

புளொட் அமைப்பு பரலிற்கு இருநூறு ரூபாவை வாங்குவதுடன், கூட்டுறவுச் சங்க வாகனங்களை அவர்களின் தேவைகளுக்கு எடுத்தும் ஓடுகின்றனர்.

பாரஊர்திகளை வழங்க மறுத்தால் பிக்கப்பில் ஏற்றிச் சென்று உழக்குவதாக அச்சுறுத்துகின்றனர். இந்தவகையில் கிளிநொச்சி, பரந்தன் பகுதி கூட்டுறவுச் சங்க வாகனங்களை அவர்கள் எடுப்பது எடுத்துக் காட்டாகும். இந்நிலை காரணமாக கொள்வனவு உத்தியோகஸ்தர்மாரும், சாரதிகளும் அச்சமடைந்த நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கூட்டுறவுச் சங்க வாகனங்களை இராணுவத்தினரும் தொடர்ந்து எடுத்துப் பாவித்து வருகின்றனர். ஆகவே இது மக்கள் சொத்து என்ற வகையில் இங்குள்ள தமிழ் குழுக்களுடனும், இராணுவத்தினருடனும் தாங்கள் கதைத்து இப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வினை எடுத்தால் பேருதவியாக இருக்கும்... என்று அக்கடிதம் தொடர்கிறது.

சரி, இது தொடர்பாக அரசாங்க அதிபர் என்ன சொல்கிறார். தமிழ்க் குழுக்கள் என்ன சொல்கின்றன?

## புலிகளுக்கு உதவினால் சுடுவேன்!

திருநெல்வேலி கண்ணன் லொட்ஜ் உரிமையாளரான வைத்திலிங்கம் லோககுமார் என்பவர் வடமராட்சியைச் சேர்ந்த சோதிராஜ் நிசாந்தன் என்பவரை பிஸ்டல் முனையில் கடத்திச் சென்று அறையொன்றினுள் பூட்டி வைத்துக் கடுமையாகத் தாக்கியுள்ளார். அத்துடன் நீ புலிகளுக்கு உதவி செய்பவன் புலிகளுக்கு உதவி செய்தால் உன்னைச் சுட்டு விடுவேன் என மிரட்டியுள்ளார். இச்சம்பவம் நவ.28 அன்று நடைபெற்றது. பின்னர் இவரிடமிருந்த மூன்று பவுண் சங்கிலியையும் அபகரித்துக் கொண்டு யாராவது கேட்டால் உன்னை இராணுவந்தான் தாக்கியது என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் உன்னைச் சுட்டு விடுவேன் எனவும் மிரட்டியுள்ளார். பின்னர் தாய் தந்தையரிடம் சென்று உங்கள் மகனை இராணுவம் பிடித்து வைத்திருக்கிறது அச்செழு முகாமுக்கு வாருங்கள் விடுவித்துத் தருகிறேன் எனக் கூறி பெற்றோரை அழைத்து வந்து மகனையும் அழைத்து வந்து அச்செழுமுகாமில் வைத்து விடுவிப்பது போல் நாடகமாடியுள்ளார். அத்துடன் கால் பவுண் சங்கிலி ஒன்றையும் இது தான் இராணுவத்தினர் தந்த சங்கிலி எனக் கூறி பெற்றோரிடம் கையளித்துள்ளார்.

இப்போது நிசாந்தன் இரு கைகளையும் மேலே உயர்த்துவதற்குக் கஷ்டப்படுகிறார். அத்துடன் சாப்பிடவும் கஷ்டப்படுகிறார்.

நிசாந்தனைக் கடத்திச் சென்று தாக்கியவர் ஒரு முன்னாள் புலி உறுப்பினர் எனவும், இவர் இப்போது இராணுவத்துடன் இணைந்து செயற்படுபட்டு வருகிறார் என்றும் பின்னர் தெரிய வந்தது.


*

**விழிப்பும் தேசிய கிறிஸ்தவ மன்றமும் இணைந்து நடாத்தும்**

**நத்தார் சமாதான நிகழ்ச்சி**

டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்



**செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்**

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன்; 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 14.12.2000